இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 207 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 25 – வெள்ளிக்கிழமை 08 மார்ச் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 207 : Thiruvalluvar Year - 2055 - Maasi 25 - Friday 08 March 2024 - Dak 12 Pages ₹ 5.00

# இனமானப் பேராசிரியர் 4ஆம் ஆண்டு நினைவுநாள்: தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை !



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முன்னாள் நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களின் நினைவு நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

## “பேராசிரியர் என் நெஞ்சில் என்றும் நீங்காதிருப்பார் ! அவர் தம் கொள்கைப் பெருவாழ்வு நம்மை வழி நடத்தும் !”

### நினைவு நாளில் பேராசிரியருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, மார்ச் 8-**

**இனமானப் பேராசிரியர் அவர்களின் 4ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று (7.3.2024) கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில், “பேராசிரியர் என் நெஞ்சில் என்றும் நீங்காதிருப்பார் எனவும், அவர் தம் கொள்கைப் பெருவாழ்வு நம்மை வழி நடத்தும்” என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இனமானப் பேராசிரியர் அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

**குலையா உறுதி, அசையாக் கொள்கை, தாழா மானம், மங்கா உணர்வு, மாறா நட்பு, மறையாப் புகழ் என இனி வரும் இயக்கத்து இளைஞர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாய் வாழ்ந்த இனமானப் பேராசிரியர் நினைவுநாள்!**

**கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. காலம் முதல் பொதுக்குழுவில் என்னைக் கழகத் தலைவராக அறிவித்தது வரை என் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அவர் நிறைந்திருக்கிறார். என் நெஞ்சில் என்றும் நீங்காதிருப்பார்! அவர்தம் கொள்கைப் பெருவாழ்வு நம்மை வழிநடத்தும்!**

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

## பெரியார் - அண்ணா - கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசு

# பெண்களின் சமூக மேம்பாட்டை உறுதி செய்ய தீட்டி வரும் உன்னதத் திட்டங்கள்!

## உலக மகளிர் நாள் வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, மார்ச் 8-**

**உலக மகளிர் தினத்தையொட்டி கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், “தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது வழியில் செயல்படும் எனது தலைமையிலான திராவிட மாடல் அரசிலும், பெண்களின் சமூக பொருளாதார விடுதலையை, மேம்பாட்டை உறுதி செய்வதற்கான பல உன்னதத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்” என பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உலக மகளிர் நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:–

மகளிருக்கான உரிமையை நிலைநாட்டியதில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு, நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது.

திராவிட இயக்கத்தின் அறிவாசான், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு உரிமை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பெண்கள் முன்னேற்றத்திற்கு அண்ணா – கலைஞர் தீட்டிய திட்டங்கள்!

அவர் வழியில் வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்தவுடன், சுயமரியாதைத் திருமணத்திற்கு அங்கீகாரமளிக்கும் சட்டத்தை அவர் நிறைவேற்றினார்.

பேரறிஞர் அண்ணாவுக்குப் பின்னர் முதலமைச்சரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்குவதற்கான சட்டத்தை நிறைவேற்றினார்.

அதுமட்டுமின்றி, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு கைம்பெண் மகளிர் மறுமண நிதி உதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், அன்னை தெரசா அம்மையார் நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம், கைம்பெண்களுக்கும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் முதியோர் உதவித் தொகை, 50 வயது கடந்து திருமணமாகாமல் வறுமையில் வாடும் ஏழைப் பெண்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம், மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம், பெண்களே நடத்தும் நியாய விலைக் கடைகள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள், இந்தியாவிலேயே முதல் முறையாக உள்ளாட்சி அமைப்புகளில் தமிழ்நாட்டில் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு, இந்தியாவிலேயே முதல் முறையாக 1973இல் காவல்துறையில் மகளிர் நியமனம் என்று கலைஞரின் ஆட்சிக் காலங்களில் மகளிரை மேம்படுத்துவதற்காகச் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் பட்டியல் மிக நீளமானவை.

### பெண்களின் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும் விடியல் பயணத் திட்டம்!

இவற்றின் நீட்சியாகவும், விரிவாக்கமாகவும் உங்களில் ஒருவனான எனது தலைமையில் தற்போது நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியிலும் பெண்களின் சமூக பொருளாதார விடுதலையை, மேம்பாட்டை உறுதி செய்வதற்கான பல உன்னதத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதும், பெண்களின் பொருளாதாரச் சுதந்திரத்துக்கு வழிவகுக்கும் விடியல் பயணத் திட்டத்திற்காகத்தான் எனது முதல் கையொப்பத்தை இட்டேன். உலகின் முன்னேறிய நாடுகளில் கூட இல்லாத வகையில், மகளிருக்கான ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பை 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்த்தினோம். அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை 40 விழுக்காட்டுக்கு உயர்த்தி எல்லா அலுவலகங்களிலும் ஆண்களுக்குச் சமமாகவும், ஆண்களை மிஞ்சியும் மகளிர் பணிபுரியும் நிலையை ஏற்படுத்தியுள்ளோம்.

மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாரின் பெயரால் பெண்கள் உயர்கல்வி பெறுவதை உறுதி செய்யும் ‘புதுமைப் பெண்’ திட்டத்தையும் தொடங்கி, கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கி வருகிறோம். அதுமட்டுமின்றி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் வீடுகள் குடும்பத் தலைவிகளின் பெயரிலேயே வழங்கப்படும் என்ற அக்கறைமிகு அறிவிப்பினையும் வெளியிட்டோம்.



### பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரும் கழக அரசு!

மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களையும், நகைக்கடன்களையும் தள்ளுபடி செய்து சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம்.

நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், பெண்களுக்கு 50 விழுக்காடு வேலைவாய்ப்பு அளிப்பதை நடைமுறைப்படுத்தியுள்ளோம். புதிய சிப்காட் தொழிற்பேட்டைகளில் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம்.

சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட பெரிய மாநகராட்சிகள் உள்ளிட்ட 11 மாநகராட்சிகளைப் (50 விழுக்காட்டுக்கும் மேலாக) பெண்களுக்கு ஒதுக்கி, அவர்கள் இன்று வணக்கத்துக்குரிய மேயர்களாகச் செயலாற்றும் நிலையை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்படுத்தி இருக்கிறது. மற்ற உள்ளாட்சி அமைப்புகளிலும், ஒதுக்கப்பட்ட 50 விழுக்காட்டுக்கும் மேல் பெண்கள் தலைவர்களாகவும், துணைத் தலைவர்களாகவும், கவுன்சிலர்களாகவும் பொறுப்பேற்றுள்ளனர் என்பது இதுவரை இல்லாத சாதனை ஆகும்.

### தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை வெளியீடு!

இத்துடன், இந்த ஆண்டு பிப்ரவரி 21ஆம் நாள், தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் “தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024”ஐ வெளியிட்டோம்.

- அதில், பாலின உணர்திறன் கொண்ட கல்வி முறையை நிறுவுதல் மற்றும் பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தைக் குறைத்தல்.
- வளரிளம் பெண்கள் மற்றும் மகளிரின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்.
- வேலைவாய்ப்புகளில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்தல்.
- அனைத்து அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத பணிகளில் உள்ள பெண் பணியாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் அவர்களுக்கு உகந்த பணியிடங்களை உறுதி செய்தல்.
- பெண்கள் நிர்வகிக்கும் சிறு தொழில்கள் மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்.
- பெண்கள் அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவித்து டிஜிட்டல் பாலின இடைவெளியைக் குறைத்தல்.
- தொழில் துறையில், பயிற்சி மற்றும் திறன்மேம்பாட்டை வழங்குவதன் மூலம் மகளிரிடையே நிலவும் திறன் இடைவெளியைக் குறைத்தல்.
- நிறுவனக் கடன் வசதிகளை அணுகுதல் மற்றும் தேவைப்படும் மகளிருக்கு வங்கி கடனுதவி அதிகம் கிடைப்பதற்கு வழிவகை செய்தல்.
- மகளிரை அரசியல் களத்தில் பங்கேற்க ஊக்கப்படுத்துதல்.

ஆகிய கோட்பாடுகளை இலக்காக வைத்துச் செயல்படத் திராவிட மாடல் அரசு தீர்மானித்துள்ளது.

> **“பெண் விடுதலை என்பதே முழுமையான சமூக விடுதலை என்ற முழுமையான புரிதலுடன், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில், நமது திராவிட மாடல் அரசு, பெண்கள் உரிமை மற்றும் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது. சமூகத்தின் சரிபாதியான பெண்கள் அவர்களுக்குரிய அனைத்து உரிமைகளையும், நலன்களையும் முழுமையாகப் பெறும் வரை அதை நோக்கிய நமது பயணம் தொடரும் என்ற உறுதியுடன் பெண்கள் அனைவருக்கும் மகளிர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”**

### பெண்களின் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் திராவிட மாடல் அரசு!

பெண் விடுதலை என்பதே முழுமையான சமூக விடுதலை என்ற முழுமையான புரிதலுடன், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில், நமது திராவிட மாடல் அரசு, பெண்கள் உரிமை மற்றும் மேம்பாட்டை உறுதிப்படுத்தும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது. சமூகத்தின் சரிபாதியான பெண்கள் அவர்களுக்குரிய அனைத்து உரிமைகளையும், நலன்களையும் முழுமையாகப் பெறும் வரை அதை நோக்கிய நமது பயணம் தொடரும் என்ற உறுதியுடன் பெண்கள் அனைவருக்கும் மகளிர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## மகளிருக்கான உரிமைகளை நிலைநாட்டியதில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு நீண்ட வரலாறு கொண்டது!

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 08-03-2024

# போதையின் தலைநகர் குஜராத்

போதைப் பொருள் தடுப்பு வழக்கில் தேடப்படும் நபர் ஒருவர் கட்சியில் இருந்தார். இதனை அறிந்ததும் அவர் நீக்கப்பட்டு விட்டார். தவறான நபர் என்று புகார் வந்ததும் அவரைக் கட்சியை விட்டு நீக்குவதற்கு தி.மு.க. தயங்கவில்லை. உடனே, தமிழ்நாட்டில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகமாகி விட்டதாக பொய்ப் புகார்களைக் கிளப்புகிறார்கள். இதையே பிரதமர் மோடியும் சொல்லி இருக்கிறார்.

“ஆட்சியில் இருக்கும் கட்சியின் ஆதரவில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இது என் மனதை வருத்தமடையச் செய்துள்ளது. போதைப் பொருள் விற்பனை செய்பவர்கள் மீது பா.ஜ.க. நடவடிக்கை எடுக்கும் என்பதே மோடியின் உத்தரவாதம்” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர்.

**நாட்டிலேயே அதிகமான போதைப் பொருள் விற்பனையாகும் மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள்தான் என்கிறது ஒரு புள்ளிவிபரம். கடந்த ஆண்டு டிசம்பர் 13 ஆம் தேதி மாநிலங்களவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் இது இருக்கிறது.** இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் ராஜஸ்தானில்தான் அதிகமான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது பா.ஜ.க. ஆளும் மாநிலம் ஆகும்.

★ **ராஜஸ்தான்**
★ **பஞ்சாப்**
★ **மத்தியப்பிரதேசம்**
★ **ஜார்கண்ட்**
★ **மணிப்பூர்**
★ **குஜராத்**
★ **அரியானா**
★ **பீகார்**
★ **மேற்கு வங்கம்**
★ **உத்திரப்பிரதேசம்** - ஆகிய பத்து மாநிலங்களில்தான் அதிகமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில் ஏழு மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும், ஆளும் கூட்டணியில் இருக்கும் மாநிலங்கள். பிரதமர் மோடியின் உத்தரவாதம் ஏன் அங்கு செயல்படுத்தப்படவில்லை?

அந்த மாநிலத்தில் போய் போதை மருந்து ஒழிப்பு பற்றி பேசுகிறாரா பிரதமர்?

**போதை மருந்துக்கு தலைநகரே குஜராத் மாநிலம்தான்.**

**இந்தியாவில் போதைப் பொருள் கடத்தலின் தலைநகராக இருப்பது குஜராத் மாநிலம்தான். கடந்த 1ஆம் தேதியன்று குஜராத்தில் ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சிறிய வகை கப்பலில் கொண்டு வந்துள்ளார்கள். 3.300 கிலோ எடை கொண்ட போதைப் பொருட்கள் இவை. ஐந்து பேரைக் கைது செய்தது காவல் துறை. இவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் உள்ளே நுழைந்து போதைப் பொருள் விற்கும் அளவுக்கு ‘பாதுகாப்பான’ மாநிலமாக குஜராத் இருக்கிறது.**

கடந்த செப்டம்பர் மாதம் குஜராத் மாநிலம், ராஜ்கோட் நகருக்கு அருகில் உள்ள மிதி ரோகர் என்ற கிராமத்தில் ஒரு கிலோ எடையில் 80 பாக்கெட்டுகள் கிடந்தன. பொதுமக்கள் பார்த்து போலீஸுக்கு சொன்னார்கள். 2022, 23 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் குஜராத்தில் உள்ள 25 மாவட்டங்களில் இருந்து ரூ.4 ஆயிரம் கோடிக்கும் அதிகமான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்திருப்பதாக அந்த மாநில அரசே சொல்லி இருக்கிறது. பறிமுதல் செய்யப்பட்டதே இவ்வளவு என்றால் - புழக்கத்தில் விடப்பட்டது எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் இருக்கும்?

2017 - 21 ஆகிய ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூ.2.5 லட்சம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் குஜராத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது. குஜராத் உள்துறை அமைச்சர் ஹார்ஸ் சங்வி தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் 3 போதை மருந்து தயாரிப்பு தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டது. போதை மருந்துகள் அதிகம் வந்து இறங்குவது முந்த்ரா துறைமுகத்தில் என்று செய்திகள் வருகின்றன.

குஜராத் மாநில கடற்பகுதியில், ஒரு கப்பலில் இருந்து 1,500 கிலோ ஹெராயினை இந்திய கடலோரக் காவல் படை அதிகாரிகள் 2017 ஆம் ஆண்டு கைப்பற்றினார்கள். ஒரு வணிக கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்ட இந்த ஹெராயினின் மதிப்பு கிட்டத்தட்ட 550 மில்லியன் டாலர் இருக்கும் என கடலோரக் காவல்படை அறிக்கையே வெளியிட்டது. **“இவ்வளவு போதைப் பொருள்கள் ஒரே நேரத்தில் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்முறை”** என்று கடற்படை செய்தித் தொடர்பாளர் டி.கே.சர்மா சொன்னார்.

ஹெராயினின் முக்கிய மூலப்பொருளாக ஓபியம் உள்ளது. **உலகின் மிகப்பெரிய ஓபியம் உற்பத்தியாளர்களால் ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவிற்குள் குஜராத் வழியாக வருகிறது. ஆப்கானிஸ்தானில் தயாராகும் ஹெராயின்கள், இந்தியப் பெருங்கடல் வழியாக கிழக்கு மற்றும் தெற்கு ஆப்பிரிக்காவுக்குக் கடத்தப்படுவதாக ஐ.நா.வின் போதைப் பொருள் மற்றும் குற்றம் தொடர்பான அலுவலகம் கூறுகிறது.** வட மாநிலமான பஞ்சாப், ஹெராயினால் கடுமையான பாதிப்புகளை சந்தித்து வருகிறது.

2021 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள முந்திரா துறைமுகத்துக்கு ரூ.21 ஆயிரம் கோடி மதிப்புள்ள போதைப் பொருள் வந்து இறங்கியது. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மிகப்பெரிய போதைப் புதையலை குஜராத் காவல்துறையினர் பிடித்தார்கள். அவர்கள் நடத்திய சோதனையில் குஜராத் கடற்கரைக்கு அருகே கடத்தல் படகு பிடிபட்டது. அதில், சாக்குப் பைகளில் வைக்கப்பட்டிருந்த கஞ்சா, மெத்தாம்பிடமைன் மற்றும் ஹெராயின் போன்ற போதைப் பொருட்கள் 760 கிலோ கண்டுபிடிக்கப்பட்டன. இதன் சர்வதேச மார்க்கெட் விலை ரூ.2,000 கோடி. அண்டை நாட்டில் இருந்து செயல்படும் போதை கடத்தல் கும்பல், இந்தியா மற்றும் பிற நாடுகளுக்கு கடல் மார்க்கமாக போதைப் பொருட்களை சப்ளை செய்து வருகின்றன என்று அறியப்பட்டது.

சமீப காலமாக குஜராத் துறைமுகங்களைப் பயன்படுத்தி போதைப் பொருள்கள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. இதுகுறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்; **“குஜராத்தில் பல கோடி மதிப்புள்ள போதைப் பொருள்கள் அங்கு தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றன. கண்மூடித்தனமாக போதைப்பொருள் வியாபாரம் செய்யும் இவர்கள் யார்? இந்த மாபியாக்களுக்கு எந்த ஆளும் சக்திகள் பாதுகாப்பு கொடுக்கிறார்கள்?”** என அப்போதே கேள்வி எழுப்பினார். ஆனால் பதில் சொல்வதற்குத்தான் யாரும் இல்லை!

**இப்படிப்பட்ட செய்திகளை மறந்து விட்டுத்தான் பிரதமர் நீலிக்கண்ணீர் வடிக்கிறார். குஜராத் முந்திரா துறைமுகத் தகவல்கள் ஏன் அவரை வருத்தமடைய வைக்கவில்லை?**

●●



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (7.3.2024) முகாம் அலுவலகத்தில், கிறிஸ்துவ தேவாயலங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி விஜிலா சத்தியானந்த், துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள போதகர் ஆர். தயாநிதி மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ஐ. ரோஸ்லின் ஜீவா, ஜான் பிரகாஷ் எபினேசன், எம். சத்திய பால்ராஜ், ஏ. ஜோசப் ஸ்டாலின், எம். நிக்சன், எஸ். சாமுவேல் புனிதராஜ், பி. பிரபாகர், பிரேம்குமார் ராஜாசிங், வி. பிரேம் கிறிஸ்துதாஸ், பி. சாமுவேல் கிருபாகரன், பிஷப் டாக்டர் பி. மோகன்தாஸ், போதகர் டி. சோபித்தராஜ், சி. ஜெபநேசர் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உள்ளனர்.

### கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் - பணியாளர் நல வாரியத்திற்கு நியமிக்கப்பட்ட

## புதிய நிர்வாகிகள் முதல்வரைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர்!

**சென்னை, மார்ச் 8-**

**கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்திற்கு புதியதாக நியமிக்கப்பட்டுள்ள தலைவர், துணைத் தலைவர் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று சந்தித்து நன்றி தெரிவித்து வாழ்த்துப் பெற்றனர்.**

இதுபற்றிய விவரம் வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கிறித்துவ பெருமக்கள், கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்படவேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கிறித்துவ பெருமக்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து, கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்க ஆணையிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, கிறித்துவ நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிமுறைகள், உறுப்பினர்கள் பதிவு செய்தல், நலத்திட்ட உதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள், விண்ணப்பிக்கும் முறை குறித்த வழிமுறைகளும், படிவங்களும் அரசாணை மூலம் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டது.

இந்நலவாரியத்திற்கு புதியதாக நியமனம் செய்யப்பட்ட தலைவர் திருமதி. விஜிலா சத்யானந்த், துணைத் தலைவர் போதகர் ஆர்.தயாநிதி மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஐ.ரோஸ்லின் ஜீவா, ஜெ. ஜான் பிரகாஷ் எபினேசன், எம்.சத்திய பால்ராஜ், ஏ. ஜோசப் ஸ்டாலின், எம். நிக்சன், மறைதிரு எஸ். சாமுவேல் புனிதராஜ், பி. பிரபாகர், பிரேம்குமார் ராஜாசிங், மறைதிரு வி. பிரேம் கிறிஸ்துதாஸ், பி. சாமுவேல் கிருபாகரன், பிஷப் டாக்டர் பி.மோகன்தாஸ், போதகர் டி.சோபித்தராஜ், மறைதிரு சி. ஜெபநேசர் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் நேற்று (7.3.2024) சந்தித்து, நன்றி தெரிவித்து, வாழ்த்துப் பெற்றார்கள்.

இந்நிகழ்வில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உடனிருந்தனர்.

### 9 வயது சிறுமியை பாலியல் கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து

## புதுச்சேரி தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவிப்பு!

சென்னை, மார்ச் 8-

பெண்ணுரிமை, பெண்குழந்தைகள் நலம் என மேடை தோறும் பொய் மூட்டைகளை அவிழ்த்து கொக்கரித்து வரும் பா.ஜ.க. கட்சி ஆட்சியின் அவலத்தைப் பார்த்து உலகமே சிரிக்கிறது.

புதுச்சேரியில் 9 வயது சிறுமி பாலியல் கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு சாக்கடையில் தூக்கி வீசப்பட்டதை எதிர்த்து புதுச்சேரி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கும் புதுச்சேரி மாநிலத்தில் - பா.ஜ.க.வின் மாநில முன்னாள் தலைவரும் - மகளிருமான டாக்டர் தமிழிசை துணை நிலை ஆளுநராக பொறுப்பு வகித்து வரும் புதுச்சேரி மாநிலத்தில் முத்தியால் பேட்டை பகுதியில் 9 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததுடன், அச்சிறுமியை கழுத்தை நெரித்து படுகொலை செய்து வேட்டியில் மூட்டையாக கட்டி சாக்கடை கால்வாயில் தூக்கி வீசியுள்ள இரக்கமற்ற - இதயமற்ற கொடுமை நடந்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

**இதுதான் மோடி அரசின் சாதனையா....?**

இந்தியா முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் பெண்ணுரிமை, பெண் குழந்தைகள் நலம் என மேடை தோறும் பொய் மூட்டைகளை அவிழ்த்து கொக்கரித்து வரும் பா.ஜ.க. கட்சி ஆட்சி நடக்கும் மாநிலத்தில், அதுவும் மூச்சுக்கு முன்னூறு முறை “பா.ஜ.க.வில் பெண்ணுரிமை” கூவும் புதுச்சேரி ஆளுநர் டாக்டர் தமிழிசை ஆளுநராக உள்ள



மாநிலத்தில், உலகத்தில் எங்கும் நடைபெறாத ஒரு அவலம்- அதுவும் பெண் சிறுமிக்கு கொடுமை நடந்துள்ளது.

**இதுதான் பா.ஜ.க. கூறும் பெண் குழந்தைகள் வளர்ச்சியா?**

2024 ஜனவரி 24 அன்று தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் “பெண் குழந்தைகள் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது” என்று தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டார். இதுதான் பா.ஜ.க.வினர் கூறும் பெண் குழந்தைகள் வளர்ச்சியா...? என கேட்கிறேன்.

அத்துடன், “உலகத்தையே பா.ஜ.க. ஆட்சிதான், இந்தியாவின் பக்கம் திரும்பி பார்க்க வைத்துள்ளது” என்று புளுகிக் கொண்டிருக்கும் பா.ஜ.க. கட்சியினரே, நீங்கள் சொல்வது உண்மைதான். ஒன்பது வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து, கொலை செய்யப்பட்டு சாக்கடையில் தூக்கி வீசப்பட்ட இந்நிகழ்வைப் பார்த்துதான் உலகமே, பா.ஜ.க. ஆளும் புதுச்சேரி மாநிலத்தின் பக்கம் திரும்பி காறி உமிழ்ந்து கொண்டிருக்கிறது. புதுச்சேரி பா.ஜ.க. ஆட்சியின் சட்டம் ஒழுங்கு சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த பாலியல் வன்கொடுமை உலகிற்கே படம்பிடித்துக் காட்டியிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இந்திய பிரதமர் மோடி அவர்கள், இந்தியா முழுவதும் பெண் குழந்தையை காப்பாற்றவும், பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கவும் 2015-ல் பிரதமர் மோடி அவர்கள் துவக்கிய “பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ” திட்டத்தை துவக்கினார். ஆனால் இன்று பா.ஜ.க. ஆட்சியில் நடப்பதோ பாலியல் வன்கொடுமை - அதுவும் சின்னஞ்சிறு சிறுமியின் மனிதாபிமானமற்ற கொலை!

**பாரதியார் உலவிய மண்ணில் அவலம்!**

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்” என்று முழக்கமிட்ட மகாகவி பாரதி உலவிய மண்ணில், ஒரு பெண் சிறுமிக்கு ஏற்பட்ட பாலியல் வன்கொடுமையை, காட்டுமிராண்டித்தனமான கொலையையும்- பெண்களை பாதுகாக்கத் தவறிய பா.ஜ.க. ஆட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடுங் கண்டனத்தை தெரிவிப்பதோடு, புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### பி.சுப்பிரமணியன் தலைமை! சு.சுப்பிரமணியன் முன்னிலை! கலைஞர் நூற்றாண்டு விழா!

## திருநெல்வேலி மத்திய மாவட்டத்தில் நல உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் தங்கம் தென்னரசு - திண்டுக்கல் லியோனி - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

நெல்லை, மார்ச் 8 -

திருநெல்வேலி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா, கழக இளைஞர் அணி மாநாடு தீர்மான விளக்க பொதுக்கூட்டம், மார்ச் 1 பிறந்தநாள் காணும் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா, 1800 பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (9.3.2024 சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில் திருநெல்வேலி சந்திப்பு, சிந்துபூந்துறையில் நெல்லை மத்திய மாவட்ட கழக துணைச்செயலாளர் எஸ்.வி.சுரேஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தச்சை பகுதி கழக செயலாளர், முன்னாள் மண்டல தலைவர் பி.சுப்பிரமணியன் எம்.சி., தலைமை வகிக்கிறார்.

நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், எஸ்.வி.பொன்னையா பாண்டியன், செ.பாலமுருகன் [எ] பிரபு, வி.எஸ்.அப்துல் கையூம், சுதாமூர்த்தி எம்.சி., பூக்கடை பி.அண்ணாதுரை, ஐஸ் மூக்கன், எஸ்.கண்ணையா, பொன். தங்கராஜ், எஸ்.ராஜேந்திரன், கிருஷ்ணவேணி, ஆஞ்சிஸ், சுடலை சிவா, சுந்தர வேலன், ஜீவன் மாரியப்பன், முருகன், விஷ்ணு, பாலமுருகன், மு.காதர் ஒலி, பாலன் (எ) ராஜா, பி.ராஜ வர்மன், குண்டு பாண்டியன், மலைப் பாண்டியன், எஸ். ரமேஷ், வள்ளியம்மாள், ஐயப்பன், தில்லை ரமேஷ், ஏ.சிவனு பாண்டியன், சங்கர், சுரேஷ், கண்ணன், சுடலைமணி, முருகன், சீனிவாசன், சுடலை முத்து, லியாகத் அலிகான், குமார், பாஸ்கர், சரவணன், பா.செல்வம், பாலகிருஷ்ணன், வினோத், வரதன், முத்துவேல்மணி கண்டன், பாபு, துர்க்காராம், வேம்பு விவேக், வேகை விசு, நவீனா முத்துக் குமார், ஆயிரம் செல்வம், மாலா, பேச்சிமுத்து, அக்பர் அலி, பே விசு, சரவணன், தக்சை நம்பிராஜன் முத்துவேல், ஐயன் சுப்பையா, அக்பர் அலி, ராஜேஷ், முருகேசன், நயினா கண்ணன், மு.வள்ளியின்செல்வன், கிட்டுப் பிள்ளை, தர்மநீலக்குமார், அசன், சதீஷ், தங்கராஜ், குருநாதன், விஸ்வ நாதன், அந்தோணி, பெயிண்டர் சீனி, பிரபு, நம்பி, எஸ். வி.ராஜா, தளவாய், ராமர், பிச்சுமணி, வசந்த், பாலாஜி, செல்வமணி, வேந்தன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கோகுலவாணிசுரேஷ் வரவேற்கிறார். நெல்லை மு.முத்தையா தொகுப்புரையாற்று கிறார்.

இக்கூட்டத்தில் நலத் திட்ட உதவிகள் வழங்கி அமைச்சர் தங்கம் தென்னரசு, திண்டுக்கல் ஐ. லியோனி, மாவட்டக் கழக பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., சா. ஞானதிரவியம் எம்.பி., ஹெலன் டேவிட்சன், வசந்தம் ஜெயக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.



திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளான மார்ச்–1 அன்று பிறந்த 30க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தங்கமோதிரம் அணிவித்து பரிசுப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., மு.பெ.கிரி.எம்.எல்.ஏ., டாக்டர் அரிகரன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன், கோல்டு எஸ்.பிரபு உட்பட பலர் உள்ளனர்.

## ‘ஏற்றத் தாழ்வு’ என்கிற இடைவெளியைக் குறைக்கின்ற வகையில் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற

# ‘திராவிட மாடல்’ தனித்துவமான முன்மாதிரியாகும்!

## ‘அவுட்லுக்’ ஆங்கில இதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

புதுடெல்லி, மார்ச் 8 –

**ஏற்றத்தாழ்வு என்கிற இடைவெளியைக் குறைக்கின்ற வகையில் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற ‘திராவிட மாடல்’ தனித்துவமான முன்மாதிரியாகும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘அவுட்லுக்’ ஆங்கில இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.**

**‘அவுட்லுக்’ (மார்ச் 2024) ஆங்கில இதழில் வெளியான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது நேர்காணலின் தமிழாக்கம் வருமாறு:**

***கேள்வி:*** **2021–ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது சந்தித்த பெரிய சவால்கள் என்ன?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** கோவிட் இரண்டாவது பேரலை என்கிற மிக நெருக்கடியான காலக்கட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றது. மக்களின் உயிரைக் காக்க வேண்டிய மிகச் சவாலான பணி எங்கள் முன் இருந்தது. ஆக்சிஜன் தட்டுப்பாடு உள்ளிட்ட அனைத்தையும் ஒருவார காலத்திற்குள் சமாளித்து, மீண்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டோம்.

ஆனாலும், முந்தைய ஆட்சியாளர்களின் மோசமான நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் ஊழல் முறைகேடுகளால் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், அரசின் நிதி நிலைமையும் படுபாதாளத்திற்குப் போயிருந்தது.

மாநில உரிமைகளைப் பறிக்கின்ற ஒன்றிய அரசுக்கு அடிபணிந்தவர்களாக அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் இருந்ததால், தமிழ்நாட்டின் அடிப்படைக் கட்டமைப்பே சீரழிந்திருந்தது. இந்த நிலைமைகளை மாற்றி, தமிழ்நாட்டை மீண்டும் முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்கிற எங்கள் இலட்சியமும் இலக்கும் சவால்களுடனேயேதான் தொடங்கின. அந்தச் சவால்களை எதிர்கொண்டு இன்று பல சாதனைகளுக்கு உரிமை கொண்டாடும் மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது.

### இந்தியாவின் மருத்துவத் தலைநகர் தமிழ்நாடு!

***செய்தியாளர்:*** **பல்வேறு புள்ளிவிவரங்கள், தரவரிசைப் பட்டியல்களின் அடிப்படையில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது தமிழ்நாட்டின் நிலை என்ன? இந்த மூன்றாண்டுகளில் கண்கூடாக உங்கள் அரசு கொண்டு வந்துள்ள மாற்றங்கள் என்ன?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** கல்வி, மருத்துவம், அடிப்படைக் கட்டமைப்பு, பொருளாதாரம் இந்த நான்கும்தான் ஒரு மாநிலத்தின் வளர்ச்சியை அளவிடுவதற்கான அம்சங்கள்.

பள்ளிக்கல்வி முதல் உயர்கல்வி வரை தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. இல்லம் தேடிக் கல்வி, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம் ஆகியவற்றால் பள்ளிக்கல்வி பயில்வோரின் எண்ணிக்கையும், உயர்கல்விக்குச் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. தற்போதைய பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆண் மாணவர்களுக்கான ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டமும் நல்ல பலனைத் தரும் என்று உறுதியாகச் சொல்லலாம். உயர்கல்விக்கான கட்டமைப்பில் தமிழ்நாடு எந்தளவுக்குச் சிறந்து விளங்குகிறது என்பதை அகில இந்திய அளவிலான தரவரிசைப் பட்டியலே நிரூபிக்கும். இந்தியாவின் முதல் நூறு உயர்கல்விநிறுவனங்களில் அதிக இடங்களைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

மருத்துவக் கட்டமைப்பில் ‘இந்தியாவின் மருத்துவத் தலைநகர்’ என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. மக்களுக்கான மருத்துவச் சேவையில் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது. மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் போன்ற திட்டங்கள் மனித உயிர்களின் மகத்துவத்தை உணர்த்தக்கூடியனவாக உள்ளன.

தொழில் வளர்ச்சியில் கடந்த 3 ஆண்டுகளில் பல கட்டங்கள் முன்னேறி இந்தியாவின் மூன்றாவது பெரிய மாநிலம் என்ற நிலைக்குத் தமிழ்நாடு உயர்ந்துள்ளது. மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 2023 நிதியாண்டில் முதலிடத்துக்குத் தமிழ்நாடு உயர்ந்துள்ளது. தொழில் முதலீடுகளுக்கு உகந்த மாநிலங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் 14–ஆவது இடத்தில் இருந்த தமிழ்நாடு எங்கள் ஆட்சிக்காலத்தில் மூன்றாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. புதிய முதலீடுகள், புதிய தொழிலகங்கள், வேலைவாய்ப்புகள் என பெரிய முன்னேற்றம் அடைந்துள்ளோம். இந்தியாவில் மொத்தமாகப் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கையில் தமிழ்நாட்டின் பங்களிப்பு மட்டும் 40 விழுக்காடாக உள்ளது. ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை நோக்கிய பொருளாதார வளர்ச்சியை மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்குமான சமச்சீரான வளர்ச்சியாகவும், பாலினச் சமத்துவம் கொண்ட வளர்ச்சியாகவும் கட்டமைத்து வருகிறோம்.

குனிந்து தேட வேண்டிய அளவில் இருந்த தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை மூன்றாண்டுகளில் நிமிர்ந்து பார்க்க வேண்டிய அளவுக்கு உயர்த்தியிருக்கிறது திராவிட மாடல் அரசு.

### திராவிட மாடல் தனித்துவமான முன்மாதிரியாகும்!

***செய்தியாளர்:*** **குஜராத் மாடலில் இருந்து திராவிட மாடல் எப்படி வேறுபட்டது என விளக்க முடியுமா? இந்த மாடல் உங்கள் வளர்ச்சிப் பாதையில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்துகிறது?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** திராவிட மாடல் என்பது வேறெந்த மாடலுடன் ஒப்பிட இயலாத தனித்துவமான முன்மாதிரியாகும். இதன் தொடக்கம் என்பது நூறாண்டுகளுக்கு முன்பே நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் அடித்தளமிடப்பட்டது. வகுப்புவாரி இடஒதுக்கீடு, அனைத்துச் சமுதாயத்தினருக்குமான கல்வி, வேலைவாய்ப்பு, பெண்களுக்கான வாக்குரிமை என சமூகநீதி வாயிலான சமத்துவ வளர்ச்சியை முன்னிறுத்தியது. 1967 முதல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற காலங்களில் எல்லாம் இந்த சமச்சீரான சமூகநீதி அடிப்படையிலான வளர்ச்சியையே பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் முன்னெடுத்தனர். அதைத்தான் திராவிட மாடல் என்ற பெயருடன் தற்போது தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கோ, ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ, ஒரு குறிப்பிட்ட பாலினத்திற்கோ மட்டுமே வாய்ப்புகள் என்றில்லாமல் கல்வி, அடிப்படைக் கட்டமைப்புகள், வேலைவாய்ப்பு, தொழில் முதலீடு ஆகியவற்றைப் பரவலான அளவில் செயல்படுத்தி, ஏற்றத்தாழ்வு என்கிற இடைவெளியைக் குறைக்கின்ற வகையில் திட்டங்களைச் செயல்படுத்கின்ற மாடல்தான் திராவிட மாடல்.

மாநகரத்தில் உள்ளவர்களுக்கு கிடைப்பது போலவே கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கும் அவரவர் ஊர்களுக்குப் பக்கத்திலேயே உயர் கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவ வசதி, தலைநகரத்திற்கு வந்து செல்லக்கூடிய கட்டமைப்புகள் அனைத்தும் கொண்டது திராவிட மாடல். ‘எல்லாருக்கும் எல்லாம்’ என்பதுதான் திராவிட மாடலுக்கு எளிமையான விளக்கம்!

### மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்பதே தி.மு.க.வின் நிலைப்பாடு!

***செய்தியாளர்:*** **மாநில சுயாட்சி குறித்த இராசமன்னார் குழு அளித்த அறிக்கையைச் சட்டப்பேரவையில் தி.மு.க அரசு நிறைவேற்றி 50 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 50 ஆண்டுகளில் நடந்துள்ள பெரும் அதிகாரக் குவியலை எப்படி நோக்குகிறீர்கள்?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** பன்முகத்தன்மை கொண்ட பல மொழிகள் பேசக்கூடிய - பலவித பண்பாடுகளைக் கொண்ட மக்கள் வாழக்கூடிய இந்தியாவின் ஒருமைப்பாடு என்பது கூட்டாட்சிக் கருத்தியலின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது. மக்களை நேரடியாக சந்திக்கிறவர்களாகவும், மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றக் கூடிய இடத்தில் உள்ளவர்களாகவும் மாநில அரசாங்கத்தினர்தான் இருக்கிறார்கள். அதனால் மாநிலங்களுக்கே கூடுதல் அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பதைத்தான் 1969-இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் வலியுறுத்தினார்.

## மக்கள் மனங்களை வெல்வதில் ‘இந்தியா’ கூட்டணிக்கு எந்தச் சவாலும் இல்லை!

அதனடிப்படையில் அமைக்கப்பட்ட நீதியரசர் ராஜமன்னார் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து, 1974-இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினார். மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி என்பதுதான் தி.மு.கவின் உறுதியான நிலைப்பாடு.

நீதியரசர் ராஜமன்னார் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து, 1974–இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினார். மாநிலத்தில் சுயாட்சி – மத்தியில் கூட்டாட்சி என்பதுதான் தி.மு.க.வின் உறுதியான நிலைப்பாடு. அதற்கு மாறான வகையிலே, மாநில அரசிடம் இருக்கக்கூடிய உரிமைகளையும் பறிக்கின்ற ஒன்றிய அரசு டெல்லியிலே அமைந்துள்ளது. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பே கல்வி, சுகாதாரம் போன்ற மாநிலப் பட்டியலில் உள்ள அதிகாரங்கள் ஒன்றிய அரசின் பட்டியலுக்கு மாற்றப்பட்ட நிலையில், கடந்த பத்தாண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் நீட் தேர்வு, உதய் மின் திட்டம், ஜி.எஸ்.டி. என மாநிலங்களின் அதிகாரத்தை முற்றிலுமாகப் பறிக்கும் செயல்பாடுகள் மிக அதிகமாக நிறைவேறியுள்ளன. இது ஜனநாயகத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் எதிரான மோசமான நடவடிக்கையாக உள்ளது. அதனால்தான், தமிழ்நாடு, அதிலும் குறிப்பாக, தி.மு.க. மாநில உரிமைகளைத் தொடர்ந்து வலியுறுத்துவதுடன், மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தி வருகிறது.

அதற்கு மாறான வகையிலே, மாநில அரசிடம் இருக்கக்கூடிய உரிமைகளையும் பறிக்கின்ற ஒன்றிய அரசு டெல்லியிலே அமைந்துள்ளது. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பே கல்வி, சுகாதாரம் போன்ற மாநிலப் பட்டியலில் உள்ள அதிகாரங்கள் ஒன்றிய அரசின் பட்டியலுக்கு மாற்றப்பட்ட நிலையில், கடந்த பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் நீட் தேர்வு, உதய் மின் திட்டம், ஜி.எஸ்.டி என மாநிலங்களின் அதிகாரத்தை முற்றிலுமாகப் பறிக்கும் செயல்பாடுகள் மிக அதிகமாக நிறைவேறியுள்ளன.

இது ஜனநாயகத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் எதிரான மோசமான நடவடிக்கையாக உள்ளது. அதனால்தான், தமிழ்நாடு, அதிலும் குறிப்பாக, தி.மு.க. மாநில உரிமைகளைத் தொடர்ந்து வலியுறுத்துவதுடன், மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தி வருகிறது.




### விமர்சனங்கள் தி.மு.க.வுக்கு புதியதல்ல!

***செய்தியாளர்:*** **கல்வி, மருத்துவம், மகளிர் நலன் எனச் சமூகநலனுக்கான முதலீடுகளில் தி.மு.க. எப்போதுமே அக்கறையோடு இருந்து வந்துள்ளது. இவற்றை இலவசங்கள் என்று கூறி, சமூக வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் காட்ட சிலர் முயலுகிறார்கள். இத்தகைய விமர்சனங்களை நீங்கள் எவ்வாறு கையாளுகிறீர்கள்?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இத்தகைய விமர்சனங்கள் தி.மு.க.வுக்குப் புதியதல்ல. அவை புளித்துப் போனவை.

கலைஞர் ஆட்சியில், சட்டமன்ற உறுப்பினராக இருந்த நான் வலியுறுத்தியதைத் தொடர்ந்து +2 மாணவர்கள் வரை பஸ் பாஸ் கொடுக்கப்பட்டது. அப்போது அதை இலவசம் என்று விமர்சித்தார்கள். ஆனால், அந்த பஸ் பாஸ் பெற்ற கிராமப்புற ஏழை மாணவர்கள் இன்று உயர் கல்வி முடித்து இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர்ந்த பணிகளில் இருக்கிறார்கள். அவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் செலுத்தும் வரி ஒன்றிய அரசின் கருவூலத்திற்குத்தான் செல்கிறது. அன்றைக்குக் கலைஞர் அரசு கொடுத்தது என்பது இலவசமல்ல; ஒரு தலைமுறையை வளரச் செய்வதற்கான சிறிய முதலீடு! அதன் பயனை இன்று உணர்கிறோம்!

முட்டையுடன் கூடிய சத்துணவுத் திட்டம், கலர் டி.வி., உழவர்களுக்கான மின்சாரம் என எல்லாத் திட்டங்களும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய சமூகநலத் திட்டங்கள்தான். நகரப் பேருந்துகளில் பெண்களுக்கான கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம் ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதம் 800 ரூபாய் வரை மிச்சப்படுத்தி, சேமிப்பாக மாற்றுவதுடன், தங்களின் வேலை, சுயதொழில், நேர்காணல் ஆகிய வற்றுக்காக வெளியில் செல்ல முடியும் என்ற தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

சமுதாயத்தில் பாதிக்கும் மேலான அளவில் பெண்களின் எண்ணிக்கை உள்ள நிலையில், இது ஒரு சமுதாய மாற்றத்திற்கான அமைதிப் புரட்சிக்கான திட்டமாக அமைந்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மற்ற மாநிலங்களும் இதனைப் பின்பற்றுகிற நிலையில், சமுதாய நிலை பற்றிய தெளிவோ புரிதலோ இல்லாத குறுகிய பார்வை கொண்டவர்கள்தான் இத்தகைய திட்டங்களை இலவசம் என்று சொல்லி தங்கள் அறியாமையை வெளிப்படுத்துகிறார்கள்.

***செய்தியாளர்:*** **தவறான ஜி.எஸ்.டி நடைமுறைப்படுத்தலும், நிதிப் பகிர்வில் மாநில அரசுகளை மதிக்காத போக்கும் நிலவும் சூழலில் நீங்கள் எப்படி திட்டங்களைத் தீட்டி, இத்தகைய நிதி நெருக்கடியில் அவற்றைத் தொடர்ந்து செயல்படுத்துகிறீர்கள்?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** 2023 டிசம்பர் மாதம் மிக்ஜாம் புயல் மற்றும் மழை வெள்ளத்தால் சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களும், திருநெல்வேலி - தூத்துக்குடி போன்ற தென் மாவட்டங்களும் பேரிடரை எதிர்கொண்ட நிலையில், பிரதமர் மோடி அவர்களிடம் நான் நேரில் சந்தித்து வலியுறுத்தியும் பேரிடர் நிவாரண நிதியை இதுவரை வழங்கவில்லை.

மாநில அரசே தனது பங்களிப்பாகக் குடும்ப அட்டைதாரர்களுக்கு 6000 ரூபாய் வழங்கியது. ஒன்றிய அரசுக்குத் தமிழ்நாட்டின் பங்களிப்பாகச் செலுத்தப்படும் ஒவ்வொரு ரூபாய் வரிக்கும் 29 பைசா மட்டுமே ஒன்றிய அரசின் பகிர்வாகத் திரும்பக் கிடைக்கிறது. மிகக் கடினமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டாலும், மக்கள் நலனுக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் சுணக்கமின்றிச் செயல்படுகிறோம்.

மாநில அரசுக்குக் கிடைக்கக்கூடிய பத்திரப் பதிவுத் துறை வருவாய், வாகனப் பதிவு வருவாய், புதிய முதலீடுகள் உள்ளிட்டவற்றைக் கொண்டு திட்டங்களுக்கான முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொன்றையும் கவனித்துச் செயல்படுத்துகிறோம். மூன்றாண்டு காலத்தில் நிமிர்த்தப்பட்ட பொருளாதார நிலையினால் தமிழ்நாடு இதனைச் சமாளிக்கிறது.

### பீகார் மாநிலத்தில் இந்தியா கூட்டணி வலுவாக உள்ளது!

***செய்தியாளர்:*** **நீங்களும் உங்கள் திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின் மையமாக இருக்கிறீர்கள். எத்தகைய சவால்கள் உங்கள் முன் உள்ளன? இந்தியா கூட்டணியில் இருந்து நிதீஷ்குமார் வெளியேறியது உங்கள் வெற்றி வாய்ப்பைப் பாதிக்குமா?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இந்தியா கூட்டணியின் தொடக்க கூட்டத்தி லேயே அந்தந்த மாநிலங்களில் வலிமையுள்ள கட்சிகளைக் கருத்திற்கொண்டு தொகுதிப் பங்கீட்டினை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினேன். நிதீஷ்குமார் அவர்கள் சொந்தக் காரணங்களைக் கருதி வெளியேறினாலும் அவருடைய பீகார் மாநிலத்தில் இந்தியா கூட்டணி வலுவாக இருப்பதுடன், அங்கே தொகுதிப் பங்கீடும் சுமுகமான முறையில் நடந்து வருகிறது. அதுபோலவே வாய்ப்புள்ள இடங்களில் தேசியக் கட்சிகளும் மாநிலக் கட்சிகளும் தங்களுக்குரிய பங்களிப்புடன் செயல்படுகின்றன. தேர்தல் களம் என்று வருகிறபோது ஒரு சில சவால்கள் எல்லாத் தரப்புக்கும் இருக்கும். மக்கள் மனங்களை வெல்வதில் இந்தியா கூட்டணிக்கு எந்தச் சவாலும் இல்லை.

**கேள்வி: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கும், தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** மு.க.ஸ்டாலினைக் கட்சியின் தலைவர் பொறுப்பில் அமர வைத்த தொண்டர்களின் உழைப்பும், மக்களின் நம்பிக்கையும்தான் முதலமைச்சர் ஸ்டாலின் என்ற பொறுப்பை வழங்கியிருக்கிறது. வெற்றிச் சான்றிதழைப் பெற்றபிறகு, கலைஞரின் நினைவிடத்தில் நான், “வாக்களித்தோர் மனநிறைவு கொள்ளும் வகையிலும், வாக்களிக்காதவர்கள் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே” என்று நினைக்கக்கூடிய வகையிலும் அனைவருக்குமான ஆட்சியாக இருக்கும் என்று உறுதியளித்தேன். அதனை முழுமையாக நிறைவேற்றி வரும் முதலமைச்சர் ஸ்டாலினாகிய நான், கட்சித் தொண்டர்கள் எதிர்பார்ப்பதுபோல, தி.மு.க. ஆட்சி தொடர்ந்து நீடிக்கும் வகையிலான கட்சித் தலைவர் ஸ்டாலினாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

### பா.ஜ.க. வை முழுமையாக அம்பலப்படுத்த வாய்ப்பு!

***செய்தியாளர்:*** **அமலாக்கத்துறை, வருமானவரித் துறை போன்ற விசாரணை அமைப்புகள் ஒன்றிய அரசின் அரசியல் கருவிகளாக மாறி வருவதையும் அது இந்தியா ஜனநாயகத்தைச் சிதைப்பதையும் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** சுதந்திரமான விசாரணை அமைப்புகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு தன் கைப்பாவையாகப் பயன்படுத்துகிறது என்பதை எதிர்க்கட்சிகளான நாங்கள் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. மக்களே அதைச் சொல்லத் தொடங்கிவிட்டார்கள்.

பா.ஜ.க. ஆட்சியல்லாத மாநிலங்களில் உள்ள ஆளுங்கட்சியினர் மீதுதான் அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சி.பி.ஐ. ஆகியவை பாய்கின்றன. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள ஊழல் புகார்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஏற்கனவே ஊழல் புகாருக்கு ஆளான எதிர்க்கட்சி பிரமுகர் திடீரென பா.ஜ.க. பக்கம் சென்றுவிட்டால் உடனே அவரை புனிதராக்கி, அமைச்சர் பதவி கொடுக்கும் அளவிற்குக் கறை நீக்கக்கூடிய ‘அற்புத வாஷிங் மிஷின்’ பா.ஜ.க.விடம் இருக்கிறது என்பதை மக்கள் புரிந்துகொண்டு விட்டார்கள்.

தேர்தல் நெருங்க நெருங்க பா.ஜ.க. அல்லாத கட்சியினர் மீதான பாய்ச்சல்கள் இன்னும் கூடுதலாக இருக்கும். அதனை எதிர்கொள்வதற்கான வலிமை இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு உண்டு. பா.ஜ.க.வை முழுமையாக அம்பலப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக அது அமையும்.

### ஆளுநர்களை வைத்து இணை அரசாங்கம் நடத்துவதை முறியடிப்போம்!

***செய்தியாளர்:*** **ஆளுநர் பதவியைப் பற்றி பல ஆண்டுகளாகத் தி.மு.க. விமர்சனத்தைக் கொண்டுள்ளது. 1967–இல் இருந்து தி.மு.க. ஆளுங்கட்சியாகவோ வலிமையான எதிர்க் கட்சியாகவோ தொடர்ந்து இருந்து வருகிறது. ஆளுநர்கள் போடும் முட்டுக் கட்டைகளை மீறித் தமிழ்நாடு எப்படி தனது அரசியல் அபிலாஷைகளை நனவாக்குகிறது?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** **மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை மீறிய அதிகாரம், நியமனப் பதவியான ஆளுநருக்குக் கிடையாது என்பதைத் தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலிருந்தே ஆளுநர் பதவியை நீக்க வேண்டும் என்றும், ஆளுநர் பதவி அவசியம் என்றால் அது மாநில அரசின் பங்களிப்போடு, தேர்ந்தெடுக்கும் முறையில் அமைந்திட வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்துள்ளோம். அண்மைக் காலமாக வெளிப்படையான அரசியல்வாதிகளைப் போல ஆளுநர்கள் செயல்படுவதைத் தமிழ்நாடு மட்டுமின்றி, கேரளம், தெலங்கானா, மேற்கு வங்கம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் காண்கிறோம். ஆளுநரின் அதிகார வரம்பு மீறல்களைச் சட்டமன்றத்தில் எதிர்கொண்டு முறியடித்தோம். நீதிமன்றத்திலும் சட்டவழியில் போராடிக் கொண்டிருக்கிறோம். அரசியல் சட்டத்தை மதிக்காமல், ஜனநாயகத்தின் மாண்புகளைக் கெடுக்கும் வகையில் ஆளுநர்களை வைத்து இணை அரசாங்கம் நடத்த முற்படும் ஒன்றிய பா.ஜ.க அரசின் சூழ்ச்சிகளை முறியடிப்போம்.**

### பிரதமராக யார் வரக்கூடாது என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்!

***செய்தியாளர்:*** **2024 தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற உதவும் காரணிகளாக எவை இருக்கும்? தோற்கடிக்க முடியாத கட்சி எனப் பா.ஜ.க. தங்களைப் பற்றி முன்னெடுத்து வரும் பரப்புரை 2004–இல் இந்தியா ஒளிர்கிறது என அவர்கள் கூறியதை நினைவுபடுத்துகிறதே. மோடியை வெல்வது உண்மையில் சாத்தியமா?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** ஜனநாயக நாட்டில் யாரும் நிரந்தரமாக முடிசூட்டிக் கொள்ள முடியாது. 2004-இல் ‘இந்தியா ஒளிர்கிறது’ என்று பா.ஜ.க. மீண்டும் ஆட்சியைப் பிடிக்க நினைத்தது. ஆனால், தேர்தல் முடிவுகள் அதற்கு எதிர்மறையாக அமைந்தன. பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் இந்தியாவில் பெரும் தொழிலதிபர்கள் தவிர வேறு எந்த ஒரு தரப்பினரும் நிம்மதியாக இல்லை. உழவர்கள், தொழிலாளர்கள், சிறு வணிகர்கள், மாணவர்கள், சிறுபான்மையினர், பட்டியலின மக்கள் எனப் பல தரப்பினரும் எதிர்கொள்கின்ற சிக்கல்களே இந்தியா கூட்டணிக்குச் சாதகமானதாக அமையும். யார் பிரதமராக வரவேண்டும் என்பதைவிட, மீண்டும் யார் வந்துவிடக்கூடாது என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். அது தேர்தல் முடிவுகளில் தெரியும்.

### கட்சித் தொண்டர்கள் எதிர்பார்க்கும் வகையில் செயல்படுகிறேன்!

***செய்தியாளர்:*** **தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** மு.க.ஸ்டாலினைக் கட்சியின் தலைவர் பொறுப்பில் அமர வைத்த தொண்டர்களின் உழைப்பும், மக்களின் நம்பிக்கையும்தான் முதலமைச்சர் ஸ்டாலின் என்ற பொறுப்பை வழங்கியிருக்கிறது. வெற்றிச் சான்றிதழைப் பெற்றபிறகு, கலைஞரின் நினைவிடத்தில் நான், “வாக்களித்தோர் மனநிறைவு கொள்ளும் வகையிலும், வாக்களிக்காதவர்கள் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று நினைக்கக் கூடிய வகையிலும் அனைவருக்குமான ஆட்சியாக இருக்கும்” என்று உறுதியளித்தேன். அதனை முழுமையாக நிறைவேற்றி வரும் முதலமைச்சர் ஸ்டாலினாகிய நான், கட்சித் தொண்டர்கள் எதிர்பார்ப்பதுபோல, தி.மு.க ஆட்சி தொடர்ந்து நீடிக்கும் வகையிலான கட்சித் தலைவர் ஸ்டாலினாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

பா.ஜ.க மீது நீங்கள் தொடர்ந்து வைக்கும் குற்றச்சாட்டுகளாலும் அவர்களுக்கு எதிராகத் தேசிய அளவில் நீங்கள் கூட்டணியைக் கட்டமைப்பதாலும்தான் ஒன்றிய அரசு உங்களைக் குறிவைக்கிறது எனக் கருதுகிறீர்களா?

எதிர்ப்புகளோ தாக்குதல்களோ எனக்கோ தி.மு.க.வுக்கோ புதிதல்ல. எப்போதெல்லாம் ஜனநாயகத்திற்கு ஆபத்து நேர்கிறதோ அப்போது எதிர்ப்புக் குரல் கொடுக்கும் இயக்கங்களில் முதன்மையானது திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆதரித்தாலும் - எதிர்த்தாலும் தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பவர் கலைஞர் கருணாநிதி என்று சொன்னவர் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையார். நான் கலைஞரின் மகன். ஆதரிக்க வேண்டிய நல்லவற்றை ஆதரிப்பதிலும் உறுதியாக இருப்பேன். எதிர்க்க வேண்டிய தீமைகளை எதிர்ப்பதிலும் உறுதியாக இருப்பேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்துள்ளார்.



மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், திருச்செந்தூர் நகராட்சி ஆலந்தலை கிராமத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளை சூழ்ந்துள்ள மழை நீரை வெளியேற்றுவது தொடர்பாக பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி , உடன்குடி ஒன்றியச் செயலாளர் டி.பி.பாலசிங், திருச்செந்தூர் துணை நகர் மன்றத் தலைவர் ஏ.பி.ரமேஸ், நகரச் செயலாளர் வாள் சுடலை, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### டி.பி.எம்.மைதீன்கான் தலைமை! சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில்

# நெல்லை மாநகரில் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் ஐ.பெரியசாமி சிறப்புரை!

நெல்லை, மார்ச் 8 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் எல்லோருக்கும் எல்லாம்" திராவிட மாடல்" நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் பேட்டை பஜார் திடல் பழைய மீனாட்சி தியேட்டர் அருகில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொது செயலாளரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ. பெரியசாமி பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் எல்லோருக்கும் எல்லாம் "திராவிட மாடல்"நாயகரின் பிறந்த நாள் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் பேட்டை பஜார் திடல் பழைய மீனாட்சி தியேட்டர் அருகில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், தொகுதி பார்வையாளர்கள் ஹெலன் டேவிட்சன்,வசந்தம் ஜெயக்குமார்,தீர்மான குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,மத்திய மாவட்ட அவைத்தலைவர் முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பேச்சி பாண்டியன், மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், துபாய்சாகுல், அன்டன் செல்லத்துரை, மாநகராட்சி மேயர் சரவணன், துணைமேயர் ராஜு, மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி,மாரியப்பன், மாவட்டப் பிரதிநிதி ஜவகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றினார். நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ. பெரியசாமி பேசியதாவது.

தமிழக வரலாற்றில் பாளையங்கோட்டை என்றால் கழகத்தின் கோட்டை என்பதை அறிவோம்.வரலாறு ரீதியாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கும் பாளையங் கோட்டைக்கும் சம்பந்தம் உண்டு. 38 மாவட்டங்கள் உள்ளது.நெல்லை மாவட்டம் போல நல்ல மாவட்டத்தை நான் பார்த்ததில்லை. சட்டப்பேரவை உறுப்பினர் அப்துல் வகாப் பேசும்வையில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை தொகுதியில் 2 லட்சம் ஓட்டுகள் அதிகமாக வாங்கித் தருவோம் என்று கூறினார். நிச்சயமாக தமிழ்நாட்டில் நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் அதிக வாக்குகள் பெற்ற தொகுதியாக திருநெல்வேலி தொகுதி இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.இங்குள்ள மக்கள் எதார்த்தமான நிலையில் இருக்கிறார்கள். லட்சக்கணக்கானோர் கொள்கை பிடிப்புடன் உள்ளனர். அரசியல் களம் கண்ட கூட்டம் தான் இது.

**துரோகம் செய்த ஒன்றிய அரசு!**

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பெய்த அதிகன மழையால் மக்கள் பாதிக்கப்பட்ட போது உடனுக்குடன் அமைச்சர்களை அனுப்பி அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். ஒன்றிய அரசு அதிகாரிகளும், அமைச்சர்களும் வெள்ள பாதிப்புகளை பார்ப்பது போல் நடித்து மக்களுக்கு துரோகம் செய்துவிட்டார்கள்.சல்லி பைசா கூட இதுவரை வெள்ள பாதிப்புக்கான நிதியாக ஒன்றிய அரசு கொடுக்க வில்லை. வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ரூபாய் 6000 நிவாரணமும்,1000 நிவாரணமும், வீடு இழந்தவர்களுக்கு ரூபாய் 4 லட்சம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து முதலமைச்சர் அவர்கள் அதனை தொடங்கி வைத்துள்ளார்.

தமிழகத்திலிருந்து ஜி.எஸ்.டி.வரி வருவாய் மூலம் பலகோடி செல்கிறது.அதிகமாக வரி செலுத்தும் மாநிலங்களில் முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.தமிழகத்தின் வரி வருவாய் எல்லாம் ஒன்றிய அரசு வாங்கிக் கொண்டு,ராஜஸ்தான் உத்திரபிரதேசம்,குஜராத்,மத்திய பிரதேசம் போன்ற அனைத்து தவறுகளும் செய்து,அரசை ஏமாற்றும் மாநிலங்களுக்கு வரியை வாரி வழங்கி கொடுப்பது நியாயமா? என மக்களே சொல்ல வேண்டும். 450 கோடி ரூபாய் நிதி வெள்ள பாதிப்பு களுக்காக ஒன்றிய அரசு ஒதுக்கியது.சிறிய, சிறிய பாதிப்புகளை சரி செய்ய ஆண்டு தோறும் ஒதுக்கப்படும் நிதி மட்டுமே அதுவாகும்.வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்துவிட்டு ஒன்றிய அரசு திருநெல்வேலி மக்களுக்கு அல்வாவை கொடுத்துவிட்டது. வரும் தேர்தலில் ஒரு ஓட்டு கூட மோடிக்கு போடக்கூடாது. திருநெல்வேலி மக்கள் அவர்களுக்கு அல்வா கூட கொடுக்கக் கூடாது. அவர்கள் ஜீரோவாக தான் இருக்க வேண்டும்.

**கழக ஆட்சியில்தான் சமூக நீதி திட்டங்கள்!**

முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும் ஆண்களுக்கு கல்லூரியில் படிக்க ரூபாய் 1000 திட்டத்தை கொண்டு வர வேண்டும் என இந்த பட்ஜெட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதியை ஒதுக்கியுள்ளார். அனைத்து துறைகளிலும் சமூக நீதி திட்டங்கள் தி.மு.க ஆட்சி காலத்தில் தான் கொண்டுவரப்பட்டது.குடும்பத் தலைவிக்கு வழங்கப்படும் மகளிர் உரிமைத்தொகை ரூபாய் 1000 ஒரு கோடியே 18 லட்சம் பேருக்கு வழங்கி வரும் நிலையில் கூடுதலாக 10 லட்சம் மகளிருக்கு விரைவில் வழங்கப்பட உள்ளது. எந்த ஆட்சியும் சொன்னதை செய்தது கிடையாது. சொன்னதையும்!சொல்லாததையும்! செய்து கொடுக்கும் ஒரே ஆட்சி தி.மு.க ஆட்சியாக தான் உள்ளது. அதுதான் "திராவிட மாடல்" ஆட்சி ஆகும்.மக்களுக்கு எல்லாம் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட முதல்வர் அவர்களை

செயல்பட விடாமல் நிதி ஆதாரத்தை முடக்கி விட நினைக்கிறார்கள். கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் ஊதியம் தினமும் கொடுக்கப்பட வேண்டும். மூன்று, நான்கு மாதங்களாக அது கொடுக்கப்படாமல் உள்ளது. தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு இனியும் வரக்கூடாது. நமக்கு வரும் நிதியை உரிய நேரத்தில் வழங்காமல் இருந்து தேர்தல் நேரத்தில் வழங்கினால் அது நமக்கு சாதகமாகும் என அவர்கள் நினைக்கிறார்கள். புதிய கொள்கை மற்றும் லட்சியத்தால் மறைமுகமாக மதச்சார்பின்மையை மாற்ற பா.ஜ.க. நினைக்கிறது ஜனநாயகத்தின் சர்வாதிகாரம் தலைதூக்கக் கூடாது. நமக்கான உரிமைகளை ஒன்றிய அரசு பறிக்கும்போது நாம் வாழவட்டியாக இருக்க முடியாது. நமக்கான உரிமைகளை பெற்றிட வேண்டும்.

**வரலாறு தெரியாமல் பேசும் பிரதமர்!**

தி.மு.க.வை அழிப்போம் ஒழிப்போம் என பிரதமர் வரலாறு தெரியாமல் பேசுகிறார்.பிரதமர் வந்து 10 ஆண்டுகள் தான் ஆகிறது. தி.மு.க.விற்கு தனி வரலாறு உள்ளது எமர்ஜென்சி காலத்தில் 500 தி.மு.க.வினரை சிறையில் அடைத்தால் தி.மு.க அழியும் என நினைத்தார்கள். தி.மு.க என்றும் மக்கள் மனதில் உள்ளது.தி.மு. க.வை அழிக்கவும் முடியாது, ஒழிக்கவும் முடியாது.தமிழக மக்கள் மனதில் அழிக்க முடியாத சக்தியாக தி.மு.க. இருக்கிறது.ஜாதி மதம் வைத்து சந்தர்ப்பவாத கூட்டணியை எதிர் தரப்பினர் அமைத்துள்ளனர். அவர்களது கூட்டணிக்கு யாரும் செல்லவில்லை.அரசியல் கொள்கைகளை அடிப்படையாக வைத்து தி.மு.க தலைமையில் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

எல்லோருக்கும் எல்லாம் மக்கள் கேட்டு இல்லை என்று சொன்னது இல்லை,நம் முதலமைச்சர் தளபதி அவர்கள்.அப்படிப்பட்ட முதலமைச்சரை நாம் பெற்றுள்ளோம் இவ்வாறு கழக துணை பொது செயலாளர் - அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார்,அணி அமைப்பாளர்கள் மகளிர் தொண்டரணி அனிதா,அயலக அணி செந்தில்,காசி மணி,இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன்,ரவீந்தர்,ஜூலியட், உள்பட அனைத்து சார்பு அணி நிர்வாகிகள்,பகுதி கழக,வட்டக் கழக நிர்வாகிகள், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சி நிறைவில் மாமன்ற உறுப்பினர் ஷேக் மன்சூர் நன்றியுரையாற்றினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் செய்திருந்தார்.



இராமநாதபுரம் தொகுதி நாடாளுமன்றத் தேர்தலில் கடந்த முறை பெற்ற வாக்குகளை விட பல மடங்கு பெற்று மகத்தான வெற்றி பெற அனைவரும் சிறப்பாக செயல்பட வேண்டும். மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த கூட்டத்தில், சுந்தரராஜன், பவானி ரஜேந்திரன், முத்துராமலிங்கம், கணேசன், குழந்தைவேலு, முருகேசன், உ.திசை வீரன், சாயல்குடி ராமர், கருப்பையா, ஆதித்யன், மிசா அகமது தம்பி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூர் நகர தி.மு.க.சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல்நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் அப்பாஸ் வரவேற்புரையாற்றினார். நகர மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், தலைமைக் கழகப் பேச்சாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். உடன் தொகுதி பார்வையாளர் ஆவின் ஆறுமுகம், முத்துப்பாண்டி, ஆறுமுகசாமி, ஷெரிப், அப்துல்காதர், சாதிர், சேகனா, ஷேக் தாவுது, சாமிதுரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில்

# கிருஷ்ணகிரி மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம்!

## தே.மதியழகன் - தளி ஒய்.பிரகாஷ் அறிக்கை!

கிருஷ்ணகிரி, மார்ச் 8 -

தமிழக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமையில் ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்ட அவசர மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய் பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கை தெரிவித்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், திராவிட மாடல் நாயகரும், தமிழக முதலமைச்சருமான தளபதியார் அவர்கள் வருகிற 11.03.2024 - திங்கட்கிழமை அன்று தர்மபுரி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்.

இதனையொட்டி





கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் இன்று (08.03.2024 - வெள்ளிக்கிழமை) மதியம் 03 30 மணிக்கு கிருஷ்ணகிரி ஸ்ரீ தேவராஜ் மஹால் திருமண மண்டபத்தில்

தமிழக உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சரும்,

கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமையிலும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும், ஓசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் எம்எல்ஏ ஆகியோரது முன்னிலையில் இந்த அவசர செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழகமூத்த முன்னோடிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள்,

மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள், பஞ்சாயத்து தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### டெல்லி நோக்கிய விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்கும் பா.ஜ.க. அரசு

# 147 விவசாய சங்கத் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைப்பு!

## விவசாயிகளின் போராட்டம் 24வது நாளை எட்டியது!

புதுடெல்லி, மார்ச் 8 -

டெல்லியில் விவசாயிகளின் முற்றுகைப் போராட்டத்தை தடுக்க, விவசாய சங்கத் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் கடந்த மாதம் 13ம் தேதி டெல்லி நோக்கி போராட்டத்தை துவங்கினர். விவசாயிகளுக்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு அடக்குமுறைகளை கையாண்டு வருகிறது.

விவசாயிகளின் போராட்டம் 24வது நாளை எட்டிய நிலையில், விவசாயிகளை டெல்லி செல்ல விடாமல் ஒன்றிய அரசும், ஹரியானா காவல்துறையும் தடுத்து நிறுத்தியுள்ளது.

இந்நிலையில் வருகிற 10ம் தேதி மதியம் 12மணி முதல் மாலை 4 மணி வரை ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் சம்யுக்தா கிசான் மோர்ச்சா அறிவித்துள்ளது.

பல மாநிலங்களைச் சேர்ந்த விவசாயி களின் மகா பஞ்சாயத்து வரும் 14ம் தேதி டெல்லியில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் விவசாயி களின் போராட்டத்தை ஒடுக்க காவல்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

தொடர் போராட்டங்களை ஒடுக்க, 147 விவசாய சங்க தலைவர்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதாக விவசாய சங்க தலைவர் சர்வான் சிங் பாந்தர் தெரிவித்துள்ளார்.

### தஞ்சை தெற்கு மாவட்டம்

# அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் மற்றும் நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட அதிராம்பட்டினம் நகரம், அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய 2 நகரக் கழகங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட இவ்வொன்றியங்களில், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகரப் பொறுப்பாளர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்சொன்னவாறு பிரிக்கப்பட்ட அதிராம்பட்டினம் கிழக்கு, அதிராம்பட்டினம் மேற்கு ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாக அமையும்.

**அதிராம்பட்டினம் கிழக்கு நகரம் (பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி) : வார்டுகள்** - 3, 4, 5,14, 15, 16, 21, 22, 23, 24, 25, 26, 27ஆகிய 13 வார்டுகள்

**அதிராம்பட்டினம் கிழக்கு நகரம்**

பொறுப்பாளர் : **இராம. குணசேகரன்**
34/1, அண்ணா தெரு,
அதிராம்பட்டினம்,
தஞ்சை மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. எஸ்.பி.கோடி, மாரியம்மன்கோவில் தெரு, 2. இ.சரஸ்வதி, சுப்பிரமணியகோவில் தெரு, 3. டி.முத்துராமன், பழஞ்செட்டித் தெரு, 4. பி. காதர் இப்ராஹிம், ஆறுமுககிடங்கி தெரு, 5. பி.செய்யது முகம்மது, கடற்கரை தெரு.

**அதிராம்பட்டினம் மேற்கு நகரம் (பட்டுக்கோட்டை சட்ட மன்றத் தொகுதி) : வார்டுகள்** - 1, 2, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 17, 18, 19, 20 ஆகிய 14 வார்டுகள்

**அதிராம்பட்டினம் மேற்கு நகரம்**

பொறுப்பாளர் : **எஸ்.எச். அஸ்லம்**,
92ஏ, நடுத் தெரு,
அதிராம்பட்டினம்,
தஞ்சை மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. என்.ஏ.முகம்மது யூசுப், மேலத் தெரு 2. சி. தில்லைநாதன், முத்தம்மாள் தெரு 3. ஏ.எம்.ஒய்.அன்சர்கான், புதுத் தெரு 4. திருமதி எஸ்.ரிபாயா, நடுத் தெரு 5.எம்.சேக்தாவூத், கீழத் தெரு.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### டெல்லியில் போராட்டத்தில் பங்கேற்ற

# விவசாயி சுட்டுக்கொலை: நீதி விசாரணைக்கு உத்தரவு!

புதுடெல்லி, மார்ச் 8 –

டெல்லி முற்றுகை போராட்டம் நடத்திய விவசாயி சுபகரன்சிங் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில், நீதி விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹரியானா பஞ்சாப் எல்லையில் உள்ள கானவுரியில் கடந்த 21ம் தேதி போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது ஹரியானா காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுபகரன் சிங் என்ற 21 வயது விவசாயி கொல்லப்பட்டார். விவசாயி மரணமடைந்த விவகாரத்தில் பஞ்சாப் காவல்துறையினர் அண்மையில் கொலை வழக்குப்பதிவு செய்தனர். இந்நிலையில், விவசாயி சுபகரன் சிங் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரத்தில், நீதி விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பான வழக்கை விசாரித்த பஞ்சாப் ஹரியானா உயர்நீதிமன்றம், வழக்கு விசாரணையின்போது விவசாயிகள் மீது தடியடி நடத்தப்பட்டதா? அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு என்ன மாதிரியான குண்டுகள் பயன்படுத்தப்பட்டன, வழக்குப்பதிவு செய்வதற்கு ஏன் காலதாமதம்? சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்க தாமதமானது எதனால்? என்று ஹரியானா, பஞ்சாப் அரசுகளிடம் சரமாரியாக கேள்வி எழுப்பியது.

இதைத்தொடர்ந்து, விவசாயி சுபகரன் சிங் கொல்லப்பட்ட சம்பவத்தில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் 3 நபர் குழு விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. பஞ்சாப், ஹரியானாவை சேர்ந்த ஏடிஜிபி பதவியில் உள்ள தலா ஒரு காவல் அதிகாரி குழுவில் இடம்பெற உத்தரவிட்டுள்ளது.




நெல்லை கிழக்கு மாவட்டம் களக்காடு நகர தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் "திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் களக்காடு தேரடி திடலில் நகரச் செயலாளர் மணிசூரியன் தலைமையில் மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், ஒன்றியச் செயலாளர்கள் ராஜன், செல்வ கருணாநிதி, நகர் மன்றத் தலைவர் சாந்தி சுபாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார். உடன் ஞானதிரவியம் எம்.பி. மாநில பேச்சாளர் சூரியசேவியர், தொகுதி பார்வையாளர் ஜோசப் ஸ்டாலின், சுடலைக்கண்ணு, ஆரோக்கிய எட்வின் உள்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளனர்.

# மோடி சுட்ட வடைகள்.. ( எல்லாமே ஊசிப்போச்சு ) 6

வாயில் வடை சுடுவது என்று சொல்வார்களே... அதற்கு 100 விழுக்காடு பொருத்தமானவர் ஒருவர் உண்டென்றால் அது மோடிதான். அவர் ரயில் நிலையத்தில் தேநீர் விற்றதாகச் சொன்னதே, அவர் வாயில் சுட்ட வடைதான் என்பதை தேசம் பின்னர் புரிந்து கொண்டது.

2014 ல் அவர் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டதில் தொடங்கி அவர் பிரதமராக இந்தியாவை ஆண்ட இந்த 10 ஆண்டுகளில் மோடி சுட்ட ஊசிப் போன வடைகளை மக்கள் மன்றத்தில் பந்தி வைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

‘குஜராத்தை வளர்ச்சி அடைந்த மாநிலமாக மாற்றிவிட்டார் மோடி’ என்று விலை போன ஊடகங்களும், வலதுசாரி அரசியலை நிலைநிறுத்தவிரும்பிய அரசியல் தரகர்களும் தொடர்ந்து மக்கள் மன்றத்தில் ஒரு கருத்துருவாக்கத்தை உருவாக்கினர்.

**ஆனால் உண்மை அதுவா ? கடந்த சில நாட்களுக்கு முன் வெளியான செய்தி ஒன்றைப் பார்த்தோம். குஜராத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த 1995 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரே ஒரு அரசு மருத்துவக் கல்லூரி கூட அம்மாநிலத்தில் கட்டப்படவில்லை.**

**2001-ல் இருந்து 2014 வரை மோடி அம்மாநிலத்தின் முதலமைச்சராக இருந்ததை நாம் இங்கே குறிப்பிட வேண்டும். தான் ஆட்சி செய்த குஜராத்தில் ஒரே ஒரு மருத்துக்கல்லூரியைக் கூட கொண்டு வராத மோடிதான் இந்தியா முழுவதும் தரமான மருத்துவத்தைத் தருவேன் என்று வாயில் வடை சுட்ட வல்லுநர்.**



குஜராத்தின் வறுமையை பிரதிபலிக்கும் புகைப்படம்

தான் பிரதமரானால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்று மோடி சுட்ட வடையின் இன்றைய நிலை என்ன தெரியுமா ? பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளை விடவும் இந்தியாவில் வேலையின்மை விகிதம் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

**உங்களுக்கு நினைவிருக்கிறதா ? அமெரிக்கர்கள் இந்தியாவில் வேலைக்காக் காத்திருக்கும் நிலை உருவாகும் என்று மோடியின் ஆதரவாளர்கள் 2014 ல் சொன்னபோது, மெய்சிலிர்த்துப் போனவர்கள் பலர். அவர்கள் எல்லாம் இன்று கூனிக் குறுகிப் போகும் படி சமீபத்தில் ஒரு நிகழ்வு நடைபெற்றது..**

**இஸ்ரேல் - பாலஸ்தீன போர் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், சமீபத்தில் உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் போன்ற பா.ஜ.க. ஆளும் மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்கள் கட்டுமானப் பணிக்காக இஸ்ரேலுக்கு வேலைக்குச் செல்ல நீண்ட வரிசையில் காத்திருந்த காட்சியை இந்தியா கண்டது.**

**அவர்களிடம் போர் நடைபெறும் சூழலில் அங்கே வேலைக்குச் செல்வதன் காரணம் என்ன என்ற கேள்வி எழுப்பப்பட்ட போது, “பட்டினியால் இங்கே சாவதை விட அங்கே வேலைக்குச் செல்வதால் உயிர் போனாலும் பரவாயில்லை” என்பதாக அந்த இளைஞர்கள் சொன்ன பதில்களை சமூக வலைத்தளங்களில் கண்டபோது மோடி இந்தியாவை எங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் என்று நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருந்தது.**



இஸ்ரேலுக்கு வேலைக்கு செல்வதற்காக வரிசையில் காத்திருக்கும் வடஇந்தியர்கள்

மோடியின் ஆட்சியில் இந்தியாவில் வேலை கேட்டு அமெரிக்கர்கள் வரிசையில் நிற்பார்கள் என்று சொன்ன மோடி ஆதரவாளர்கள் சுட்ட வடை ஊசிப் போய் துர்நாற்றம் வீசுகிறது.மோடியின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால், அடிப்படைவாத அரசியலால் வேலைவாய்ப்பின்மை அதிகரித்தது மட்டுமல்ல, சிறு , குறு, நடுத்தர தொழில்களும் முற்றிலும் முடங்கிப் போயின.



**தமிழ்க் கேள்வி**
**தி.செந்தில்வேல்**
மூத்த ஊடகவியலாளர்

**மேக் இன் இந்தியா திட்டம்** என்ற ஒரு வடையை மோடி சுட்டார். உலகின் பல்வேறு நாடுகளில் இருக்கும் நிறுவனங் களும், இந்தியாவில் தங்கள் உற்பத்தியைத் தொடங்குவார்கள் என்று சொன்னார். நிலைமையோ தலைகீழாக உள்ளது.இதுவரை உலகின் பல நாடுகளுக்கு ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்த திருப்பூர் உள்ளிட்ட நகரங்கள் மோடியின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் இருளில் மூழ்கும் நிலையும், மிகச்சிறிய நாடான வங்கதேசம் ஆயத்த ஆடைஏற்றுமதியில் முன்னணி நாடாகவும் உருவாகியுள்ளது.

**கருப்புப் பண மீட்பு வடை :**

நான் ஆட்சிக்கு வந்தால் வெளிநாடுகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணத்தை மீட்பேன். அப்படி மீட்கப்படும் கருப்புப் பணத்தை இந்தியர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் ரூபாய் 15 லட்சம் கிடைக்கும் என்று ஒரு இமாலய வடையைச் சுட்டார் மோடி. அதைத் தன் தேர்தல் அறிக்கையிலும் சொன்னார்.

பா.ஜ.க-வின் 2014ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் அறிக்கையில், பக்கம் 5 ல் அவர்கள் கொடுத்த வாக்குறுதியில் கருப்புப் பணம் அனைத்தும் மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதே. ஆனால், இதுவரை இல்லாத அளவிற்கு மோடி ஆட்சிக்கு வந்த பின் தான் சுவிஸ் வங்கிகளில் இந்தியர்களின் நிதி பல்லாயிரம்கோடிஅதிகமாகக்குவிந்துள்ளது என்ற புள்ளி விவரங்கள் அனைத்து ஊடகங்களிலும் வெளியாகின.



பணமதிப்பிழப்பின்போது வங்கிகளின் வாசலில் காத்திருந்த மக்கள்

**விஜய் மல்லையா தொடங்கி, நீரவ் மோடி, லலித் மோடி, என்று இந்திய வங்கிகளில் பல்லாயிரம் கோடிமக்கள் வரிப்பணத்தை ஏப்பம் விட்டு ஏமாற்றியவர்கள் வெளிநாடுகளுக்கு மோடியின் ஆட்சியில் பாதுகாப்பாக தப்பிச் சென்றனர். அவர்களை இந்தியாவிற்கு அழைத்து வருவேன் வருவேன் என்று மோடி சுடும் வடைகளை இனியும் நம்புவதற்கு வட இந்தியர்கள் கூட தயாராக இல்லை.**

“கருப்புப் பணத்தை ஒழிக்கிறேன் பேர்வழி” என்ற பெயரில் சொல்லாமல் கொள்ளாமல் 500 ரூபாய் , 1000 ரூபாய் நோட்டுகளை இரவோடு இரவாக செல்லாது என்று மோடி அறிவித்தபோது மோடியின் அடிவருடிகள் புல்லரித்துப் போய் கரவொலி எழுப்பினார்கள்.

ஆனால், பொருளாதரத்தை நன்கு தெரிந்த அறிஞர்களோ மோடியின் இந்த நடவடிக்கையை பொருளாதார அறிவுக்கு ஒவ்வாத செயல் என்று கடுமையாக விமர்சித்ததோடு, இதனால் இந்தியப் பொருளாதாரம் பல ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லும் என்றனர். அவர்கள் சொன்னது போலவே ஆயிற்று.

செல்லாது என்று அறிவித்த 500, 1000 ரூபாய் நோட்டுகளில் பல லட்சம் கோடிகள் ரிசர்வ் வங்கிக்கு திரும்பாது, அவ்வாறு திரும்பாத பணமெல்லாம் கருப்புப் பணம். அவ்வாறு பல லட்சம் கோடி பணத்தை வைத்திருப்பவர்களுக்கு அது வெறும் வெற்றுக் காகிதம். இதன் மூலம் கருபபுப் பணம் ஒழிந்து விடும் என்றுசினிமாவைப் போல் திரைக்கதை எழுதி ரசித்த மோடி கூட்டம் 99 சதவிகித பணம் ரிசர்வ் வங்கிக்குத் திரும்பி வந்த செய்தி வந்த போது , அவர்களின் வடைக் கடையை மூடிவிட்டு ஓட்டம் எடுத்தனர்.



சிக்னல் கோளாறால் ஏற்பட்ட ஒடிசா ரயில் விபத்து (280–க்கும் மேற்பட்டோர் பலி)

ஆனால், மோடியின் இந்த முன்யோசனை இல்லாத செயலால் சாமானிய மக்கள் வங்கிகளின் வாசலிலும், ஏடிஎம் வாசல்களிலும் நீண்ட வரிசையில் காத்துக் கிடந்தனர். பலர் மாண்டு போயினர். இந்தியாவின் இருண்ட காலம் என்றே அதைச் சொல்லலாம். நாட்டில் என்ன நடக்கிறது என்று புரியாமல் மக்கள் பெரும் குழப்பத்தில் தள்ளப்பட்டனர். ஆனால், இது எது குறித்தும் கவலை இல்லாத மோடி, 50 நாட்கள் அவகசாம் கேட்டார். ஆண்டுகள் பல ஓடிவிட்டன. மோடியின் கருப்புப் பண ஒழிப்பு வடையும் ஊசி துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது.

**புல்லட் ரயில், நதிகள் இணைப்பு, ஸ்மார் சிட்டி, தூய்மை இந்தியா , டிஜிட்டல் இந்தியா, என்று மோடி சுடாத வடைகளே இல்லை எனலாம். “மோடி ஆட்சிக்கு வந்தால்இந்தியாவில் புல்லட் ரயில் ஓடும்” என்று சொன்னார்கள். ஆனால்,ரயில்களின் ஓடுபாதைகளையும், சிக்னல்களையும் கூட ஒழுங்காகப் பராமரிக்காததால் ரயில் விபத்துகளும் அதனால் உயிரிழப்புகளும் அதிகரித்ததே மிச்சம்.**

**‘தூய்மை இந்தியா’ என்றார்கள். கங்கை நதியைச் சுத்தப்படுத்தி மேம்படுத்த 20,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு என்றார்கள். நிலைமை என்ன தெரியுமா? கடந்த வாரம் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ‘கங்கையில் குளிக்கவே கூடாது’ என்று எச்சரிக்கும் அளவிற்கு கங்கை மாசுபட்டுள்ளது.**



மாசுபட்ட நிலையில் உள்ள கங்கை நதி

மோடி ஆட்சிக்கு வந்தால் இந்தியாவின் அண்டை நாடுகள், பகை நாடுகள் எல்லாம் அஞ்சி நடுங்கும் என்றார்கள். சீனா இந்திய எல்லைக்குள் ஊடுருவி ஒரு கிராமத்தையே நிர்மாணித்துவிட்டது.

மோடி ஆட்சிக்கு வந்தால் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உயர்ந்து 40 ரூபாயைத் தொடும் என்றனர். இன்று இந்தியரூபாயின்மதிப்புபெரும்வீழ்ச்சியடைந்து டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 82 ரூபாயைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது.

பட்டினித் தரவரிசைப் பட்டியலில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், ஆப்கன் போன்ற நாடுகளை விட மோசமாக உள்ளது. இப்படி மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியில் இந்தியாவில் வளர்ந்திருப்பது பா.ஜ.க. வின் சொத்து மதிப்பும், மோடியின் கார்ப்பரேட் நண்பர்கள் சிலரின் சொத்து மதிப்புமே தவிர சாமானிய இந்தியர்கள் இல்லை என்பதே மறுக்க இயலாத உண்மை.

**இதோ தேர்தல் வந்து விட்டது. மோடி தன் வடைச் சட்டியைத் தூக்கிக் கொண்டு மக்களிடம் வருவார். ஆனால் ஏற்கனவே மோடியின் ஊசிப் போன வடைகளால் உடல் உபாதைகளுக்கு ஆளாகியிருக்கும் நாம் இம்முறை மோடியின் வடைகளை குப்பைத் தொட்டிகளுக்கு அனுப்புவோம்.**




இந்தியா கூட்டணி தலைவர்கள்

பாசிச பா.ஜ.க.-வின் ஆட்சியை வீட்டிற்கு அனுப்புவோம். சமச்சீரான, சமூக நீதியை உள்ளடக்கிய வளர்ச்சி இந்தியா முழுமைக்கும் கிடைக்க இந்தியா கூட்டணியை ஆதரிப்போம்.!

**(தொடரும்...)**



இராமேஸ்வரத்தில் சுற்றுலா சிறப்பு பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்து, இராமநாதபுரத்தில் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லரை விற்பனை நிலையத்தை போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் லிட், மேலாண் இயக்குநர் க.சா.மகேந்திர குமார், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் லிட், மண்டல மேலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, இராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் கே.டி பிரபாகரன், இராமநாதபுரம் நகர் மன்றத் துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், காரைக்குடி மண்டலம், பொது மேலாளர் ஆர். சிங்கார வேலு, வட்டார போக்குவரத்து அலுவலர் ஐ.சேக் முகம்மது , துணை மேலாளர்கள் நாகராஜன், நலங்கிள்ளி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ஆ.ரவிச்சந்திர ராமவன்னி மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்தும்,பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் தொடர் பொய் பரப்புரையையும் கண்டித்து கழகக் கொடியை கையில் ஏந்தி “இது மோடி சுட்ட வடை” என்ற தலைப்பில் பொது மக்களுக்கு துண்டு பிரசுரம் மற்றும் வடை வழங்கும் நூதனப் போராட்டம் டவுன் 4 ரத வீதிகளிலும் நெல்லைப் பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று வடை மற்றும் துண்டு பிரசுரங்களை வழங்கினார். நிகழ்வில் அன்டன் செல்லத்துரை,அருள்,மாரிமுத்து, கேபிள் குமரேசன்,சுப்ரீத் சுப்பிரமணியன்,லெனின், சுப்பையா, பாஸ்கர், பத்மா,மேரி, பிந்து,ஆனிராக்லேன்ட், ராஜேஸ்வரி,ஷெட்டி,மகாராஜன், செந்தில் குமார்,வினோத்,மைக் மணி,மில் குமார்,பால் கட்டளை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மோடி வடித்த முதலைக் கண்ணீர்!

நான். அலுவலகத்தை விட்டு இறங்கும் போது. அந்தச் சாலை முழுவதும் தண்ணீர். கால் முழுமையாக நனைந்து விட்டது. அப்புறம் ஏறின பிறகு தான் என்னவென்று கேட்டால்? மழையும் பெய்யவில்லை வேறு எந்தக் குழாயும் உடையவில்லை. அது 'முதலைக் கண்ணீர்' என்று சொன்னார்கள்.

ஒரு மனிதர் - ஒரு நாற்பது பேர் வரை இறந்து போய் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் எனக்குத் தெரிந்து அமைச்சர்கள் களத்தில் நின்றார்கள். அதிகாரிகள் களத்தில் நின்றார்கள். ஒரு வேளை சோற்றுக்கு வாய்ப்பில்லாத ஒரு மனிதன் கூட, வெள்ளத்தின் காரணமாக சாப்பாடு இல்லாதவர்களுக்கு கொண்டு போய் சோறு கொடுத்ததைப் பார்த்திருக்கிறோம். அந்தக் காலத்தைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசாத ஒரு மனிதர். தேசிய பேரிடர் கூட்டணியினுடைய தலைவராக இருக்கக் கூடிய மோடி, இன்றைக்கு தமிழ்நாடு அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லை என்று பேசுகிறார் என்றால் . அவர் வடித்த கண்ணீர் தான் இது வரைக்கும் வந்திருக்கிறது. அது 'முதலைக் கண்ணீர்'. அது ஒரு நயா பைசாவுக்கும் பிரயோசனப் படாது.

'பா.ஜ.க. இதயத்தில் தமிழ்நாடு இருக்கிறது' என்று சொல்லி இருக்கிறார். தமிழ் நாட்டோட இதயத்தில் பா.ஜ.க. இருக்கிறதா? அதைத்தான் நான் கேள்வி கேட்க விரும்புகிறேன். இந்த இடைப்பட்ட காலத்தில் உத்தரப்பிரதேசத்தில் ஒரு டிராக்டரில் சென்றவர்கள் அந்த டிராக்டர் கவிழ்ந்து. 22 பேர் இறந்து போனார்கள் என்று சொன்ன உடனே உடனடியாக நிவாரணம் அறிவிக்கிறார். குஜராத் வெள்ளத்திற்கு நிவாரணம் அறிவிக்கிறார். ஆனால் தமிழ்நாட்டிற்கு ஒரு நயா பைசாவும் கொடுக்காத இவர் எங்களுக்காக 'கண்ணீர் வடிக்கிறார்' என்றால் அது 'முதலைக் கண்ணீரை'த் தவிர வேறு ஒன்றுமில்லை.

சென்னை மெட்ரோ, விமான நிலையம் மாதிரியான பெரிய திட்டம் 1000 கோடி ரூபாய் மதிப்பில் நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்களை சென்னைக்கு கொடுத்து இருப்பதாக மோடி பேசி இருக்கிறார். மெட்ரோ ரயில் இரண்டாவது பேஸ்க்கு அவர் பணம் கொடுக்கவில்லை. தமிழ்நாடு அரசாங்கம் தான் இப்போது வரை பணம்கொடுத்துக் கொண்டு இருக்கிறது.

ஒரு பொய்யை பேசுவதற்காக ஒரு மனிதர் அங்கே இருந்து இங்கே வருகிறார், நமது செலவில். அதாவது உங்கள் செலவிலும் என் செலவிலும் இங்கே வந்து, அந்தப் பொய்யைச் சொல்லிவிட்டுப் போகிறார். விமான நிலையம் விரிவாக்கத்திற்கு நிறைய காசு அவர் கொடுப்பார். அவர் அதனை அதானிக்குத் தான் விற்கப்போகிறார். 6 விமான நிலையங்களை ஏற்கனவே அவர் அதானிக்குத் தான் விற்றார். இதனையும் கொடுப்பதற்காக தன்னுடைய நண்பருக்காக கொடுப்பதற்காக - அதனைச் செய்திருக்கிறாரே தவிர வேறு ஒன்றுமில்லை.

நான் சிம்பிளாகக் கேட்கிறேன், நான் பசியோடு இருந்த போது; என் வீடு மழையில் இடிந்தபோது; என் வீடு மழையில் முழுவதுமாக மூழ்கிப்போன போது;, என்னுடைய ஆடு. மாடுகள் அழிந்து போன போது, ஒரு வார்த்தை; பேசுவதற்கு அவர் நாக்குவரவில்லை, எனவே அவர் பேசுவதை எதையுமே கேட்பதற்கு நான் தயாராக இல்லை. அவர் பரம்பரை ஆட்சி என்று சொன்னார் என்றால் அதற்கு சரியான சாம்பிள் இராமர் தான். அதற்குமேல் எதனையும் நான் சொல்ல விரும்பவில்லை.

தேர்தல் பத்திரத்தைப் போன்றதொரு முறைகேடு இருக்க முடியுமா? இவர் ஊழலைப் பற்றிப் பேசுகிறார். இன்றைக்கு இங்கே இருக்கக் கூடிய நிறுவனங்களை எல்லாம் கெடுத்து விட்டார்கள் என்று பேசி இருக்கிறார். தேர்தல் பத்திரத்தில் எத்தனை ஆண்டுகள் ஆகின்றது , எத்தனை ஆயிரம் கொடுத்து இருக்கிறார்கள். மொத்தம் எத்தனை தேர்தல் பத்திரங்கள். இன்றைக்கு எஸ்.பி.ஐ. வங்கியின் ஸ்டேட்மெண்ட் எடுத்துக் கொண்டால் ஜூன்30 ஆம் தேதி வரை எனக்கு டைம் வேண்டும். பா.ஜ.க.வினுடைய கொள்ளைக் கூட்டாளியாக ஸ்டேட் பேங்க் நிறுவாகம் இருக்கிறது.

அது தான் நிலைமை என்றால் உச்ச நீதிமன்றம் என்றைக்கு கேட்டதோ, அன்றைக்கே எங்களுக்கு இவ்வளவு நாள் ஆகும் என்று சொல்லி இருக்க வேண்டும். இன்றைக்கு வந்து சொல்கிறார்கள் எங்களுக்கு இவ்வளவு நாள் ஆகும் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு தினசரி அன்றாடம் வேலை பார்க்கின்ற ஒரு மனிதரை கொண்டு போய் விட்டால் கூட ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணி சொல்லி விடுவார்கள்.

அப்புறம் போதைப் பொருள் மொத்த விற்பனை வியாபாரியே அவர் தான். எப்படி? மத வெறி போதைப் பொருள் விற்பனை வியாபாரி. இந்தியா முழுவதும் அதைத்தான் அவர் செய்து கொண்டு இருக்கிறார். எந்தப் போதையால் நாடு அழியும் என்றால், மிகப் பெரிய போதை, மதவெறியை ஏற்றுவது தான். அதை அவர்தான் செய்து கொண்டிருக்கிறார். அதனுடைய பிதாமகன் அவர்தான்.

அவர் இன்றைக்கு நிறைய பேசினார். அவர், ஆன் லைனில் போட்டால் பிராடு வராதாம். அதனால் அவர்களுக்கெல்லாம் வருத்தமாகப் போய் விட்டதாம். அவர்களுடைய டபுள் என்ஜின் சர்க்கார் இருக்கக் கூடிய குஜராத், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், அசாம்.

அசாம் தமிழ்நாட்டை விட சிறிய மாநிலம். ஆன் லைனில், வருடத்திற்கு 6 ஆயிரம் ரூபாய் போடுவோம் என்ற திட்டத்தின் மூலம் 8 இலட்சத்து 35 ஆயிரம் போலி கணக்குகளில் வந்தது. மோடி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அசாம் முதலமைச்சர் விசாரணைக்கு உள்ளாக்கப்படவேண்டும். இவர்கள் இதனை எல்லாம் செய்ய மாட்டார்கள்.

அதாவது குஜராத்தில் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு, உத்தரப்பிரதேசத்தில் இரண்டு லட்சத்து 65 ஆயிரம் பேருக்கு, மத்தியப் பிரதேசத்தில் இரண்டு லட்சத்து 51 ஆயிரம் பேருக்கு அசாமில் 8 இலட்சத்து 35 ஆயிரம் பேருக்கு மொத்தம் இந்தியா முழுவதும் 42 இரட்சம் பேருக்கு, நான் ஆன்லைனில் செய்தால் யோக்கியமாக செய்வேன் என்று சொல்லிவிட்டு, மூவாயிரம் கோடியை என்னுடைய வரிப்பணத்தை தன்னுடைய கூட்டாளிகளுக்கு தெரிந்தே டபிள் என்ஜின் சர்க்கார் என்று வைத்துக் கொண்டு கொடுத்தவர் அவர்.

**கனகராஜ்**
மூத்த தலைவர்
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

ஒரே ஒரு பேங்க் அக்கவுண்டில், ஏழரை இலட்சம் பேர்களுக்கு ஆயுஸ்மான் பாரத் நோயாளிகளுக்குக் கொடுத்த பணத்தை திருடியது யார்? இதனை நான் சொல்லவில்லை சி.ஐ.ஜி. கேட்கிறது. இன்றைக்கு வரைஅந்தக் குற்றவாளிகளை எங்கே கொண்டு வந்து வைத்து இருக்கிறீர்கள் ?

அவர் சொல்கிறார் 'நாடு தான் எனது குடும்பம்' அப்படி என்றால் குடும்பச் சொத்து இவருடைய சொத்து, இவருடைய சொத்து, இவருடைய நண்பருடைய சொத்து, அவர் 16 வயதினிலே கதையை இப்போது புதியதாக சொல்லி இருக்கிறார்.

16 வயதில் இருந்து, இவர் சொன்ன கதையையெல்லாம் மூன்றாம் கிளாசில் முதலை பிடித்த கதை பொய் என்று சொல்லி விட்டார்கள். அடுத்து ரெயில்வே ஸ்டேஷனில் டீ வித்த கதையை சொல்லிட்டாங்க, உங்கள் வயதை தாண்டி அதற்குப் பின்னால் தான் ரயில்வே ஸ்டேசனே அந்த ஊரில் வந்தது என்று சொல்லி விட்டார்கள். இவர் படித்ததாக கூறிய என்டர் பொலிட்டிக்கல் சைன்ஸ் தவறு என்று சொல்லிவிட்டார்கள்.

இவைகளை யெல்லாம் தாண்டி இவர் 16 வயதினிலே என்ற கதையைப் படிக்க ஆரம்பித்து இருக்கிறார். இந்தக் கதையெல்லாம் உண்மையில் என்ன வென்றால், அவர் தைரியமாக பேசினால்கூட எல்லாக்குற்றச்சாட்டுகளுக்கும் பதில் சொல்லக் கூடிய நிலையில் அவர் இருக்கிறார்.

அவர் சொல்லி இருக்கிறார். உங்களுக்கு உறுதி தருகிறேன். தவறு செய்தவர்கள் நான் கட்டாயம் தண்டிப்பேன் என்று சொல்லி இருக்கிறார். 2024 இல் இந்தியாக் கூட்டணி வெல்லும் போது அதில் மிகப்பெரிய, மிக ஏராளமான கொலைக ளுக்கும் அல்லது நிறுவனங்களை சீரழித்ததற்கும், கொள்ளைகளுக்கும் பதில் சொல்ல வேண்டிய நபராக, முதல் நபராக நரேந்திர மோடி தான்இருப்பார். அது தான் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமை.

அவர் சொல்கிறார், நாங்கள் 'தெர்மல் பவர் பிளான்'எல்லாம் கொண்டு வந்துட்டோம்' என்று கூறுகிறார்.

இரண்டு இலட்சம் கோடி ரூபாய்க்கு வாங்கி நான்கு இலட்சம் கோடி ரூபாய்க்கு குஜராத்தில் இருக்கக் கூடிய நிறுவனத்திற்கு விற்று அந்த இரண்டு இலட்சம் கோடி ரூபாய் எங்கே போனது? என்று கேட்காமல் பொத்தி பொத்தி பாதுகாக்கிறார் இல்லையா? அவற்றிற்கெல்லாம் அவர் தான் பதில் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு அவர்பேசியதை நான் பிரதமர் பேசியதாக பார்க்கவில்லை. ஒரு பாலிடீசன் என்கிற முறையில்பேசி இருக்கிறார். அரசு நிகழ்ச்சி என்றாலும் பேசமாட்டார். இரண்டு எம்.பி. இருந்தார்கள், கனிமொழி இருந்தாங்க, அமைச்சர்கள் எ.வ.வேலு, கீதா ஜீவன் இருந்தாங்க, அவர்கள் பெயரைக் கூட சொல்லவில்லை. அங்கே பொய் பொய்யா பேசினார். அவர் பொய் மட்டும் தான் பேசுவார்.

தூத்துக்குடியில் துறைமுக விரிவாக்கம் 2013 இல் நிதி அமைச்சராக ப.சிதம்பரம் இருந்த போது அறிவித்தது.

2014 இல் கூட்டணியில் இப்போது இருக்கின்ற ஜி.கே. வாசன் போக்குவரத்து அமைச்சராக இருந்த போது டி.பி.ஆர்.வெளியிட்டார் ஜனவரியில்.

2014 ல் அருண் ஜெட்லி அதற்கு பணமும் ஒதுக்கினார். அதற்குப் பிறகு பத்து வருடமாக அந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டவர் நரேந்திர மோடி. ஆனால் பத்து வருடமாக கிடப்பில் போட்டாங்க அவங்க, இதனை நங்கள் தான் செய்தோம் என்று சொல்கிறார். அந்தப் பொய்யை என்ன சொல்வது?

இங்கே பேசிய மணி சார் சொன்னது முக்கியமான விஷயம். இளம் தலைமுறையை பாதிக்கின்ற விஷயம். இந்தச் செய்தி பிப்ரவரி 28 ஆம் தேதிய செய்தியின் கிளிப்பிங். இந்த செய்தி தீக்கதிரிலும் வரவில்லை, முரசொலியிலும் வந்ததில்லை. இது 'எக்னாமிக் டைம்ஸ்' பத்திரிகையில் வந்திருக்கு. 3300 கிலோ, 3.3 டன் நர்கோட்டிங்ஸ் குஜராத்தில் பிடிக்கிறாங்க. அதில் ஐந்து வெளிநாட்டு நபர்களை அதில் பிடிக்கிறாங்க, அதன் மதிப்பு இரண்டாயிரம் கோடி ரூபாய் பெருமானம். இது பிப்ரவரி 28 ஆம் தேதிய செய்தி.

இந்தக் கோபம், நரேந்திர மோடிக்கு இந்திய நாட்டின் இளைஞர்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருந்தால், அன்றைக்கு இதே குதி குதித்து இருக்க வேண்டும் இல்லையா, குஜராத்தில் போய் இதை பேசி இருக்க வேண்டும் இல்லையா.

ஒரு பிரதமர் என்கிற முறையில், இந்த நாட்டில் போதைப் பொருட்களை நான் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்ல வேண்டும். இந்தியாவில் இது வரை அதிகமாக எங்கேயாவது போதைப் பொருட்கள் பிடிபட்டு இருக்கிறது என்று சொன்னால் அவரே சொன்னார் 5 சதவிகிதம் தான் பிடிபடுகிறது, அந்த 5 சதவிகிதத்திலே இந்தியாவில் நம்பர் ஒன் மாநிலம் எது என்றால் குஜராத்.

எனவே போதைப் பொருள் வியாபாரிகளை வைத்து இருப்பவர்கள் அவர்கள் தான். அது ஈசியா இருக்கு என்று நினைக்கிறாங்க. ஏன் என்றால் இது சென்னைக்கு வர மாட்டேன் என்கிறது , ஏன் கொச்சிக்கு வர மாட்டேன் என்கிறது, ஏன் ஜவஹர்லால் நேரு போர்ட்டுக்கு வரவில்ல. ஏன் குஜராத்தில் மட்டும் வருகிறது என்கிற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமா இல்லையா.

3.3டன்கொஞ்சம்கூடநியாயமில்லாமல், எப்படி பேசுகிறார்கள் என்று பாருங்கள். இது மிகவும் பழைய செய்தியாக இருந்தாலும் பரவாயில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால் மணி சார் சொன்னதில் பர்ஷனலாக அட்டாக் செய்யக்கூடாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் பொதுவாக மக்கள் மத்தியில் என்ன இருக்கு என்றால் குடும்பம் இல்லை என்றால் தவறு செய்ய மாட்டார்கள். என்ற எண்ணம் இருக்கு.

செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு குடும்பம் இல்லைதான், ஆனால் அவர்கள் அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் சிறைக்கு சென்றாரா இல்லையா? இவரே வெஸ்ட் பெங்காலுக்கு போகும் போது மம்தா பானர்ஜி அவர்கள் ஊழல் செய்யவில்லை, ஏன் என்றால் அவர்களுக்கு குடும்பமே இல்லை என்று சொல்வாரா இவர்?

இந்த மாதிரியான லாஜிக்கலா அதனை நாங்கள் கன்வென்ஷன் செய்கிறார்கள். அது தவறு. அதாவது மோடியின் குடும்பமே, அதானிக்கு பல கோடி சொத்து சேர்த்த, சேர்த்தது சம்பந்தமாக ஏற்கனவே பல விஷயங்கள் வந்து இருக்கு. அவரை தனி நபர் என்று சொல்லாதீங்க. அதனால் அவர் காசு வாங்க மாட்டார் பணம் வாங்க மாட்டார் என்று யாரும் சொல்லாதீங்க.

இப்போது தேர்தல் பத்திரம் சம்பந்தமான விஷயங்கள் வருகின்றது. அடிப்படையான கேள்வி என்ன வென்றால், தி.மு.க. ஊழல் கட்சி, காங்கிரஸ் ஊழல் கட்சி, இந்தியாவில் இருக்கின்ற எல்லா கட்சிகளும் ஊழல், நீங்கள் ஊழலை ஒழிக்க வந்த உத்தமர், தி.மு.க. வெளியிட்டா நான் வெளியிடுகிறேன் என்று நீங்கள் ஏன் பேசுகிறீர்கள். நீங்கள் வெளியிடுங்கள்.

2014 பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் 12 இடங்களில் வெளிப்படைத் தன்மை என்கிற வார்த்தையை உபயோகித்து இருப்பார்கள். 2019 இல் 10 இடத்தில் வெளிப்படைத்தன்மை என்கின்ற வார்த்தையை உபயோகித்து இருப்பார்கள். இப்படி யாருமே சொல்லவில்லை.

இப்படி எழுதி வைத்துக் கொண்டு தேர்தல் பத்திரத்தில் திருட்டுத் தனம். பி.எம். கேர்ஸில் திருட்டுத் தனம். பாரினில் இருந்து ஒரு அரசியல் கட்சி பணம் வாங்கக் கூடாது என்பதில் திருட்டுத் தனம். இதை யெல்லாவற்றையும் மறைப்பதற்கு ஒரு சட்டத்தை மாற்றுவது.

அதனால் தான் நான் சொல்கிறேன். நீங்கள் ஒரு விரலை நீட்டுகின்ற போது நான்கு மடங்கு உங்களை நோக்கி விரல்கள் நீட்டுகிறது என்கின்ற உணர்வை நினைக்காத ஒருமனிதராக அவர் நடந்து கொள்கிறார்.

இவர்களோடு போட்டோ எடுத்ததே தவறு என்றால், அந்த 20 கோடி ரூபாய் கொடு என்று சொல்லி என்னிடம் ஆபாச வீடியோ இருக்கு என்கிற வரை தலைவரா நியமித்தவரை என்ன சொல்லலாம்.

ஒரு சிம்பிள் லாஜிக், இவரும் நானும் போட்டோ எடுத்துட்டோம். நான் ஒரு தவறு செய்துவிட்டேன், எனவே இவர் குற்றவாளி என்று சொல்கிறீர்கள். சரி ஏற்றுக் கொள்கிறோம். ஆனா அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் இந்தக் குற்றவாளியையே மாவட்டத் தலைவராக ஆக்கிவிடுகிறார்கள். அதில் ஒட்டு மொத்தமாக குற்றம் சாட்டப் பட்டவர்களில் நான்கு பேர் பா.ஜ.க.வை சேர்ந்தவர்கள்.

இதில் என்னவென்றால், தர்மபுர ஆதினம் சாதாரண ஆள் இல்லை செங்கோலை எடுத்துக் கொண்டு போய் நிர்வகிக்கக் கூடிய பெரிய ஆள். அப்படிப் பட்டவரிடேமே பா.ஜ.க.வினர்போய் ஆபாச வீடியோ வெளியிடுவேன் என்று சொல்கிறார்கள் என்றால் பா.ஜ.க. வினரின் யோக்கியம்சம் என்ன?

இது வரை அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன? உங்களிடம் அதற்குப் பதில் இல்லை. எனவே பா.ஜ.க.வினர் யோக்கியர்களாக வேஷம் போடுவது என்பது தவறு. உங்கள் தலைமை அலுவலகத்தில் வேலை பார்த்த ஜோதிக் குமார் வீட்டில் ஈ.டி.சோதனை செய்ததே அது தவறாக சோதனை செய்து விட்டது என்று கண்டனம் செய்தார்களா, இல்லையே! அவர்கள் தவறாக செய்து விட்டார்கள் என்று சொன்னார்களா? இல்லையே!

**(நியூஸ் 18 தொலைக்காட்சி 'சொல்லதிகாரம்' விவாத நிகழ்ச்சி)**



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் பேராசிரியர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளரும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி, பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் குமுதா குமார், நகராட்சித் தலைவர் சுஜாதா, நகரச் செயலாளர் பி.பூங்காவனம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம், வாலாஜா ஒன்றியக் குழுத் தலைவர் சேஷா வெங்கட், ஒன்றியச் செயலாளர் எம்.சண்முகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், நகரப் பொருளாளர் ஏ.அமித், மாவட்ட தகவல்தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் யுவராஜா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கேப்ரியல், நகர மாணவரணி அமைப்பாளர் பாலாஜி, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் குமரவேல் மற்றும் பிரபு, அப்ரோஸ்,கணேஷ் மற்றும் கழக நிர்வாகிகள்கலந்துகொண்டனர்.

## சிறுமியின் மரணத்திற்கு தார்மீக பொறுப்பேற்று

# புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பதவி விலக வேண்டும்!

### புதுச்சேரி இரா. சிவா வலியுறுத்தல்!

*புதுச்சேரி, மார்ச் 8-*

புதுச்சேரி மாநில எதிர்கட்சித்தலைவர் இரா.சிவா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

புதுச்சேரி முத்தியால்பேட்டை சோலை நகரை சேர்ந்த தம்பதியினரின் ஒன்பது வயதான சிறுமி அதே பகுதியில் கடந்த 2-ஆம் தேதி மதியம் 1.00 மணியளவில் காணாமல் போனார். இது தொடர்பாக முத்தியால்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து ஐந்து தனிப்படைகள் அமைத்து தேடி வந்த நிலையில் நேற்று முன்தினம் சிறுமி தனது வீட்டின்அருகேஉள்ளவாய்க்காலில் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது அதிர்ச்சி அளிக்கிறது.

சிறுமியின் சடலம் மூட்டையாக கட்டி வாய்க்காலில் வீசியது யார்? மூன்று நாட்களாக ஊரையே சல்லடை போட்டு தேடிய சிறுமியின் சடலம் அருகே இருந்த வாய்க்காலுக்கு வந்தது எப்படி? அந்த வாய்க்காலை பல நூறு தடவை பார்த்தவர்கள் திடீரென இரவோடு இரவாக சிறுமியின் சடலம் வந்தது எப்படி என கேள்வி எழுப்புகிறார்கள். ஐந்து தனிப்படை போலீசாரின் தேடுதல் வேட்டை நீர்த்து போனது எப்படி? தேடுதல் வளையத்தை கிடுக்கி பிடிக்காமல் காவல் துறை அலட்சியமாக இருந்தது ஏன்? பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஆதரவாக வந்த மக்களின் போராட்டத்தை ஒடுக்க துணை இராணுவத்தை நிறுத்தியது ஏன்?

அருகில் இருந்த கேமராக்களை ஆராய்ந்து பார்த்ததில் சிறுமி அந்தப் பகுதியை விட்டு வெளியேறவில்லை என்று காவல்துறை முடிவு செய்தும், வீடு வீடாக தேடியும் ஏன் காவல்துறையினரால் கண்டுபிடிக்க முடியவில்லை? வீட்டில் சிறுமியை கொன்று, சடலத்தை பதுக்கி வைத்து மூட்டை கட்டி போட்டார்களா? இதில் காவல்துறை யாரையாவது காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடுகிறார்களா? காவல்துறையின் அலட்சிய தேடுதலே சிறுமியின் மரணத்திற்கு காரணம். வீதியெங்கும் போடப்பட்ட சி.சி.டிவி கண்காணிப்பு கேமராக்களால் எந்த பலனும் இல்லையா? சிறுமி சடலமாக கிடந்த வாய்க்காலுக்கு அருகே கஞ்சா புழக்கம் அதிகமாக இருந்திருக்கிறது. இது எல்லாம் தெரிந்தும் காவல் துறை விசாரணையை தீவிரப்படுத்தி கோல்டன் ஹவர் என்று சொல்லக்கூடிய 24 மணி நேரத்திற்குள் சிறுமியை மீட்காதது புதுச்சேரியில் சட்டம் ஒழுங்கு கட்டுப்பாட்டில் இல்லை என்பதையே குறிக்கிறது. கடந்த வாரத்தில் நரிக்குறவர் சமூகத்தை சேர்ந்த குழந்தையை காரைக்காலில் நல்லபடியாக கண்டுபிடித்ததை போலவே இக்குழந்தையையும் மீட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கை பொய்த்து போனது ஏன்?

புதுச்சேரியின் குழந்தைகள் நல ஆணையத்தின் தில்லுமுல்லுகளும் கட்டப்பஞ்சாயத்துகளும் வெளிச்சத்துக்கு வந்ததால் விசாரணை அறிக்கையின் மூலம் அம்பலப்பட்ட நிர்வாகிகள் கூண்டோடு ராஜினாமா செய்துள்ளார்கள். சிவசாமி தலைமையிலான இந்த குழு மீது 600 பக்கம் விசாரணை அறிக்கை சமர்ப்பித்தும் நடவடிக்கை எடுக்காதது ஏன்? ராஜினாமா செய்து ஓடியவர்கள் மீது இன்று வரை நடவடிக்கை இல்லாதது ஏன்? குழந்தைகள் நல ஆணையத்திற்கு புதிய நிர்வாகிகளை உடனே நியமனம் செய்ய வேண்டும். முடங்கி கிடக்கும் மகளிர் ஆணையத்திலும் செயல்படும் நிர்வாகிகளை உடனே நியமிக்க வேண்டும்.

புதுச்சேரியில் தலைவிரித்தாடும் கஞ்சாவும், போதை ஸ்டாம்ப், மது போன்றவைகளால் உள்ளூர் மக்களே அதிக அளவில் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் பெண்களும் குழந்தைகளும் பாதுகாப்பற்ற சூழலை உணர்கிறார்கள்.

சிறுமி இறந்தது குறித்து புதுச்சேரி அரசு வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும். மீண்டும் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வும், கண்காணிப்புகளை தீவிரப்படுத்தவும் வேண்டும். பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து காவல்துறை விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சிறுமியை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு உரிய நீதியை காலம் தாழ்த்தாமல் உடனே வழங்க வேண்டும். குற்றவாளிகள் மீது பாரபட்சமின்றி உச்சபட்ச தண்டனையை வழங்க வேண்டும். குழந்தையை பறிகொடுத்து வாடும் குடும்பத்திற்கு ரூபாய் 20 லட்சம் நிவாரணம் வழங்குவது என்பது கண்துடைப்பாக இருக்க கூடாது. அந்த குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். உரிமை கேட்டு போராடியவர்கள் மீது தடியடி நடத்திய காவல்துறையை வன்மையாக கண்டிக்கிறேன். உண்மையான குற்றவாளிகள் யார் என்று பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இந்த குற்றவாளிகளுக்காக நீதிமன்றத்தில் கழக வழக்கறிஞர்கள் யாரும் வழக்காட கூடாது என அறிவுறுத்தியுள்ளேன். உள்துறையை கையில் வைத்துக் கொண்டு மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களை கொச்சைப்படுத்தும் வகையில் அரசியல் செய்யும் புதுச்சேரி பா.ஜ.க.வையும் என்ஆர்.காங்கிரஸையும் வன்மையாக கண்டிக்கிறேன். போலி செய்திகளையும் அவதூறுகளையும் பரப்பும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

தான் ஒரு துணை நிலை ஆளுநர் என்பதை மறந்து, தமிழிசை சௌந்தரராஜன் முழு பா.ஜ.க. காரியகர்த்தா போல செயல்படுவதை தவிர்த்து பொறுப்புடன் செயல்பட வேண்டும். நாளை மாலை 4.00 மணிக்கு இண்டியா கூட்டணி சார்பாக அண்ணா சிலையில் இருந்து புறப்பட்டு காமராசர் சாலை வழியாக நேரு வீதி வழியாக சென்று தர்ணா போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கிறேன்.

கஞ்சா போதைப் பொருளை ஒழிக்க கோரியும், இறந்த சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டியும், இச்சம்பவத்திற்கு தார்மீக பொறுப்பேற்று புதுச்சேரியின் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பதவி விலக வேண்டியும் (8.3.2024) காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை இண்டியா கூட்டணி சார்பில் முழு பந்த் அனுசரிக்கப்படுகிறது. இதனால், தேர்வெழுதும் +2 மாணவர்கள் பாதிக்காத வகையில், பள்ளி கல்லூரி பேருந்துகள், மருத்துவமனை, பால், மருந்தகம் போன்றவைகளுக்கு விலக்கு அளித்து, பொதுமக்கள் பாதிக்காத வகையில் அனைவரின் பேராதரவோடும் உணர்வோடும் இப்போராட்டம் நடைபெறும். இவ்வாறு ஆர்.சிவா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

## வடமதுரை கிழக்கு, வடமதுரை மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, குஜிலியம்பாறை தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும்-கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் திண்டுக்கல் மேற்கு மாவட்டம், **வடமதுரை**, **குஜிலியம்பாறை** ஆகிய இரண்டு ஒன்றியங்கள், **வடமதுரை கிழக்கு**, **வடமதுரை மேற்கு**, **குஜிலியம்பாறை வடக்கு**, **குஜிலியம்பாறை தெற்கு** ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட **வடமதுரைகிழக்கு**, **வடமதுரைமேற்கு**, **குஜிலியம்பாறை வடக்கு**, **குஜிலியம்பாறை தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**வடமதுரை கிழக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்- 1.வேலாயுதம்பாளையம், 2.கானப்பாடி, 3.மோர்பட்டி, 4.புத்தூர், 5.சுக்காம்பட்டி, 6.சித்துவார்பட்டி, 7.கொம்பேறிபட்டி,8.சிங்கார கோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் அய்யலூார் பேரூர்.

**வடமதுரை மேற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்- 1.பாகானத்தம், 2.பிலாத்து, 3. தென்னம்பட்டி, 4. கொசவபட்டி, 5.குளத்தூர், 6.பாடியூர், 7. வேல்வார் கோட்டை, 8.சிங்காரகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் வடமதுரை பேரூர்.

**குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்- 1.திருக்கூர்ணம், 2.ஆர்.வெள்ளோடு, 3.ஆலம்பாடி, 4.கோட்டானத்தம், 5.தோளிப்பட்டி, 6.கருங்கல், 7.டி.கூடலூர், 8.லந்தகோட்டை ஆகிய 8 ஊராட்சிகள் மற்றும் பாளையம் பேரூர்.

**குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்- 1.புதுக்கோட்டை, 2.ஆர்.கோம்பை, 3. வடுகம்பாடி, 4.வாணிக்கரை, 5.சின்னலுப்பை, 6.உல்லிய கோட்டை, 7.மல்லப்புரம், 8.கூம்பூர், 9.கரிக்காலி ஆகிய 9 ஊராட்சிகள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



திருப்பத்தூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் பேராசிரியர் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி, மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் நாட்றாம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.சாமுண்டி, கந்திலி தெற்கு ஒன்றிய செயலாளர் டி.அசோக்குமார், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா, மாவட்ட அணிகளின் து.அமைப்பாளர்கள் ரஜினி, சக்கரவர்த்தி, பார்த்திபன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# ‘நீங்கள் நலமா’ திட்டம்: பொதுமக்களிடம் அமைச்சர்கள் கருத்துக் கேட்கும் காட்சிகள்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு நேற்று முன்தினம் (06.03.2024), நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் காணொலிக் காட்சி வாயிலாக தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார். உடன் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று முன்தினம் (06.03.2024) சிந்தாதிரிப்பேட்டை, சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார். உடன் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



நேற்று முன்தினம் (06.03.2024) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் உள்ள மின்னகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ‘நீங்கள் நலமா’ திட்டத்தின் கீழ் பயனாளிகளை தொடர்பு கொண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வாயிலாக பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் மின் சேவைகள் குறித்து நேற்று முன்தினம் (06.03.2024) கருத்துகளை கேட்டறிந்தார். உடன் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு நேற்று முன்தினம் (06.03.2024), கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால் பயன்பெற்ற தூத்துக்குடி, காஞ்சிபுரம், சேலம், வேலூர், சென்னை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திருப்பத்தூரிலுள்ள முகாம் அலுவலகத்திலிருந்து தொலைபேசி வாயிலாக நேரடியாக தொடர்பு கொண்டு நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறிந்தார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று முன்தினம் (06.03.2024) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (06.03.2024) தொடங்கி வைத்த ‘நீங்கள் நலமா’ திட்டத்தை முன்னிட்டு பயனாளிகளைத் தொடர்பு கொண்டு துறை ரீதியான நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களை கேட்டறியும் திட்டமாகும். அதன் தொடர்ச்சியாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களை தொலைபேசியில் அழைத்து நலம் விசாரித்து அவர்கள் தேவை குறித்து கேட்டறிந்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் நேற்று முன்தினம் (06.03.2024), சென்னை முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால் பயன்பெற்ற சென்னை, செங்கல்பட்டு, கடலூர், ஈரோடு, நீலகிரி, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தொலைபேசி வாயிலாக நேரடியாக தொடர்பு கொண்டு நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

## போதைப் பொருட்கள் எங்கிருந்து தமிழ்நாட்டிற்கு வருகின்றன?

# பிரதமரே, முதலில் உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆதாரப்பூர்வமான பதிலடி!

சென்னை, மார்ச் 8-

தமிழ்நாட்டில்தான் போதைப் பொருள்கள் கடத்தல் அதிகம் என்று சென்னையில் பிரதமர் மோடி பேசியுள்ளார். தமிழ்நாட்டிற்கு இவை எங்கிருந்து வருகின்றன? மாநிலங்களவையில் உள்துறை அமைச்சகம் அளித்த போதைப் பொருள் அதிகமாகக் கடத்தும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இல்லையே! போதைப் பொருள் கடத்தப்படுவதைத் தடுக்க தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் வருகின்றது. உண்மை இவ்வாறு இருக்க, பிரதமர் உண்மைக்கு மாறாகப் பேசலாமா? பிரதமர் மோடி அவர்களே, முதலில் உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

4-3-2024 அன்று சென்னையில் தரம் தாழ்ந்து பேசிய பிரதமர் மோடி,

“தி.மு.க. அரசின் ஆதரவால்தான் தமிழகத்தில் போதைப் பொருள்கள் வியாபாரம் செழித்து வருகிறது.

என் மனதை அரிக்கும் கவலையை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். தமிழகத்தைச் சேர்ந்த பெற்றோர் மனதிலும் ஆழ்ந்த கவலை உள்ளது.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் ஆதரவில், தமிழகத்தில் போதைப் பொருள்கள் தடையின்றி, அனைத்து இடங்களிலும் புழங்கி வருகிறது என்பதுதான் என் மனதை உருக்கும் கவலை.... இது அபாயத்தின் அறிகுறி, தமிழகத்தின் எதிரிகள்மீதான நடவடிக்கை, மேலும்விரைவுபடுத்தப்படும்.

இது மோடி அளிக்கும் “கியாரண்டீ”

**போதைப் பொருள்கள் எங்கிருந்து வந்தன?**

நன்றி! பிரதமர் மோடி அவர்களே, இந்தக் கொடுமையான போதைப் பொருள்கள் தமிழ்நாட்டிற்கு எங்கிருந்து வந்தன - வருகின்றன என்பதை அறிந்துகொள்ள, அனைத்து மாநிலங்களையும் ஆளும் பிரதமர், உள்துறை அமைச்சர் போன்ற ஒன்றியப் பொறுப்பிலிருக்கும் உங்களைப் போன்ற



“மனதை உருக்கும் கவலை” - எங்களுக்கும், தமிழ்நாட்டவருக்கும் இருப்பதால் பதில் கூறுங்கள்.

விமான நிலையங்கள், கப்பல் துறைமுகங்களில் யாருடைய அதிகாரங்கள் உள்ளன என்றாலும், போதைப் பொருள்கள் தமிழ்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றனவா? தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றனவா? வெளிநாட்டு, பன்னாட்டு மாஃபியாக்கள் மூலம்தானே கோடி கோடியாக உள்ளே நுழைகின்றன!

பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள்கள் தங்களது “டபுள் எஞ்ஜின்” நிர்வாகம் நடத்தும் குஜராத்திலிருந்துதான் இந்திய நாட்டின் மாநிலங்களுக்குள் நுழைந்து மக்களை சீரழிக்கின்றன என்ற தகவல்கள் பொய்யா, மெய்யா?

**உள்துறை அமைச்சகம் ஒப்புக்கொண்ட உண்மைகள்!**

1.2023 டிசம்பர் 13 அன்று மாநிலங்களவையில் ஒன்றிய உள்துறை அமைச்சகம் தெரிவித்த விவரங்களின் அடிப்படையில், குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட், மணிப்பூர், உத்தரப் பிரதேசம், அரியானா ஆகிய மாநிலங்கள் போதைப் பொருள்கள் கடத்தப்படுவதில் முதன்மை இடத்தில் உள்ளன. இந்த மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் போதைப் பொருள் புழக்கம் குறைவானதே! என்றாலும், அதை ஒழிக்கத் தமிழ்நாடு தி.மு.க. அரசு இடையறாத முயற்சியை மேற்கொள்ளத் தவறியது உண்டா?

பெரிதும் போதைப் பொருள்கள் இந்தியாவிற்குள் ஊடுருவுவது குஜராத்தில் உள்ள முந்த்ரா துறைமுகம் வழியாகத்தான் என்று ஊடகங்களில் வந்த செய்தித் தொகுப்புகள் - தரவுகள் அருகில் தரப்பட்டுள்ளன. குஜராத் முந்த்ரா துறைமுகம் யாருடையது?

இந்தியாவின் “பிரபல ஏழையான” அதானியின் துறைமுகம்!

அந்த அதானி யார்? நம்முடைய பிரதமர் மோடிக்கு மிக நெருக்கமானவர்; அவருடன் சேர்ந்து அவரது விமானத்திலேயே செல்லும் அரிய வாய்ப்புப் பெற்றவர்!

‘நடவடிக்கை’ எடுக்கவில்லையா? நாங்கள், எடுத்தது செய்திதானே என்று பதில் கூறலாம்!

அதே பதில் உங்களுக்கு மட்டும்தானா?

**அரசு ஆக்கரீதியாக செயல்படவில்லையா?**

தமிழ்நாட்டு தி.மு.க. அரசும், முதலமைச்சரும், காவல்துறையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கவில்லையே! இது பற்றி தமிழ்நாடு (தி.மு.க.) அரசின் சட்ட அமைச்சர் ரகுபதி அவர்கள் தெளிவான விளக்கம் தந்துள்ளாரே!

“1. போதைப் பொருள்களைத் தடுப்பதற்காக 10.8.2023 அன்று மாநில அளவிலான காவல்துறை அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி, இத்தகைய போதைப் பொருள்கள் தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது என்பதற்கான நடவடிக்கையை முதலமைச்சர் எடுத்தார்.

2. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அமைச்சரே குட்கா வியாபாரத்தில் உடந்தையாக இருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. அமைச்சராக இருந்தவர்மீதும், மற்ற அதிகாரிகள் மீதும் வழக்குத் தொடருவதற்கான கோப்பு நீண்ட நாள் தமிழ்நாடு ஆளுநரிடமிருந்தது - பிறகு, அவர் (சில காலம் முன்புதான்) வழக்குத் தொடர அனுமதி அளித்துள்ளார்! அதுமட்டுமா?

**கஞ்சா கடத்தியவர்களை வரவேற்பது பா.ஜ.க.தானே!**

தி.மு.க.வில் இருந்த ஒருவர் சம்பந்தப்பட்டதாக விசாரணை நடப்பதாலேயே அக்கட்சிமீது பழி சுமத்தி விடுவது நியாயமா?

அவரை உடனே கட்சியிலிருந்து விலக்கி, நடவடிக்கை எடுக்க தி.மு.க. தலைமை தயங்கவில்லையே!

தமிழ்நாட்டில் கஞ்சா கடத்தல், போதைப் பொருள் விற்பனைத் தொழில்களில் ஈடுபட்டவர்களை சிவப்புக் கம்பளம் விரித்து, பா.ஜ.க. தனது கட்சியில் சேர்த்துக்கொண்டது.

இப்படி தி.மு.க.மீது பழி போட்டு, தேர்தல் வாக்குகளை வாங்க குறுக்குவழி தேடலாமா?

தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி உடைந்தது மட்டுமல்லாமல், புதிதாக எவரும் அக்கூட்டணிக்கு வரவும் தயாராக இல்லை; பிரதமர் மோடி நான்கு முறை தமிழ்நாட்டிற்கு வந்தும் இந்நிலையே என்கிற கோபத்தாலும், தேர்தல் தோல்வி என்ற பயத்தாலும் இப்படி ஜன்னி கண்டவர் போல் பிதற்றுவது, அவர் வகிக்கும் பிரதமர் பதவிக்கு அழகா? யோசிக்கவேண்டும்!

**உங்கள் நோயைக் குணப்படுத்திக் கொள்ளுங்கள்!**

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு - தனது குஜராத் நடப்புகளை மறந்துவிட்டு, இப்படி தமிழ்நாட்டைப் பார்க்கிற பிரதமர் மோடியிடம், “மருத்துவரே உங்கள் நோயைக் முதலில் குணப்படுத்திக் கொள்ளுங்கள்” என்றுதான் தமிழ்நாட்டவர் கூறுவர்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் அவர்கள் தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் சார்பில் நாதிகுப்பம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற BLA–2, BLC, தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜிஎம்.எல்.ஏ., ஆம்பூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் இ.ஜி.சுகவனம் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஞானவேலன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் அ.செ.வில்வநாதன், மு.அசோகன், கோவிந்தம்மாள் பெருமாள், சங்கீதபாரி, வீ.வடிவேல், ராமநாதன், குமார், பொன்னம்பலம், சோபாவெங்கடேசன், தசரதன், வி.ஜி.அன்பு, சி.சிவகுமார், தமிழரசி, லட்சுமி பொன்னம்பலம், ஆசிப், செல்வம், முருகன், ஏழுமலை மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

## திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை பகுதி, 33வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை பகுதி, 33வது வட்டச் செயலாளர் சுப்ரீத் (எ) சுப்பிரமணியன் அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **பா.தளவாய்** (49ஏ, பெருமாள் மேலரத வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி) அவர்கள் 33வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### தருமபுரி மேற்கு மாவட்டம்

## தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு, தருமபுரி தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும்-கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள தருமபுரி மேற்கு ஒன்றியத்திலிருந்து, பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத்திற்குள் வரும் **3 ஊராட்சிகள் சேர்த்து, தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு, தருமபுரி தெற்கு** ஆகிய 3 ஒன்றியக் கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வரும் தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு ஆகிய ஒன்றியச் செயலாளர்கள் தொடர்ந்து அப்பொறுப்பு வகிப்பார்கள். புதியதாக பிரிக்கப்பட்ட தருமபுரி தெற்கு ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர் ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டு, பிரிக்கப்பட்ட **தருமபுரி கிழக்கு, தருமபுரி வடக்கு, தருமபுரி தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**தருமபுரி கிழக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள்-1.முக்கல் நாயக்கன்பட்டி, 2. நல்லசேன அள்ளி, 3.உங்கரான அள்ளி, 4.நூல அள்ளி, 5.செட்டிக்கரை, 6.கொண்டகரஅள்ளி, 7.திப்பிரெட்டிஅள்ளி, 8.வே.முத்தம்பட்டி, 9.கோடுஅள்ளி ஆகிய 9 ஊராட்சிகள்.

**தருமபுரி கிழக்கு ஒன்றியம்**

செயலாளர் : **கே.பி.சக்திவேல்**
1/60, மாரியம்மன் கோவில் தெரு,
கவலைக்காரன்கொட்டாய்,
அன்னசாகரம் அஞ்சல்,
தருமபுரி மாவட்டம்- 636 704.

**தருமபுரி வடக்கு ஒன்றியம்:**

ஊராட்சிகள்- 1.மூக்கனூர், 2.அக்கமனஅள்ளி, 3. நாயக்கனஅள்ளி, 4.குப்பூர், 5.வெள்ளோலை, 6. கொண்டம்பட்டி, 7.வெள்ளாளப்பட்டி ஆகிய 7 ஊராட்சிகள்.

செயலாளர் : **என்.ஏ.மாது**, எ.நடுப்பட்டி,அக்கண அள்ளி அஞ்சல்,தருமபுரி வட்டம் & மாவட்டம்-636 704.

**தருமபுரி தெற்கு ஒன்றியம்:**

ஊராட்சிகள் - 1.கே.நடுஅள்ளி, 2. அளேதருமபுரி, 3.செம்மாண்டகுப்பம், 4.ஆண்டிஅள்ளி, 5.கிருஷ்ணாபுரம், 6.புழுதிக்கரை, 7.கோணங்கிநாயக்கன அள்ளி ஆகிய 7 ஊராட்சிகள்.

**தருமபுரி தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : டாக்டர் எம்.பிரபு ராஜசேகர், சின்னேரி மோட்டுப்பட்டி கிராமம்.புழுதிக்கரை அஞ்சல், தருமபுரி மாவட்டம் -635 202.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## வலைத்தளத்தில் வலம் வருவது!




### மீஞ்சூர் பேரூரில் இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல் துண்டுப் பிரசுரம்!

*மீஞ்சூர், மார்ச் 8-*

மீஞ்சூர் பேரூர் கழகம் சார்பில் 3.3.2024 அன்று காலை மீஞ்சூர் பேரூராட்சி 12 வது வார்டு பச்சையம்மன் நகர் பகுதியில் பாண்டியன் தெரு, சிமெண்ட் சாலை பணியை துவக்கி வைத்தும் திராவிட மாடல் நாயகர் முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க தி தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. மாநில தலைவர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பிரிதிநிதி கே.சசிகுமார் ஏற்பாட்டில் இல்லம் தோறும் கழக அரசின் சாதனை துண்டு பிரசுரங்களை மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ்உதயன் தலைமையில் மீஞ்சூர் பேரூராட்சி தலைவர் திருமதி ருக்மணி மோகன்ராஜ், ப.அலெக்சாண்டர், தி மீ.வீ. கோதண்டம், நா.மோகன்ராஜ், பேரூர் துணை செயலாளர் வ. மோகன், மீஞ்சூர் பேரூராட்சி மன்ற உறுப்பினர் க.பாஸ்கர் ஆகியோர் முண்ணிலையில் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை விளக்கி துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

## நாமக்கல் மாவட்டத்திற்கு

# புதிதாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி உருவாக்கம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

*சென்னை, மார்ச் 8-*

நாமக்கல் மாவட்டம் 1997ஆம் ஆண்டு 2 வருவாய் கோட்டங்கள், 8 வட்டங்கள், 30 வருவாய் பிர்க்காக்களுடன் (Firka) உருவாக்கப்பட்டது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நாமக்கல் மாவட்டத்தின் மக்கள் தொகை எண்ணிக்கை 17,26,601 ஆகும். 169 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உள்ளிட்ட, பிற செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் சங்கங்களையும் சேர்த்து மொத்தம் 816 சங்கங்கள் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.

இந்தியாவில், நாமக்கல் மாவட்டம், கோழிப் பண்ணை, லாரி பாடி பில்டிங், முட்டை உற்பத்தி, ஆமணக்கு எண்ணெய் பதப்படுத்தும் தொழில் ஆகிய பல முக்கிய தொழில்களுக்கு பெயர் பெற்றதாகும்.

சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, சேலம் மாவட்டத்தில் 45 கிளைகள் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் 29 கிளைகள், என மொத்தம் 74 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் 98.70 கோடி ரூபாய் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் 55.15 கோடி ரூபாய் பங்குத்தொகையுடன் இவ்வங்கி செயல்பட்டு வருகிறது. மேலும், 2020-21 ஆம் ஆண்டில் 22.17 கோடி ரூபாய், 2021-22 ஆம் ஆண்டில் 20.37 கோடி ரூபாய் மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் 18.24 கோடி ரூபாய் என தொடர்ந்து இலாபம் ஈட்டியுள்ளது.

சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டு பகுதியில் உள்ள நாமக்கல் மாவட்டதிற்கென ஒரு புதிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி உருவாக்கிட வேண்டும் என்பது இம்மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கை ஆகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அக்கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையிலும், நாமக்கல் மாவட்ட விவசாயிகளின் நலன் கருதியும் மற்றும் பல்வேறு தொழில் துறையினர் பயன்பெறும் வகையிலும், பல்வேறு சிறப்புகளை கொண்ட நாமக்கல் மாவட்டத் திற்கென பிரத்தியேகமாக ஒரு புதிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை உருவாக்கிட முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க நேற்று முன்தினம் (6.3.2024) நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உருவாக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அமலாக்கத்துறை தொடர்ந்து அனுப்புகிறது!

# பா.ஜ.க.,வில் இணைந்தால் சம்மன் நிறுத்தப்படும்!

## டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் விமர்சனம்!

புதுடெல்லி, மார்ச் 8–

பா.ஜ.க.,வில் தாம் இணைந்து விட்டால் அமலாக்கத்துறையில் இருந்து தமக்கு அனுப்பப்படும் சம்மன் உடனே நிறுத்தப்பட்டு விடும் என்று ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முதலமைச்சரு மான அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அரவிந்த் கெஜ்ரிவால் வெளியிட்டுள்ள சமூகவலைத் தளப் பதிவில்,

அமலாக்கத்துறை மூலம் துன்பப்படுத்தப் பட்டு பலர் பா.ஜ.க., வுக்கு இழுக்கப்படுகிறார்கள் என்று கண்டனம் தெரிவித்துள்ளார். அமலாக்கத்துறையின் சோதனைக்கு பிறகு நடத்தப்படும் விசாரணை



யின்போது, சம்பந்தப்பட்டவரிடம் கேட்கப்படும் முதல் கேள்வி என்னவென்றால், நீங்கள் எங்கு செல்ல போகிறீர்கள் என்பதுதான். அதாவது, நீங்கள் பா.ஜ.க.,வுக்குச் செல்ல போகிறீர்களா அல்லது சிறைக்கு செல்ல போகிறீர்களா என்பதுதான் அந்த கேள்வி என்று அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க.,வில் இணைவதாக அவர்கள் தெரிவித்துவிட்டால் உடனே வழக்கிலிருந்து விடுவிக்கப் படுவார்கள் என்றும், ஒருவேளை பா.ஜ.க.,வில் இணைய மாட்டோம் என்று தெரிவித்துவிட்டால் சிறைக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார். குற்றம் செய்தவர்கள் தான் பா.ஜ.க.,வுக்கு செல்வார்களே தவிர, குற்றம் செய்யாதவர்கள் அல்ல என்று அவர் குறிப்பிட்டுள்ளார். சிறையில் இருக்கும் தமது கட்சியைச் சேர்ந்த மணிஷ் சிசோடியா, சத்யேந்தர் சிங் ஜெயின் உள்ளிட்டோர் பா.ஜ.க.,வில் இணைவதாக அறிவித்துவிட்டால் இன்றைக்கே அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்படு வார்கள் என்று அரவிந்த் கெஜ்ரிவால் விமர்சித்துள்ளார். எந்த குற்றமும் செய்யாமலும், பா.ஜ.க., வில் இணையாமலும் உள்ளதால்தான் அவர்கள் தற்போது வரை சிறையில் இருக்கிறார்கள் என்றும் பதிவிட்டுள்ளார். தாம் கூட பா.ஜ.க.,வில் இணைவதாக அறிவித்தால், தமக்கு அனுப்பப்படும் அமலாக்கத்துறையின் சம்மன் உடனே நிறுத்தப்படும் என்றும் கெஜ்ரிவால் விமர்சித்துள்ளார். ஆனால், அது ஒருபோதும் நடக்காது என்றும் கெஜ்ரிவால் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, கெஜ்ரிவால் வெளியிட்டுள்ள மற்றொரு சமூக வலைத்தளப் பதிவில்,

திரிணாமுல் காங்கிரஸ் எம்.எல்.ஏ. டப்பாஸ் ராய் வீட்டில் ஜனவரி மாதம் அமலாக்கத்துறை ரெய்டு நடத்தியதாகவும், மார்ச் மாதத்தில் அவர் பா.ஜ.க.,வில் இணைந்தவுடன் அவர் மீதான விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதிலிருந்தே சி.பி.ஐ., அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகளை பா.ஜ.க., எப்படி தவறாக பயன்படுத்துகிறது என்பது நன்கு தெரிகிறது என்று அரவிந்த் கெஜ்ரிவால் குறிப்பிட்டுள்ளார்

### திருப்பத்தூர் மாவட்டம்

**ஜோலார்பேட்டை கிழக்கு, மேற்கு மத்திய ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில்**

### திருத்தம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் வெளியிடப்பட்ட திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில்;

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **மூக்கனூர் ஊராட்சி ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியக் கழகத்தின்** கீழ் இயங்கும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 06.03.2024

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

# தி.மு.க.வை எந்தக் கொம்பனாலும் அழிக்க முடியாது!

தி.மு.க. ஓர் அரசியல் சிவப்புப் பாஸ்பரம் ! நீரில் மூழ்கி அமைதி காக்கும். அதனை வெளியே எடுத்து விடாதே! வெளியே எடுத்தால் எடுப்பவனுக்கே ஆபத்து! தி.மு.க ஓர் அரசியல் அணு மின்சாரம்: தொடாதே! அதனைத் தீண்டினால் அபாயம்! தி.மு.க அமைதி காக்கும் அரசியல் வெடி மருந்துக் கிடங்கு :அதன் மீது வீணாக தீக்குச்சியை உரசிப் போடாதே! தி.மு.க.வை மோதிக்கூட்டம் மட்டுமல்ல; எந்தக் கொம்பனாலும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது!

ஓராண்டுக் காலமாகச் சொகுசுப் பேருந்துப் பயணத்தில் சவாரி செய்து உளறல் மொழிகளைப் பல தமிழக வீதிகளில் கொட்டி வந்த அண்டப் புளுகரும், ஆகாசப் புளுகருமான அண்ணாமலைகளுக்குப் பாராட்டுத் தெரிவிக்க தமிழ்நாட்டுக்கு வருகை தந்தார் பிரதமர் மோடி. பல்லடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவருக்குத் திடீர் அரசியல் ஞானோதயம் ஏற்பட்டுள்ளது. "தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஆகியோர் சிறப்பான ஆட்சியைக் கொடுத்தனர்" என்று புகழாரம் சூட்டியுள்ளதோடு, காங்கிரஸ். தி.மு.க. தமிழகத்தின் வளர்ச்சிக்குப் பாடு படவில்லை. தி.மு.க.வினால் அரசியலுக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளது: நான் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதால், எதிர்க்கட்சிகள் என் மீது கோபத்தில் இருக்கின்றனர்!. இப்படிப் பேசி இருக்கிறார் மோடி. முன்னாள் பிரதமர் வாஜ்பாய், அத்வானி மற்றும் பா.ஜ.க. முன்னணித் தலைவர்கள் எல்லோரும் ஜெயலலிதா மற்றும் அவரது ஆட்சியைப் பற்றிப் பேசிய பேச்சுகளை மறந்து விட்டாரா? அதைப்போல வாஜ்பாய் அத்வானி போன்றவர்களை ஜெயலலிதா அவமானப்படுத்திப் பேசியதையும் மறந்து விட்டாரா மோடி? அவற்றையெல்லாம் தனக்கு வசதியாக அரசியல் அரங்கிற்குச் சொல்லாமல் தவிர்த்தது ஏன்?

யாருடைய வளர்ச்சிக்காகப் பாடுபட்டார் மோடி? பத்தாண்டு பா.ஜ.க ஆட்சியில் நாட்டு மக்களுக்குக் வளர்ச்சிக்காகப் பாடுபட்டாரா? தான் ஓர் ஏழைத்தாயின் மகன் என்று கூறி. 10 இலட்ச ரூபாய் மதிப்புள்ள கோட்டு. சூட்டுகளைப் போட்டுக் கொண்டு 2015 ஆம் ஆண்டு இந்தியக் குடியரசுத் தின அணிவகுப்பில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஒபாமாவுடன், விஸ்வரூபக் காட்சி தந்தவர்தானே இந்த ஏழைத் தாய் மகன் மோடி? இந்திய மக்களின் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் வரிப்பணத்தில் 90 முறைக்கு மேல் சொகுசு விமானத்தில் பயணம் செய்து வெளிநாடுகள் சுற்றி வந்தவர்தானே இந்த வளர்ச்சி நாயகன் மோடி? அம்பானி, அதானி, நீரவ் மோடி போன்ற பெருமுதலாளிகளுக்காக இந்திய மக்களின் வங்கிப் பணமான ரூபாய் 25 இலட்சம் கோடிக்கு மேல் அள்ளிக் கொடுத்துச் சூறையாடியவர் தானே இந்தச் சூராதி சூரர் மோடி!

"மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதியிலிருந்து தி.மு.க குடும்பம் கொள்ளையடித்த பணம் மீட்கப்பட்டுத் தமிழக மக்களுக்காகச் செலவிடப்படும். இது மோடியின் உத்தரவாதம்" என்று (04.03.2023): அன்று சென்னை ஒய்.எம்.சி.ஏ திடலில் நடைபெற்ற பா.ஜ.க. கட்சிப் பொதுக் கூட்டத்தில். இந்தியாவின் கோயபல்ஸ் மோடி பேசியிருக்கிறார்.

இந்திய இரயில் நிலையங்கள், துறைமுகங்கள், எல்.ஐ.சி போன்ற பொதுத்துறை நிறுவனங்களையெல்லாம் கார்ப்பரேட் முதலாளிகளுக்குத் தாரை வார்த்த வளர்ச்சி முறை பற்றிக் கூற வேண்டியது தானே மோடி? ஏன் பேச வில்லை?

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க.
தீர்மானக் குழுத் தலைவர்



பல்லடத்திற்கும், நெல்லைக்கும் சென்று வாய் ஜாலம் காட்டிப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, எம்.ஜி.ஆர். பற்றியும் ஜெயலலிதா பற்றியும் புகழ்மாலைகள் சூட்டிச்சென்றுள்ளார். அதே நேரத்தில் அ.தி.மு.க. கட்சியைப் பற்றியோ எடப்பாடி பழனிச்சாமிகள் போன்றவர்களைப் பற்றியோ எந்தவித விமர்சனம் செய்யாமல் சென்று இருக்கிறார் இந்த உத்தமபுத்திரர்! காரணம் என்ன? அவருடைய கொத்தடிமைகளாக 5 ஆண்டு காலம் இருந்து பணி புரிந்தார்கள் அல்லவா? கரப்சன், கலெக்சன், கமிஷன் போன்றவற்றில் கொடி கட்டிப் பறந்த எடப்பாடிகள், மோடி நடத்தி வரும் இந்துத்வா மத வெறி ஆட்சியில் அவர் செய்து வரும் சட்டவிரோத, மக்கள் விரோதச் செயல்கள் அனைத்துக்கும் சலாம் போட்டு உறுதுணையாகக் கைகட்டி, மெய் பொத்திக் கப்பம் கட்டிக் கொண்டிருந்தவர்கள் அல்லவா அவர்கள்? எடப்பாடி பழனிச்சாமிகளையும், அ.தி.மு.க.வையும் மோடி விமர்சிக்காததற்குக் காரணம் என்ன? தன்னுடன் மறைமுக உறவு இன்னும் அ.தி.மு.க வைத்திருக்கிறது என்பதைத் தவிர்க்கதானே? இன்னும் கூட்டணிக் கடையை விரித்துத் திறந்து வைத்திருக்கிறார் மோடி! அல்லது பா.ஜ.க கூட்டணிக்குள் அதைக் கொண்டு வருவதற்கு என்பது தானே வெட்டவெளிச்சமான செய்தி!

2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மதுரையில் பேசிய அமித்ஷா தமிழ்நாட்டில் ஜெயலலிதா தலைமையில் நடைபெறும் ஊழல் ஆட்சியை அகற்ற வேண்டும் என்றும், ஏப்ரல் 13, 2016 சட்டமன்றத் தேர்தலில் ஊழல் (Jayalalitha Government most Corrupt : Amit Sha) நடத்திக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவின் ஆட்சியை வீழ்த்த வாருங்கள் என்றும் அமித்ஷா பேசியதை மறந்து ஜெயலலிதா சிறப்பான ஆட்சி கொடுத்தார் என்று மோடி பேசுவது ஏன்?

"எம்.ஜி.ஆர். ஜெயலலிதா தமிழ்நாட்டில் சிறப்பாக ஆட்சியை நடத்தினர்" என்று பல்லடம் மற்றும் நெல்லை கூட்டங்களில் அவர்கள் மீது கரிசனம் ஏற்பட்டது போல் மோடி உளறியுள்ளார். எம்.ஜி.ஆர். பற்றி அவரது கட்சியில் இருந்த ஜெயலலிதாவும், அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரமும் என்ன சொன்னார்கள் என்று பார்க்கலாமா? எம்.ஜி.ஆர். ஆட்சி பற்றி அவரது அமைச்சரவையில் இடம் பெற்று இருந்த எஸ்.டி. சோமசுந்தரம் 1984 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். மீது வலுவான குற்றச்சாட்டுகளைச் சொன்னார். எம்.ஜி.ஆரை மீறிக் கொள்கை பரப்புச் செயலாளராகவும், இராஜ்ய சபை எம்.பி.யாகவும் இருந்த ஜெயலலிதாவின் தலையீடுகள் ஆட்சியிலும் கட்சியிலும் அதிகமாக இருந்தன. இந்த நிலையில் ஆத்திரப்பட்ட எஸ்.டி. எஸ். எம்.ஜி.ஆரிடமே நேரில் வருத்தப்பட்டு ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் பற்றிக் குறை கூறினார். டெல்லியிலும் தமிழ்நாட்டிலும் அவரது தலையீடுகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் எம்.ஜி.ஆர். கண்டுகொள்ளவில்லை. இதனால் மேலும் பிரச்சினைகள் ஆரம்பிக்க அமைச்சர் எஸ்.டி.எஸ். வசமிருந்த கலால் துறை பறிக்கப்பட்டது.

"சினிமாவில் வந்த எம்.ஜி.ஆரும், நடைமுறையில் உள்ள எம்.ஜி.ஆரும் ஒரே மாதிரியான குணங்கள் கொண்டவர்கள் அல்ல என்று மக்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அவர் இலஞ்சம் வாங்குகிறார்; தவறு செய்கிறார் என்று மக்கள் நம்புகிறார்கள்; அவர் சோதனைக்கு ஆட்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்தினேன்; அவர் இலஞ்சம் வாங்கவில்லை என்று சொல்லித் தப்பிக்க முடியாது;. தகுந்த ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. எம்.ஜி.ஆர். அமைச்சரவையிலுள்ள அமைச்சர்கள் மீது பல இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை ஒன்றிய அரசு, மாநில அரசுக்கு அனுப்பியது, ஆனால் அந்தப் பட்டியலை அமைச்சரவைக் கூட்டத்தில் கூட எம்.ஜி.ஆர். வைக்கவில்லை. "... இப்படி அ.தி.மு.க. கட்சியில் இருந்து கொண்டு எஸ்.டி.எஸ் அவர்கள் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டிப் பேசினார். அக் காரணத்தால் அவர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டதோடு கட்சியிலிருந்தும் நீக்கப்பட்டார். பிறகு அவருடைய ஆதரவாளரோடு செப்டம்பர் 5.1984 அன்று புதிய கட்சி தொடங்கினார்.

சரி: ஜெயலலிதாவினுடைய ஆட்சியின் சிறப்பு என்ன? மாதம் ஒரு ரூபாய் சம்பளம் வாங்குவேன் என்று சொல்லி அவர் முதலமைச்சராக இருந்த 5 ஆண்டுகளில் சட்டத்தை மீறி வருமானத்திற்கு புறம்பாக ரூபாய் 66 கோடி ரூபாய்க்கு மேல் சொத்து சேர்த்த வழக்கு நடைபெற்றதே. நீதிபதி மைக்கேல் டி குன்ஹா தீர்ப்பால். முதலமைச்சராக இருந்த நிலையிலேயே நான்காண்டுகள் சிறைத் தண்டனை பெற்று, கர்நாடக பரப்பன அக்ரஹாரச் சிறைக்குச் சென்ற அவரின் ஆட்சிச் சிறப்புகளைக் கூறுகிறாரா மோடி? அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை அடிமாட்டு விலைக்கு ஒரு முதலமைச்சரே வாங்கி. அதனால். கீழமை நீதிமன்றம் இரண்டு ஆண்டுகள் தண்டனை கொடுத்த பிறகு உச்ச நீதிமன்றத்தில். பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று நாடகமாடி மன்னிப்பு கேட்டாரே! அந்த ஜெயலலிதாவினுடைய ஆட்சி மக்கள் நலனில் அக்கறை காட்டிய சிறப்பான ஆட்சியா? இதுபோல பல ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்ட ஆட்சிதான் ஜெயலலிதா நடத்திய ஆட்சி என்பதை மறந்து மோடி பல்லடம், நெல்லைக் கூட்டங்களில் பேசி விட்டுச் சென்றிருக்கிறார்!

ஒன்றியத்தில் பிரதமராக இருந்த வாஜ்பாய் ஆட்சியைப் பற்றிக் கடுமையான குற்றச்சாட்டுகள் கூறி. 2001 ஆம் ஆண்டு சென்னை மெரினா கடற்கரையில் ஜெயலலிதா பாடுபட்ட பாவ வாக்கு கேட்டதை மறந்து விட்டாரா? 2016 ஆம் ஆண்டு 'மோடியா? லேடியா?' என்று பார்த்து விடலாம். நான் ஒரு முறை தவறு செய்து விட்டேன் என்பது உண்மை. இனி. எந்தக் காரணத்திலும், எப்போதும் பா.ஜ.க.வுடன் ஒட்டோ உறவோ இல்லை என்று ஜெயலலிதா பேசினாரே! அதை எல்லாம் மறைத்து மோடி பல்லடத்திலும் நெல்லையிலும் தமிழ்நாட்டு மக்களுக்கு அறிவுரை வழங்குகிறாரா?

தமிழ்நாட்டில் இருந்து தலித் ஒருவர் எல்.முருகன் என்பவர் ஒன்றிய மந்திரியாக ஆக்கப்பட்டுள்ளார் என்ற புதிய செய்தியைப் பிரதமர் மோடி கோமாளித்தனமாகப் பேசி இருக்கிறார். ஏற்கெனவே மத்தியில் வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி ஆட்சியிலும், மன்மோகன் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியிலும் தி.மு.க அமைச்சர்கள் பங்கேற்று பணியாற்றி இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆ. இராசாவும் பங்கேற்றுப் பணியாற்றி வந்திருக்கிறார் என்பதை கூற மோடி மறந்தது ஏன்? மலைவாழ் மக்கள் ஜாதியைச் சேர்ந்த இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை புதிய பாராளுமன்றக் கட்டிடம் திறப்பு விழாவிற்கு அனுமதிக்கவில்லை. கட்டி முடிக்கப்பட்ட இராமர் கோவில் திறப்பு விழாவுக்கும் அழைக்கப்படவில்லை. தேர்தலுக்காக நடத்திய நாடகத்தில் அவர் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களை பற்றிப் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது? அப்போது தாழ்த்தப்பட்ட சமூதாயம் பற்றிய அவருடைய எண்ணம்.செயல்பாடு எங்கே போனது?

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலுக்காக மட்டும் தொடங்கப்பட்ட இயக்கமல்ல; காலங்காலமாக அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சமூக நீதி கிடைக்கவும், கல்வி, வேலை வாய்ப்பு பெறவும், அரசியலில் ஆக்கமும்; ஊக்கமும் பெறவும் தான் தொடங்கப்பட்ட இயக்கம்! தந்தை பெரியார் கூறிய மானமும், அறிவும் பெறவும்; பேரறிஞர் அண்ணா, கலைஞரால் நிலை நாட்டப்பட்ட மக்களுக்கான நலம் பயக்கும் சட்ட, திட்டங்கங் களைத் தந்து முழக்கமிடும் கழகம்! இந்தியாவுக்கான திராவிட மாடல் ஆட்சியைத் தளபதி ஸ்டாலின் அவர்கள் தன் தோளில் தூக்கிச் சுமந்து வீர நடைபோட்டு வருகிறார். இதனை மோடிகள் தெரிந்து கொள்ள வேண்டும். "தி.மு.கழகத்தை முற்றிலுமாக அகற்றப்படும்; எங்கும் தேடினாலும் இனிக் கிடைக்காத நிலை ஏற்படும்" என்று எக்காளமிட்டுள்ளார் மோடி. இமயமலையை ஈக்களால் பெயர்க்க முடியுமா? நெருப்பைக் கரையான்களால் தின்ன முடியுமா? அது போலத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்தக் கொம்பனாலும் ஆட்டவோ, அசைக்கவோ, அழிக்கவோ, ஒழிக்கவோ முடியாது!

"பிரதமர் பதவியை தாழ்த்தும் வகையில் மோடி பேசி உள்ளார். தி.மு.க.வை அழிப்பேன் என்று கூறிப் பலர் அழிந்து போனதுதான் தமிழ்நாட்டின் வரலாறு. தோல்விப் பயத்தில் பிரதமர் அவதூறு பரப்புகிறார். ஆளுங்கட்சியாகச் செயல்படத் தெரியாத பா.ஜ.க., இனி நல்ல எதிர்க்கட்சியாக விளங்க எனது வாழ்த்துகள்" .... என்று தி.மு.க தலைவரும், முதல்வருமான தளபதி ஸ்டாலின்தான் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்!

"தமிழ்நாட்டில் இனி தி.மு.க இருக்காது.. தி.மு.க முற்றிலுமாக அகற்றப்படும் .. எங்குத் தேடினாலும் இனி கிடைக்காத நிலை ஏற்படும்..." என்று ஆணவ வெறியோடு கொக்கரித்துச் சென்றிருக்கிறார் இந்திய சர்வாதிகாரி ஹிட்லர் மோடி!

அவசர நிலை கண்டு அஞ்சாத இயக்கம் தி.மு.க.! பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டு பயப்படாத இயக்கம் தி.மு.க.! நெருக்கடி நிலையில் நெருப்பாற்றை நீந்தி வந்து நெஞ்சை உயர்த்தி, நிமிர்ந்து நிற்கிற இயக்கம்தான் தி.மு.க.! கட்டை விரலை நறுக்குவேன் என்றார் பெருந்தலைவர் காமராஜர். மூட்டைப் பூச்சிகளைப் போல் நசுக்குவேன் என்று சொன்னார் மூதறிஞர் இராஜாஜி. தி.மு.க.விற்கு கல்லறை கட்டுவேன் என்றார் எம்.ஜி.ஆர்! கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகள் இல்லை என்று எக்காளமிட்டார் ஜெயலலிதா! இவை அனைத்தையும் வென்று, மென்று, தின்று செரிமானம் செய்து செம்மாந்து நிற்கிற இலட்சக்கணக்கான தொண்டர்களைக் கொண்ட இயக்கம் தான் தி.மு.க.! திராவிட முன்னேற்றக் கழகம் மழைக்காலத்தில் பூத்த காளான் அல்ல; அது காலத்தால் அழிக்க முடியாத கற்கோட்டை: தி.மு.க. ஒன்றும் இடரும் மணல் வீடு அல்ல; என்றும் இடம்பெயராத இமயமலை! தி.மு.க.வை அழிப்பதற்கு மோடியல்ல; மோடியைப் போல ஆயிரம், ஆயிரம் சர்வாதிகாரிகள் எவர் வந்தாலும், எந்த கொம்பனாலும் அழிக்க முடியாது என்பதற்கு அரசியல் வரலாறு சாட்சி! அண்ணாவும், கலைஞரும்; பெரியார் என்னும் பகுத்தறிவு, சுயமரியாதை, அறவழிப் பாறைகளால் கட்டி எழுப்பிய மாபெரும் இயக்கம்தான் தி.மு. கழகம்! அதற்கான சாட்சிகளாகக் கடந்த கால வாஜ்பாய்களும், அத்வானிகளும், முரளி மனோகர் ஜோஷிகளும் இருந்து பார்த்தார்கள் என்பதை இன்றைய அரசியல் திடீர் மழைக் காளானாக வந்த மோடிகள் அறிந்து கொள்ள வேண்டும்! இப்பொழுது சர்வாதிகாரத்தை வீழ்த்தி, ஜனநாயகத்தைக் காப்பாற்றிட தளபதி மு.க.ஸ்டாலின் எழுப்பிய மதச்சார்பற்ற "இந்தியா கூட்டணி"யாகும். மோடி போன்ற கூக்குரல் எழுப்பும் கோமாளித்தனக் கூத்துகளுக்கு எல்லாம் அஞ்சி விடாது திராவிட முன்னேற்றக் கழகம்!



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் நடைபெற்ற முதல்வர் தளபதி பிறந்த நாள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளரும்,கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் சிறப்புரை யாற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தலைமைக் கழகச் பேச்சாளர் வரகூர்காமராஜ்,மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து,மானாமதுரைநகர்மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன்கென்னடி, மானாமதுரை நகர்கழகசெயலாளர் க.பொன்னுச்சாமி, மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதிலதாஅண்ணாதுரை, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதிபவானிகணேசன் ஆகியோர் உள்ளனர்.



விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், தண்டியனேந்தல் ஊராட்சி, பெரிய புளியம்பட்டி கிராமத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அரசு ஊராட்சி ஒன்றிய புதிய தொடக்கப்பள்ளியை திறந்து வைத்தார். உடன் மாவட்ட கவுன்சிலர் தங்கத் தமிழ்வாணன் இருந்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.3.2024) முகாம் அலுவலகத்தில், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகன் ஏ. முஸம்மில் அஹமது – எம்.பாத்திமா பர்ஸானா ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### மாநகராட்சி – நகராட்சி – பேரூராட்சிகளில்

# ரூ.1996.50 கோடியில் 215 அடிப்படை வசதித் திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு !

சென்னை, மார்ச் 8–

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்புடன் பல்வேறு மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ரூ.1,996.50 கோடி மதிப்பீட்டில் 215 அடிப்படை வசதி திட்டங்களை செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டி ருப்பதாவது: –

நகர்ப்புர பகுதிகளில் முழுமையான நீர் ஆதார பாதுகாப்பினை உறுதி செய்வது, அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது, கழிவுநீர், கசடு மேலாண்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரின் மறுசுழற்சி/மறு பயன்பாடு, கழிவு நீர் நிலைகளை புனரமைப்பது மற்றும் பசுமை வெளிகள், பூங்காக்கள் உருவாக்குவது உள்ளிட்ட நோக்கங்களைக் கொண்டு ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்புகளுடன், அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 (அம்ரூத் 2.0) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையி ன்சார்பில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ், ரூ.23.59 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டை நகராட்சியில், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் 24x7 குடிநீர் வழங்கல் முன்னோடித் திட்டத்தினை (24x7 water supply system to the selected pilot water zones) செயல்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், பல்வேறு நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் மொத்தம் ரூ.16.68 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் 34 பணிகளும், ரூ.4.70 கோடி மதிப்பீட்டில் பசுமை வெளிகள், பூங்காக்களை உருவாக்குவதற்கான 15 பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

மேலும், பல்வேறு பேரூராட்சிகளில் மொத்தம் ரூ.25.37 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் 93 பணிகளும், ரூ.13.03 கோடி மதிப்பீட்டில் பசுமை வெளிகள் மற்றும் பூங்காக்களை உருவாக்குவதற்கான 68 பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

மேலும், பொது மற்றும் தனியார் பங்களிப்பின் [Public Private Partnership Projects (PPP)] கீழ் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தினால் சென்னை பெருநகரத்திற்குட்பட்ட மண்டலம் X மற்றும் மண்டலம் XIII ல் 24x7 குடிநீர் வழங்கல் திட்டத்தை செயல்படுத்த ரூ.760.00 கோடி மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாநகராட்சி யில் கழிவுநீரை சுத்திகரித்து சிட்கோ (SIDCO) எஸ்டேட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு, நாளொன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் அளவுக்கு மறுபயன்பாட்டு நீரை வழங்கும் பொருட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ.245.00 கோடி மதிப்பீட்டிலும், மதுரை மாநகராட்சியில் சில தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டுகளில் முன்னோடி திட்டமாக 24x7 குடிநீர் வழங்கல் திட்டத்தை செயல்படுத்த ரூ.150.00 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் சேலம் மாநகராட்சியில் 24x7 குடிநீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்திட ரூ.758.13 கோடி மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.1,913.13 கோடி உத்தேச மதிப்பீட்டில் இத்திட்டப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்மூலம், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.1,996.50 கோடி மதிப்பீட்டில் 215 பணிகளை செயலாக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட நகரங்கள், நீர்நிலைகளை மேம்படுத்தவும் அதன் மூலம் குடிநீர் ஆதாரங்களை உறுதிப்படுத்தவும் கழிவுநீரை பாதுகாப்பான முறையில் சுத்திகரிக்கவும் ஏதுவாக அமையும். மேலும், பசுமை வெளிகள் மற்றும் பூங்காக்கள், இந்நகர மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும் வழிவகுக்கும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் விஜயாபதி கிராமத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 143 பயனாளிகளுக்கு ரூபாய் 75. 27 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று,இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின்,மகளிர் திட்ட அலுவலர் இலக்குவன்,ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி உள்பட பலர் உள்ளனர்.

### தமிழ் மூதாட்டி

# ஔவையார் திருவுருவச் சிலைக்கு இன்று மலர் வணக்கம் நிகழ்ச்சி!

## அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு!

*சென்னை, மார்ச் 8 -*

*ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருக்கும் புலவர் பெருமாட்டியருள் ஔவையாரின் அருமைத் திருப்பெயர் என்றும் அழியாமல் நிலைத்திருக்கும் திருப்பெயரும் தவப்பெயருமாகும்.*

*'அகர முதல எழுத்தெல்லாம்' என்பது போல ஔவை முதல அறிவெல்லாம் என்று அறிவுக்கே பரியாய நாமமாக ஔவையார் ஆண், பெண், இளைஞர், முதியர் என எல்லோராலும் வழிபாட்டுணர்ச்சியோடு வணங்கப்படுகிறார்.*

*அதியமானுக்காகக் காஞ்சியிலிருந்து ஆட்சிப்புரிந்த தொண்டைமானிடம் தூது சென்று நிகழவிருந்த போரை நிறுத்திய பெருமை மிக்கவர் ஔவையார். உலக வரலாற்றில் இரண்டு வேந்தர்களுக்கிடையில் தூது சென்ற பெருமடந்தையராகப் பெருமை கொண்டவர் ஔவையார் ஆவார்.*

*சேரமான் மாரிவண்கோவும், சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும் ஒருங்கிருப்பக் கண்டு உவந்து' என்றும் தமிழ் மூவேந்தர்கள் இவ்வாறே இருப்பீர்களாக' என அறிவுறுத்திய புலமைச் செல்வியார் ஆவார். நெடுமான் அஞ்சி போர்க்களத்தில் வேல் பாய்ந்து இறந்த போது, ஔவையார் வருந்திப் பாடிய கையறுநிலைப் பாட்டு மிகவும் உருக்கம் வாய்ந்தது.*

*சங்கப் புலமைப் பெருஞ்செவ்வியராகிய இப்பெருமாட்டியார் பாடியனவாக உள்ள ஐம்பத்தொன்பது பாடல்களுள் அகப்பொருள் பற்றியன இருபத்தாறாகும். எஞ்சிய முப்பத்து மூன்று பாடல்களுள் புறப்பொருளுக்குரியனவாய்ப் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.*

*மாந்தர் குலத்திற்குப் பெருமை சேர்த்த ஔவை பெருமாட்டியாரைப் போற்றும் வகையில் உலக மகளிர் நாளான இன்று (08.03.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையால், சென்னை காமராசர் சாலையில் (மெரினா கடற்கரை) அமைந்துள்ள ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தலும், தமிழ்ப் பெருமாட்டியின் திருவுருவப்படத்திற்கு மலர் வணக்க நிகழ்வும் நடைபெற உள்ளன. அமைச்சர் பெருமக்கள், மேயர், துணை மேயர், அரசு உயர் அலுவலர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள், பொது மக்களும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.*

### தென்காசி வடக்கு மாவட்டம்

# மேலநீலிதநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

*தென்காசி வடக்கு மாவட்டம், மேலநீலிதநல்லூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் வெற்றி விஜயன் (எ) விஜயகுமார் அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு.* **எம்.பால்ராஜ்** *(6/14, தெற்கு தெரு, அடைக்கலாபுரம், வண்ணிக்கோனேந்தல், தென்காசி மாவட்டம்) அவர்கள் மேலநீலிதநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.*

*ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை பதவி நீக்க அவசியமில்லை!

## சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு!

சென்னை, மார்ச் 8-

சனாதன பேச்சு தொடர்பான வழக்கில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு ஆகியோரை பதவிநீக்கம் செய்ய அவசியமில்லை என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் தீர்ப்பு வழங்கி உள்ளார். இதன் மூலம் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு, ஆ.ராசா எம்.பி. க்கு எதிரான கோ-வாரண்டோ வழக்குகள் முடித்து வைக்கப்பட்டு உள்ளது.



அண்மையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை காமராஜர் அரங்கில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்றார்.

இந்த மாநாட்டில் பேசிய உதயநிதி ஸ்டாலின், கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக் கட்ட வேண்டும். அப்படித் தான் இந்த சனாதனம். சனாதனத்தை எதிர்ப்பதை விட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம். சனாதனம் என்றால் என்ன? சனாதனம் என்கிற பெயரே சமஸ்கிருதத்தில் இருந்து வந்ததுதான். சனாதனம் சமத்துவத்திற்கும் சமூக நீதிக்கும் எதிரானது.

சனாதனம் என்பதன் அர்த்தம் என்ன? நிலையானது, அதாவது மாற்ற முடியாதது. யாரும் கேள்வி கேட்க முடியாது என்பதுதான் சனாதனத்திற்குரிய அர்த்தம். எல்லாவற்றையும் மாற்ற வேண்டும். எதுவுமே நிலையானது கிடையாது எல்லாவற்றுக்கும் நாம் கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காக உருவான இயக்கம்தான் இந்த கம்யூனிஸ்ட் இயக்கமும், திராவிட முன்னேற்ற கழகமும் என்று பேசினார்.

சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு சனாதனத்திற்கு எதிராக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியது பெரும் சர்ச்சையை கிளப்பி இருந்தது. அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோருக்கு எதிராக கோ வாரண்டோ வழக்கு நிலுவையில் இருந்தது.

திராவிட கொள்கைக்கு எதிராக கூட்டம் நடத்த அனுமதி கேட்டு திருவேற்காட்டை சேர்ந்த மகேஷ் கார்த்திகேயன் என்பவர் சென்னை உயர் மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன், சனாதான ஒழிப்பு மாநாட்டில் தமிழக அமைச்சர்கள் கலந்து கொண்டு பேசியதன் விளைவாகவே தற்போது திராவிட கொள்கைக்கு எதிராக கூட்டம் நடத்த அனுமதி கேட்டு வழக்கு தொடரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இன்னொரு பக்கம் இதே விவகாரத்தில் கோ-வாரண்டோ வழக்கும் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர் பாபு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டு.. நீதிபதி அனிதா சுமந்த் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வந்தது. இந்த வழக்கில் கடந்த மாதம் விசாரணை முடிந்த நிலையில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் சனாதன பேச்சு தொடர்பான வழக்கில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபுவை பதவிநீக்கம் செய்ய அவசியமில்லை என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் தீர்ப்பு வழங்கி உள்ளார். இதன் மூலம் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு, எம்.பி. ஆ.ராசாவுக்கு எதிரான கோவாரண்டோ வழக்குகள் முடித்து வைக்கப்பட்டு உள்ளன.

### சென்னை வடக்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - தேர்தல் முடிவு:

## தலைமைக் கழக அறிவிப்பு

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், சென்னை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.டி.சேகர் அவர்கள், மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவர் தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், சென்னை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, மார்ச் 6 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;*

*சென்னை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு தா.இளங்கோ (எ) தா.இளைய அருணா அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,*

**சென்னை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக,** *திரு.* **தா.இளங்கோ (எ) தா.இளைய அருணா,**

*எண். 1, வீராசாமி வீதி, இராயபுரம், சென்னை 600 013 அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.*

**அண்ணா அறிவாலயம்**
**சென்னை - 18**
**நாள் : 6 - 3 - 2024**

**துரைமுருகன்**
**பொதுச் செயலாளர்**
**தி.மு.க.**





# இனமான பேராசிரியர்

அவர்களின்

## 4 ஆம் ஆண்டு நினைவுநாளில்

அவர்களின் புகழை போற்றுவோம்

நினைவுகளுடன்

**இராணிப்பேட்டைஆர்.காந்தி**

மாவட்ட கழக செயலாளர் ◆ கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் பெருந்தகையார் அவர்களின் 4ம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் இனமான பேராசிரியர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன் கான் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. உடன் மாலை ராஜா, லெட்சுமணன், முருகன், சுரேஷ், தர்மன், கிரிஜா குமார், மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், அண்ணாதுரை, துபாய் சாகுல், செல்வபாபு, மீரான் மைதீன், அனித்தா, நவநீதன், ரேவதி அசோக், தேவிகா, அருணாசலதேவி, சபி அமீர்பாத் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., ஒன்றியக் குழுத் தலைவர்கள் திவ்யா மணிகண்டன், காவேரி சீனித்துரை, போக்குவரத்து துணை ஆணையர் ரவிச்சந்திரன் உள்பட பலர் உள்ளனர்.

## சிவகாசி, கிருஷ்ணகிரி, கடலூர் மாவட்டங்களில்

# அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடங்கள் - உபகரணங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, மார்ச் 8-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சிவகாசி அரசு மருத்துவமனையில் ரூ.32.55 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் - கட்டுதல், கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிய தீவிர சிகிச்சைப் பிரிவு மருத்துவக் கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்கள் - நிறுவுதல் மற்றும் கடலூர் மாவட்டம், சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.18 கோடி மதிப்பீட்டில், 50 படுக்கைகள் கொண்ட அதிதீவிர சிகிச்சை பிரிவுக் கட்டிடம் - கட்டுதல் தொடர்பாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை வருமாறு:-



**சிவகாசியில் கூடுதல் கட்டிடம்**

சிவகாசியின் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்காகவும், தீக்காயங்கள், சுவாச பிரச்சினைகள், மகப்பேறு மற்றும் அவசரகால சிகிச்சை சேவைகளை மேம்படுத்த, சிவகாசி அரசு மருத்துவமனையில் மொத்தம் 70,970 சதுர அடி பரப்பளவில் ரூ.28.80 கோடி செலவில் புதிய தரைத்தளத்துடன் கூடிய 6 மாடி கட்டிடமும், ரூ.3.75 கோடியில் மருத்துவ உபகரணங்களும் ஆக மொத்தம் ரூ.32.55 கோடி செலவில் அவசர சேவைகள், அவசர சிகிச்சைப் பிரிவு, சிறப்பு தாய் சேய் சுகாதார பிரிவு, மேம்பட்ட அறுவை சிகிச்சை வசதிகள், நோயாளி பராமரிப்பு படுக்கைகள் மற்றும் நவீன ஆய்வகம் உள்ளிட்ட அதிநவீன வசதிகள் இடம்பெறும்.

இக்கட்டிடத்தில் தரைத் தளத்தில் புறநோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, அவசர அறுவை சிகிச்சை அரங்கம், கதிரியக்க சேவைகள் மற்றும் மருந்தகம் ஆகிய வசதிகளும், முதல் தளத்தில் தாய் சேய் நல பிரிவு, அனைத்து சேவை பிரிவு, ஆய்வகம், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பிரிவு, பிரசவ அறைகள், மருத்துவ சோதனை பிரிவு, கர்ப்பிணிகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை பிரிவு ஆகிய வசதிகளும், இரண்டாவது தளத்தில் தாய்ப்பால் வங்கி, அறுவை சிகிச்சைக்குப் பின் பராமரிப்புப் பிரிவு, அறுவை சிகிச்சை ஆயத்த அறைகள், கண்காணிப்பு மற்றும் பராமரிப்புப் பிரிவு மற்றும் இரண்டு அறுவை சிகிச்சை அரங்குகள் ஆகிய வசதிகளும், மூன்றாவது தளத்தில் ஆண்களுக்கான அறுவை சிகிச்சைக்குப் பின் பராமரிப்புப் பிரிவு, இரண்டு அறுவை சிகிச்சை அரங்குகள், அறுவை சிகிச்சை ஆயத்த அறைகள் மற்றும் கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு பிரிவு ஆகிய வசதிகளும், நான்காவது தளத்தில் பேறுகால முன் மற்றும் பின் கவனிப்புப் பரிவுகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகிய வசதிகளும், ஐந்தாவது தளத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவு, பெண்கள் பிரிவுகள் - அறைகள் சிகிச்சைக்குப் பின் பராமரிப்பு வார்டு, நோயாளிகள் காத்திருப்பு அறை மற்றும் சமையலறை ஆகிய வசதிகளும், ஆறாவது தளத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவு, ஆண்கள் பிரிவுகள் - அறுவை சிகிச்சைக்குப் பின் பராமரிப்பு பிரிவுகள், நோயாளி காத்திருப்பு பிரிவு மற்றும் சமையலறை ஆகிய வசதிகள் உள்ளது.

மேலும் இந்த புதிய கட்டிடம் சிவகாசி அரசு மருத்துவமனையை மேம்படுத்தி பொதுமக்களுக்கு தேவையான மகப்பேறு மற்றும் அவசரகால மருத்துவத் தேவைகளை வழங்க ஏதுவாக அமையும்.

**கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் புதிய தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம்**

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் புதிய தீவிர சிகிச்சைப் பிரிவு மருத்துவ கட்டிடம் அமைக்க மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆணை வழங்கப்பட்டு ரூ.20 கோடி மதிப்பீட்டில் தேசிய நல வாழ்வு குழும நிதி உதவியுடன் கட்டப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்காக அவசரகால சிகிச்சை சேவைகளை மேம்படுத்த, தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் மொத்தம் 44,930 சதுர அடி பரப்பளவில் ஒரு புதிய தரைத்தளத்துடன் கூடிய 2 மாடி கட்டிடம் ரூ.20 கோடி செலவில் கட்டப்படும். இதில் அவசர சேவைகள், அவசரகால சிகிச்சைப் பிரிவு, மேம்பட்ட அறுவை சிகிச்சை வசதிகள், நோயாளி பராமரிப்பு படுக்கைகள், இரத்த சுத்திகரிப்பு பிரிவு, கதிரியக்க சேவை மற்றும் இரத்த வங்கி உள்ளிட்ட நவீன வசதிகள் இடம்பெறும்.

இக்கட்டிடத்தில் தரைத் தளத்தில் புறநோயாளிகள் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி, கதிரியக்க சேவைகள், தீவிர சிகிச்சை பராமரிப்புப் பிரிவு, மருந்தகம் மற்றும் அவசரகால அறுவை சிகிச்சை அரங்கம் ஆகிய வசதிகளும், முதல் தளத்தில் அறுவை சிகிச்சை அரங்கம், அறுவை சிகிச்சைக்குப் பின் பராமரிப்புப் பிரிவு, அறுவை சிகிச்சை ஆயத்த அறைகள், தீவிர சிகிச்சை பிரிவு, மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கான அறைகள் ஆகிய வசதிகளும், இரண்டாம் தளத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான உள்நோயாளிகள் பிரிவு, தனிமைப்படுத்தப்பட்ட அறை, இரத்த சுத்திகரிப்பு பிரிவு, பகல் நேர கண்காணிப்பு பிரிவு மற்றும் மருத்துவ ஆய்வகம் ஆகிய வசதிகள் உள்ளது. மேலும் இந்த புதிய கட்டிடம் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையை மேம்படுத்தி பொதுமக்களுக்கு தேவையான அவசரகால மருத்துவத் தேவைகளை வழங்க ஏதுவாக அமையும்.

**கடலூர் மாவட்டம், சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 50 படுக்கைகள் வசதிக் கொண்ட அதிதீவிர சிகிச்சை பிரிவுக் கட்டிடம்**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 50 படுக்கைகள் வசதி கொண்ட அதிதீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ.18 கோடி மதிப்பீட்டில் தேசிய நலவாழ்வு குழும நிதி உதவியுடம் கட்டப்படும். இக்கட்டிடம் தரைத்தளத்துடன் கூடிய இரண்டு தளங்களுடன் மொத்தம் 3558.47 சதுர மீட்டர் பரப்பளவில் (38621 சதுர அடி) அமையப்படவுள்ளது.

இக்கட்டிடத்தில் தரைதளத்தில் அவசர மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுகள், மருந்தகம், சி.டி.ஸ்கேன், ஊடுருவும் கதிர்கள், அல்ட்ரா சவுண்ட் கருவிகள், பதிவறை மற்றும் ஆய்வகம் ஆகிய வசதிகளும், முதல் தளத்தில் இருதய தீவிர சிகிச்சை பிரிவு, நரம்பியல் தீவிர சிகிச்சை பிரிவு பெண்களுக்கான தீவிர சிகிச்சை பிரிவு, இசிஜி அறை, மருத்துவ அலுவலர் அறை மற்றும் செவிலியர் அறை ஆகிய வசதிகளும், இரண்டாம் தளத்தில் இரண்டு அவசர அறுவை சிகிச்சை அரங்குகள், ஆண்களுக்கான தீவிர சிகிச்சை பிரிவு, மருத்துவர்கள் மற்றும் செவிலியர் அறை ஆகிய வசதிகள் உள்ளது. மேலும் புற காவல் நிலையம், அவசர ஊர்தி ஓட்டுநர்களுக்கான ஓய்வு அறை, அனைத்து தளங்களிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனி கழிவறை, மின்தூக்கி மற்றும் சாய்வு தளம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பஹ்ரைன் நாட்டில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி - கழகத் தலைவருக்குப் புகழாரம்!

மனாமா (பஹ்ரைன்), மார்ச் 8 -

மார்ச் 1, வெள்ளிக்கிழமை அன்று வளைகுடா நாடான பஹ்ரைன் நாட்டில் தலைநகர் மனாமாவில் உள்ள இந்தியன் கிளப்பில் மக்களின் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் அதன் பொறுப்பாளர் முகமது ஹுசைன் மாலிம் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட திமுக தொண்டர்கள், தோழமை இயக்கத்தின் தோழர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

**திராவிட மாடல் ஆட்சி நாயகர்!**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால சாதனைகளை பற்றி பலரும் பல்வேறு தலைப்புகளில் பேசினார்கள்.

"ஏன் வேண்டும் திராவிட மாடல் ஆட்சி"? என்ற தலைப்பில் ஆலோசனைக் குழு தலைவர் கபீர் அகமது பேசுகையில், எல்லோருக்கும், எல்லாமும் கிடைத்திட இந்த திராவிட மாடல் ஆட்சி கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் தமிழ் நாட்டில் நிரந்திரமாக அமைய வேண்டும் என்று கூறினார்.

"மக்களின் முதல்வர் மு.க. ஸ்டாலின்" என்னும் தலைப்பில் துணைத் தலைவர் கருணாநிதி சண்முகம் பேசுகையில், நாட்டில் எழை எளிய மக்கள் பயன் பெரும் வகையில் புதிய பல திட்டங்களை திமுக அரசு தொடர்ந்து செயல் படுத்துவதாகக் கூறினார். "தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சி " என்ற தலைப்பில் பேசிய உறுப்பினர் சேர்க்கைச் செயலாளர் ஆபீத் அலி. "ஒட்டு மொத்த இந்தியாவின் வளர்ச்சியை விட தமிழ் நாட்டில் பொருளாதார வளர்ச்சி மிக முன்னேறிய நிலையில் உள்ளது" என்று எடுத்துக் கூறி பேசினார்.

தலைமை உரை நிகழ்த்திய பொறுப்பாளர் முகமது ஹுசைன் மாலிம். 2024 நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் வெற்றி பெற வேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். மேலும் சமூக வலைத் தளத்தில் தி.மு.க. தொண்டர்கள் தொடர்ந்து தி.மு.க ஆட்சியின் சாதனைகளை தொடர்ந்து பதிவு செய்வதுடன்.

வெளிநாடுகளில் வாழும் தொண்டர்கள், தாயகத்தில் வாழும் தங்களின் குடும்பத்தினர்களையும், நண்பர்களையும் தொடர்பு கொண்டு தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க கேட்டு கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தி பேசினார்.

வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின், சவூதி அரேபியாவின் துணைப் பொறுப்பாளர் சந்தோஷ் கலந்து கொண்டு, திராவிட மாடல் ஆட்சி மகளிர்களுக்கு மிக பயனுள்ள பல திட்டங்களை தொடர்ந்து செயல் படுத்துவதாகக் கூறினார். குடந்தை ஆரிப் பேசுகையில், "சமூக நீதியை நிலை நாட்டுவதில் முதல்வர் அவர்களின் இந்த திராவிட மாடல் மிகவும் உறுதியாக உள்ளது" என்றார்.

தக்கலை சாம் பேசும்போது, குடும்ப பெண்களுக்கான உரிமைத் தொகை வழங்குவது மூலம், பெண்களின் சுய மரியாதை காக்கப் படுகிறது என்பது எடுத்துக் கூறினார்.

தமிழரசன், சேகர், சோழகர் திருமேனி, அசரி துறை ஆகியோர் தி.மு.க. ஆட்சியின் சாதனைகளைப் பட்டியலிட்டுப் பேசினார்கள். மேலும். இந்தியப் பள்ளியின் ஆட்சி மன்றக் குழுச் செயலாளர் ராஜ பாண்டியன், முத்து தீவு தமிழ் சங்கத்தின் செயலாளர் முகமது பைசல். த.மு.மு.க சார்பில் யூசுப் ராஜகிரி. முஸ்லிம் லீக் சார்பில் பேராசிரியர் சுலைமான். ஆகியோரும் கலந்து கொண்டு கழகத் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

தொழிலாளர் நலத் துறை செயலாளர் மேலப்பூந்தை இஸ்மாயில் வரவேற்க துணைப் பொறுப்பாளர் சுல்தான் இப்ராஹிம் தொகுத்து வழங்க, சமூக சேவைச் செயலாளர் மன்னை பிரபா நன்றி கூறினார்.

## முதல்வர் தொடங்கி வைத்த 'நீங்கள் நலமா' திட்டம் வரவேற்கத்தக்கது!

# இனி பொதுமக்களிடம் இருந்து எட்டா தூரத்தில் யாரும் இல்லை!

## 'தினத்தந்தி' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 8 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த 'நீங்கள் நலமா' திட்டத்தின் மூலம் இனி பொதுமக்களிடம் இருந்து எட்டா தூரத்தில் யாரும் இல்லை என தினத்தந்தி நாளிதழ் தலையங்கத்தில் 6.3.2024 அன்று பாராட்டியுள்ளது.


தலையங்கம்
தினத்தந்தி
6.3.2024
நீங்கள் நலமா?

அத்தலையங்கம் வருமாறு : -

"நீங்கள் நலமா?" என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை இன்று சென்னையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

தமிழ்நாடு அரசு பல திட்டங்களை மக்களுக்காக தீட்டி அறிவித்து வருகிறது. ஆனால், இந்த திட்டத்தின் பயன்களெல்லாம் அடிமட்டத்தில் உள்ள மக்களுக்கும் போய் சேர்வதில்தான் அதன் வெற்றி இருக்கிறது. யாருக்காக இந்த திட்டங்கள் தீட்டப்படுகிறதோ, அவர்களுக்கு சிந்தாமல் சிதறாமல் போய் சேர்ந்தால்தான், அந்த திட்டம் போடப்பட்டதின் நோக்கம்நிறைவேறுவதாகஇருக்கும்.

மறைந்த பிரதமர் ராஜீவ்காந்தி, இந்த பொருள் குறித்து 1985ல் பேசியது இன்றளவும் வழிகாட்டியாக இருக்கிறது. "சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் நலனுக்காக அரசு ஒரு ரூபாய் செலவழித்தால், அது யாருக்கு போய் சேர வேண்டுமோ? அவர்களுக்கு 15 காசுதான் பலனாக கிடைக்கிறது" என்று பிரதமரே கூறியது பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த கருத்து சுப்ரீம் கோர்ட்டிலும் பல ஆண்டுகளுக்கு பிறகு மேற்கோளாக ஒரு வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது நீதிபதி, "இந்த கருத்தை ராஜீவ்காந்தி கூறி 32 ஆண்டுகள் ஆகியும் இன்னும் நிலைமை மாறவில்லை என்பதுபோல தெரிகிறது" என்றார்.

அப்போது மட்டுமல்ல, இப்போதும் இந்தநிலை ஆங்காங்கு நடப்பது கவலை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆதரவற்ற முதியோருக்கு தமிழ்நாடுஅரசு உதவித்தொகையாக மாதம் ரூ.1,000 வழங்கிவருகிறது.

சில புல்லுருவிகள் இந்த தொகையையும் கையாடல் செய்ததாக சமீபத்தில் செய்தி வெளியாகியுள்ளது அதிர்ச்சியை அளிக்கிறது. முதியோர் வங்கிக் கணக்குக்கு போக வேண்டிய இந்த ஆயிரம் ரூபாயை வேறு ஒரு தனி நபர் கணக்குக்கு பரிமாற்றம் செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதுபோல, தமிழ்நாடுஅரசு பல நலத்திட்டங்களை மக்களுக்காக நிறைவேற்றி வருகிறது. ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை அனுப்பப் படுகிறது. புதுமைப்பெண் திட்டத்தில் 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 போய் சேர்கிறது. இதுபோல, பல உதவித்தொகைகள் அனுப்பப் படுகிறது. பல நலத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அரசின் பல திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது மக்களுடன் நேரடி தொடர்புகொண்டு நிறைவேற்ற உத்தரவிட்டுள்ளார்.

'மக்களை தேடி மருத்துவம்', 'இல்லம் தேடி கல்வி', 'உங்கள் ஊரில் கலெக்டர்' என்பது போல, மக்களுக்கான திட்டங்களின் பலன்கள் அவர்களுக்கு போய் சேர்கிறதா? என்பதை உறுதி செய்யும் வகையில், "நீங்கள் நலமா?" என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை இன்று சென்னையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைக்கிறார். நீங்கள் நலமா? திட்டத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்பட அனைத்து அமைச்சர்கள், தலைமை செயலாளர், அனைத்து துறை செயலாளர்கள், துறை தலைவர்கள், மாவட்ட கலெக்டர்கள் என அனைத்து அதிகாரிகளும் பொதுமக்களோடு, அவர்களின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு "நீங்கள் நலமா?" என்று கேட்டு, அரசின் நலத்திட்டங்கள், அரசால் நிறைவேற்றப்படும் சேவைகள் பற்றியும், அது வந்து சேர்கிறதா? என்பது உள்பட கருத்துகளை கேட்கப்போகிறார்கள்.

இது ஒரு நல்ல திட்டம், வரவேற்கத் தகுந்த திட்டம், பாராட்டத்தக்க திட்டம். இனி பொதுமக்களிடம் இருந்து எட்டாதூரத்தில்யாரும்இல்லை. முதல் அமைச்சரே பொதுமக்களிடம் நீங்கள் நலமா? திட்டத்தின் மூலம் நேரடியாக தொடர்புகொள்வது, அரசு அதிகாரிகளையும் தொடர்புகொள்ள வைக்கும். எந்த திட்டத்திலும் முறைகேடு நடக்காமல், அனைத்து ஓட்டைகளையும் அடைக்க வைக்கவும், அனைத்து பலன்களும் மக்களுக்கு நேரடியாக போய் சேரவும் இது உதவியாக இருக்கும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## தென்காசி வடக்கு மாவட்டம்

# சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி வடக்கு மாவட்டம், சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியச் செயலாளர் மாரிமுத்து அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **நா.வெள்ளத்துரை** (1/544, பெருமாள் கோவில் தெரு, கரிவலம்வந்த நல்லூர், தென்காசி மாவட்டம்) அவர்கள் சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

## தேனி தெற்கு மாவட்டம்

# கம்பம் ஒன்றியம், க.புதுப்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

தேனி தெற்கு மாவட்டம், கம்பம் ஒன்றியம், க.புதுப்பட்டி பேரூர்ச் செயலாளர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக, **எம்.டி. எம்.பார்த்திபன்** (89, பஞ்சாயத்து போர்டு தெரு, க.புதுப்பட்டி & அஞ்சல், தேனி மாவட்டம்) அவர்கள் க.புதுப்பட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.3.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்த நாள் விழா 1-03-2024 அன்று துபாய் "லேன்ட்மார்க் ஹோட்டல் பனியாஸ் ஸ்கொயர்" வளாகத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அயலக தமிழர் வாரிய உறுப்பினரும்,அமீரக திமுக பொறுப்பாளருமான எஸ்.எஸ்.மீரான் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்ச்சியை ஏஜிஎம் பைரோஸ்கான் தொகுத்து வழங்கினார்.



வேலூர் மாவட்ட, மாநகர தி.மு.க. அலுவலகத்தில் பேராசிரியர் அவர்களின் 4ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநிலத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி ஆகியோர் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்டக் கழக, மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.


08.03.2024 இன்று காலை 10.00 மணிக்கு
சோளிங்கர் அருள்மிகு
ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி கோவிலில்
50 ஆண்டு கோரிக்கையான கம்பி வட ஊர்தி (ROPE CAR)
அமைக்க அரசின் நிதி ரூ.8.34 கோடி மற்றும்
மாண்புமிகு கைத்தறி, துணிநூல்,
கதர் மற்றும் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர்
இராணிப்பேட்டை ஆர்.காந்தி அவர்களை
தலைவராக கொண்ட 6 உபயதாரர்களின் நன்கொடை
நிதி 12 கோடி ரூபாயில் பக்தர்கள் வசதிக்காக அமைக்கப்பட்ட
அனைத்து அடிப்படை திட்டங்களையும்
காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்திடும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கு நன்றி...நன்றி..நன்றி..
நன்கொடையாளர்கள்
இராணிப்பேட்டை திரு.ஆர்.காந்தி, திருமதி.கமலாகாந்தி
மாண்புமிகு கைத்தறி, துணிநூல், கதர் மற்றும் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர்
திரு.சந்தீப் ஆனந்த் ஜெகத்ரட்சகன், சென்னை.
திரு.ஜெ.வி.ரங்கராஜு, பெங்களூரு
Nagarjuna construction company,Bengaluru
திரு.கே.ரவி, பெங்களூரு (மரிகுப்பம் கிராமம்)
Cresent Hotel,Bengaluru
திரு.எஸ்.என்.வி.எல்.நரசிம்மராஜு பெங்களூரு
Oxford group of educational institutions,Bengaluru
திரு.ஆர்.ரவிச்சந்திரன் பெங்களூரு
Nandhana Hotel, Bengaluru
அன்புடன்... இராணிப்பேட்டை ஆர்.காந்தி
கைத்தறி, துணிநூல், கதர் மற்றும் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர்
மாவட்ட கழக செயலாளர் – இராணிப்பேட்டை மாவட்ட திமுக

## குற்றவாளிக்கு பரோல் – குட்டுவைத்த நீதிமன்றம்!

ஹரியானாவைத் தலைமையிடமாகக் கொண்டது தேரா சச்சா சவுதா அமைப்பு. இந்த அமைப்பின் தலைவர் குர்மீத் ராம் ரஹீம். இந்த சாமியார், தனது ஆசிரமத்தில் 2 பெண் சீடர்களைப் பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துக்காக, சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார். இதற்கிடையில், கடந்த 2002–ஆம் ஆண்டு அவரின் ஆசிரம மேலாளர் ரஞ்சித் சிங் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கிலும் குர்மித் ராம் ரஹீமிற்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.

கொலை, வன்புணர்வு, வன்முறைக் குற்றங்களுக்காக 20 வருடம் சிறைத் தண்டனை பெற்ற நிலையில், குர்மீத் ராம் ரஹீமிற்கு அடிக்கடி பரோல் வழங்கப்படுவது சர்ச்சையாக உருவெடுத்துள்ளது. அதாவது, கடந்த ஜனவரி மாதம் 7–வது முறையாக குர்மீத் ரஹீமிற்கு 50 நாட்கள் பரோல் விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 10 மாதங்களில் 7–வது முறையாக பரோல் வழங்கப்பட்டது. குர்மித் ராம் ரஹீமிற்கு அடிக்கடி பரோல் வழங்கப்படுவது தொடர்பான வழக்கு பஞ்சாப் ஹரியானா உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், பா.ஜ.க ஆளும் ஹரியானா அரசைக் கடுமையாகச் சாடியுள்ளது. மார்ச் 10–ஆம் தேதிக்குள் குர்மித் ராம் ரஹீம் கோர்ட்டில் சரண்டர் ஆக வேண்டும் என்றும், அடுத்த முறை பரோல் வழங்கப்படும் முன், மாநில அரசு நீதிமன்றத்தில் அனுமதி பெற வேண்டும் எனவும் கூறியுள்ளது. பா.ஜ.க ஆதரிக்கும் சாமியார்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதற்கு இது ஒரு சரியான உதாரணம்.

## ஃப்ளாஷ்பேக்



பொன்.பனகல் பொன்னையா



### வேர்களுக்குக் கௌரவம்!

1991-ஆம் ஆண்டு ஜனவரியில் தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்ட போது, தொண்டர்கள் அடைந்த மனவேதனைக்கு அளவில்லை. ஆனால், அந்தச் சூழ்நிலையிலும் கலைஞர் எதையும் தாங்கும் இதயம் என்பதற்கு ஏற்ப, மார்ச் 9–ஆம் தேதி, கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் ஐந்து நூல்கள் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார். மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் நடந்த அந்த விழாவில், கலைஞரின் கரத்தால் புதுக் கவிஞர்கள் 25 பேர்களுக்கு சால்வை அணிவித்து சிறப்புச் செய்தார். நானும் அதில் ஒருவனாக இடம்பெற்றேன் என்பது, என் வாழ்வில் மறையாத கல்வெட்டுச் சித்திரம்.

**–கவிஞர்.பொன்.பனகல் பொன்னையா, மாவட்டத் துணைத் தலைவர், பகுத்தறிவாளர் கழகம், மதுரை புறநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கண் வலி தீர்ந்த நிம்மதி!

1971-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் கண் மருத்துவச் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றார் கலைஞர். நவம்பர் 14-ஆம் தேதி, பால்டிமோர் நகரில், ஜான் ஹாப்கின்ஸ் மருத்துவமனையில் அவருக்குக் கண்ணில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. விபத்தில் பாதிக்கப்பட்டு, 17 ஆண்டுகளாக வாட்டி வதைத்த கண் வலி அகன்றது என்கிற நிம்மதி உருவானது. மருத்துவ ஓய்வுக்குப் பின் நவம்பர் 25-ஆம் தேதி நியூயார்க் சென்ற கலைஞர், அங்கு நியூயார்க் வாழ் தமிழர்கள் ஒன்று சேர்ந்து அமைத்த தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்தார்.

## சீரணி → இளைஞர் அணி

1

**ந.வினோத்குமார்**




# கிளம்பிற்று காண்..!

*1949-இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியபோது, அவர் உட்பட கட்சியில் இருந்தவர்கள் எல்லோருமே இளைஞர்கள்தான். தந்தை பெரியாரிடமிருந்து சமூக, அரசியல் பாடங்களைக் கற்றுக்கொண்டு திராவிடர் கழகத்தில் இருந்து கிளம்பிய அந்தப் புதிய படை, அடுத்த 60 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தை ஏறுமுகமாக மாற்றியது.*

*ஒரு தலைமுறை என்பது சராசரியாக 33 ஆண்டுகள். கட்சி தொடங்கி சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு, புதிய தலைமுறை பிறந்தது. அதுதான் இளைஞர் அணி. கழகத்தின் தளக் கர்த்தர்களிடமிருந்து பெற்ற அனுபவங்களைக் கொண்டு வளர்ந்த அந்தத் தலைமுறை வீரர்கள், இன்று 'திராவிட மாடல்' ஆட்சியில் தலைவர்களாக வலம் வருகிறார்கள். ஆட்சிக்கும் கட்சிக்கும் தங்கள் உழைப்பால், சிந்தனையால், களப்பணிகளால் வளம் சேர்க்கிறார்கள்.*

*இளைஞர் அணி தொடங்கப்பட்ட அடுத்த 30 ஆண்டுகளில், இப்போது புதுவெள்ளம் பாய்ந்து வருகிறது. இதுகாறும் கல்வி, மருத்துவம், தொழில் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வந்த கழக அரசு, இப்போது விளையாட்டுக்கும் அதிக முக்கியத்துவத்தைத் தந்து வருகிறது. அப்படிப் பார்த்தால், தலைமுறை தாண்டிப் பயணிக்கும் ஒரு கட்சியில், **'இது புதிய தலைமுறைக்கான ஆட்சி'** என்று சொன்னால் அது மிகையில்லை.*

*இப்படிக் கழகம் எனும் நெம்புகோலால், நூற்றாண்டு கடந்த திராவிட இயக்கத்தை முன் நகர்த்திச் செல்கிற இளைய சக்தியைக் குறித்துப் பேசும் தொடர்தான்... சீரணி முதல் இளைஞர் அணி வரை..!*

*தி.மு.க. தொடங்கப்பட்ட போது, அது இந்தியாவில் இளைஞர்களால் தொடங்கப்பட்ட கட்சியாக இருந்தது. இளைஞர் அணி தொடங்கப்பட்ட போது, இந்தியாவிலேயே இளைஞர்களுக்கென்று தனிப் பிரிவைக் கொண்டிருக்கும் ஒரே கட்சி, முதல் கட்சியாக தி.மு.க. திகழ்ந்தது. திகழ்கிறது.*

*தமிழ்நாட்டின் நலனுக்கு தி.மு.க. என்ற இயக்கம் சார்ந்து, கழகத்துக்கு உள்ளும் புறமுமாக நின்று பணியாற்றிய இளைஞர்கள் எத்தனையோ பேர். போலவே இளைஞர்களின் நலனுக்காக கட்சியிலிருந்தும் ஆட்சியிலிருந்தும் கழகம் முன்னெடுத்த திட்டங்கள் நிறைய. இந்த இரண்டு புள்ளிகளையும் ஒருங்கே இணைக்கிற முயற்சியாகவும் இந்தத் தொடர் வருகிறது.*

**கழகம் எனும் நெம்புகோலால், நூற்றாண்டு கடந்த திராவிட இயக்கத்தை முன் நகர்த்திச் செல்கிற இளைய சக்தியைக் குறித்துப் பேசும் தொடர்தான்... சீரணி முதல் இளைஞர் அணி வரை..!**

*மாநில உரிமை மீட்பை மையப்படுத்தி நடத்தப்பட்ட இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு மூலம் இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கும் இந்தச் சூழலில், கழகத்தால் இளைஞர்களுக்கும், இளைஞர்களால் கழகத்துக்கும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகத்துக்கும் கிடைத்த நன்மைகளைப் பட்டியலிடும் இந்தத் தொடர் வருவது, சாலப் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், இது இளைஞர் உலகம். அறிவார்ந்த காலம்!*

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

1

**கோவி.லெனின்**

**"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்..."**

# கழகமும் கோயிலும்!



***தி.மு.க.வை இந்துக்களுக்கு எதிரான கட்சி என்று பா.ஜ.க.வும் அதன் துணை அமைப்புகளும் தொடர்ந்து, குற்றம்சாட்டி வருவதுடன், சிறுபான்மை மக்களின் மசூதி, தேவாலயங்களுக்கு நிதி ஒதுக்கப்படுவது போல இந்துக் கோயில்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை என்றும் சொல்கிறார்களே? தி.மு.க இந்துக்களை வஞ்சிக்கிறதா?***

*எந்த மதத்தினரையும் ஏற்றத்தாழ்வுடன் நடத்தக்கூடாது என்பதுதான் தி.மு.க.வின் அரசியல் கொள்கை. அதைத்தான் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் வாசகம் மூலம் விளக்கினார் பேரறிஞர் அண்ணா. "கோவில் கூடாது என்பதல்ல, அது கொடியவர்களின் கூடாரமாகிவிடக்கூடாது" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். எனினும், தி.மு.க.வை இந்துக்களின் விரோதியாக்கி அரசியல் இலாபம் பார்க்கலாம் என அன்று முதல் இன்று வரை மதவெறி சக்திகள் முயன்று பார்த்து தொடர்ச்சியாகத் தோல்வியடைந்து கொண்டே இருக்கின்றன. காரணம், தமிழ்நாட்டில் வாழ்கின்ற இந்து மதத்தைச் சேர்ந்த மக்களுக்கு தி.மு.க.தான் தங்களின் பாதுகாப்பு என்பது நன்றாகத் தெரியும்.*

*1967 -இல் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பேரறிஞர் அண்ணா பொறுப்பேற்றபோது, "பிள்ளையார் சதுர்த்திக்கான விடுமுறையை தி.மு.க. அரசு ரத்து செய்யப் போகிறது" என்று மதவெறி அமைப்பினர் வதந்தி பரப்பினர். ஆனால், எந்த ஒரு மதப் பண்டிகையையும் அண்ணாவின் அரசு தடுக்கவுமில்லை, அதற்கான விடுமுறையை ரத்து செய்யவுமில்லை. அறிஞர் அண்ணாவின் மறைவைத் தொடர்ந்து 1969-இல் முதலமைச்சரான கலைஞர், பல ஆண்டுகளாக ஓடாமல் இருந்த திருவாரூர் தியாகராச சாமி திருக்கோயில் தேரை நவீன முறையில் வடிவமைத்து சிறப்பாக ஓட்டிக்காட்டினார். சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் தெப்பக் குளத்தை தூர்வாரி சுத்தம் செய்தார். தமிழ்நாட்டில் உள்ள பல திருக்கோயில்கள் புனரமைக்கப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்பட்டன கலைஞரின் ஆட்சிக்காலத்தில்தான். கிராமப் பூசாரிகள் நலவாரியம் அமைத்தும், திருக்கோயில்களில் ஒரு கால பூசைக்கான நிதியளித்தும் ஆன்மிக அன்பர்களின் விருப்பங்களை நிறைவேற்றியது தி.மு.க ஆட்சி.*

*அதே வழியில்தான் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசும் செயலாற்றி வருகிறது. 2021-முதல் கடந்த மூன்று ஆண்டுகளில் 1,290 திருக்கோயில்களுக்குத் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. ஆயிரம் ஆண்டுகால பழமை கொண்ட பாரம்பரியம் மிக்க கோயில்களைப் புனரமைக்க இந்த நிதியாண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பழனி, திருவண்ணாமலை, திருவரங்கம், சமயபுரம் உள்ளிட்ட 11 திருக்கோயில்களில் பக்தர்களுக்கு நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருந்த 5,718 கோடி ரூபாய் மதிப்புள்ள 6,071 ஏக்கர் கோயில் நிலங்களை மீட்டுள்ளது திராவிட மாடல் அரசு. அன்னைத் தமிழில் அர்ச்சனை செய்வதற்கானத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, இந்து மதத்தில் உள்ள அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதற்கான அரசாணை வழங்கி, பணி நியமனம் செய்திருப்பதும் திராவிட மாடல் அரசுதான்.*

*தி.மு.க ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட சமூக நீதிக் கொள்கையின் வாயிலாக, 69% இடஒதுக்கீட்டில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கான 3.5% போக மீதமுள்ள 65.5% முழுவதும் இந்து சமுதாயத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட–மிக பிற்படுத்தப்பட்ட–பட்டியல் இன–பழங்குடி மக்களுக்கான கல்வியையும் வேலைவாய்ப்பையும் வழங்கியுள்ளது.*

*இந்து மக்களின் ஆன்மிக நம்பிக்கைகளைப் பாதுகாத்து, அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் துணை நிற்கின்ற ஒரே இயக்கம் தி.மு.க.தான். மதவெறி அரசியல் தமிழ்நாட்டில் எடுபடாது என்பதால் தி.மு.க. மீது வதந்தியைப் பரப்பி மூக்குடைபடுவதே பா.ஜ.க.வுக்கும் அதன் நேரடி–மறைமுக ஆதரவு சக்திகளுக்கும் வழக்கமாக இருக்கிறது.*

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

411

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131